2014, December 16 - 31

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014

22 DEC 2014

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மைத்திரிபால ஏன் உடன்பாட்டுக்கு வர முடியாது?

ரணில் விக்கிரமசிங்க இவ்வருடத்தின் முக்கிய பிரமுகர்..!

வேண்டியது வாக்குகள், வேண்டாதது வாக்குவங்கி

ஜனநாயகத்தை நோக்கிய துயர்மிகு நெடும் பயணம்

பிரித்தானியாவில் சூடுபிடிக்கும் குடிவரவுப் பிரச்சினை

இலங்கையில் சீனா நிர்மாணிக்கும் துறைமுகங்களால் கவலைப்படாத ஜப்பான்

மத்திய கிழக்கின் எதிர்கால நிலப்படத்தை வரையப் போகிறவர்கள் யார்?

எச்சரிக்கை சாமியார்கள்...!

தி.மு.க. உட்கட்சித் தேர்தலில் பரபரப்பு

## தமிழரின் வாக்குகள் மீண்டும் ஒரு 2005?



| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA..............IN₹ | 50.00 | CANADA........CAN$ | 10.00 | USA..........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 100.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK............GB£ | 5.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS.............CHF | 10.00 | EUROPE..EU€ | 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS





**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குறைந்தபட்ச வாக்குறுதிகளை அளிப்பவருக்கு வாக்களியுங்கள். ஏனென்றால் அவர் குறைந்தபட்ச ஏமாற்றத்தையே தருவார்.


- பேர்னாட் பரூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2014, டிசம்பர் 16 - 31
பக்கங்கள் - 68






**11** ஜனாதிபதி தேர்தலும் தமிழர்களின் திரிசங்கு நிலையும்

**15** தமிழ் வாக்குகள்; மீண்டும் ஒரு 2005?

**19** தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் மைத்திரிபால ஏன் உடன்பாட்டுக்கு வரமுடியாது?

**24** ரணில் விக்கிரமசிங்க இவ்வருடத்தின் முக்கிய பிரமுகர்

**28** வேண்டியது வாக்குகள், வேண்டாதது வாக்கு வங்கி

**31** ஜனநாயகத்தை நோக்கிய துயர்மிகு நெடும் பயணம்

**34** இலங்கையில் சீனா நிர்மாணிக்கும் துறைமுகங்களைப்பற்றி ஜப்பானுக்கு கவலையில்லை

**38** மத்திய கிழக்கின் எதிர்கால நிலப்படத்தை வரையப்போகிறவர்கள் யார்?

**41** 2015 பிரித்தானியா பொதுத்தேர்தல் சூடு பிடிக்கும் குடிவரவுப் பிரச்சினை

**44** எச்சரிக்கை சாமியார்கள்...!

**50** தி.மு.க. உட்கட்சித்தேர்தலில் பரபரப்பு
















*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# ஜனாதிபதி தேர்தல், தமிழர்கள், முஸ்லிம்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறார்கள் என்பது குறித்து சுறுசுறுப்பான வாதப் பிரதிவாதங்கள் மூண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இத்தடவை தேர்தலில் சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகள் தீர்க்கமானதொரு பங்கை வகிக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்ற போதிலும் கூட, இரு பிரதான வேட்பாளர்களுமே தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் ஆதரவைத் திரட்டுவதில் அக்கறையற்ற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவும் பெரும்பான்மையினத்தவர்களான சிங்கள பௌத்தர்கள் மத்தியில் சாத்தியமானளவு கூடுதல் வாக்குகளைப் பெறுவதிலேயே அக்கறைகொண்டு செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்காக அவர்கள் சிறுபான்மையினத்தவர்களின் நியாயபூர்வமான அரசியல் உரிமைகளுக்கு அனுதாபமான எந்தக் கருத்தையும் நினையாப்பிரகாரமேனும் கூறிவிடக் கூடாது என்பதில் வெகு 'நிதானமாக' இருக்கிறார்கள்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கம் கடந்த ஒன்பது வருடகாலத்திலும் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் கடைப்பிடித்து வந்திருக்கக்கூடிய அணுகுமுறைகள் காரணமாக தமிழ் மக்கள் எத்தகைய மனநிலையில் இருக்கிறார்கள் என்பதும் கடந்தகாலத் தேர்தல்களில் அவர்களின் வாக்களிப்பு எந்தவகையாக அமைந்தது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம். உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு 2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத்தளபதி , சரத்பொன்சேகாவுக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் மாத்திரமல்ல மலையகத்தில் வாழும் தமிழ் மக்களும் அதிகப் பெரும்பான்மையாக வாக்களித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் மீதான தமிழர்களின் இந்த வெறுப்புணர்வு காரணமாக, தனக்கு வாக்களிப்பதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்று மைத்திரிபால சிறிசேன நினைக்கிறார்போலும். முஸ்லிம் மக்களின் நிலைமையும் கூட அத்தகையதேயாகும். முஸ்லிம் தலைவர்களில் அனேகமாக முழுப்பேருமே ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகிக்கின்ற போதிலும் கூட, அந்தச் சமூகத்துக்கு எதிராக கடந்த சிலவருடங்களாக சிங்கள - பௌத்த தீவிரவாதச் சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் குரோதப் பிரசாரங்கள் மற்றும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் அரசாங்கத் தலைவர்கள் கடைப்பிடித்த மெத்தனமான போக்குக் காரணமாக நாடுபூராகவுமுள்ள முஸ்லிம் மக்கள் கடும் அதிருப்திக்குள்ளாகியிருக்கிறார்கள். முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவொன்றை எடுப்பதில் தடுமாறிக் கொண்டிருந்தாலும், முஸ்லிம் மக்கள் தங்களது முடிவை எப்போதோ எடுத்துவிட்டார்கள் என்று அவர்கள் மத்தியில் உள்ள அரசியல்வாதிகள் சிலர் வெளிப்படையாகவே கூறியிருந்தார்கள். அதனால், முஸ்லிம் மக்களும் தனக்கே பெருமளவில் வாக்களிப்பார்கள் என்று எதிரணியின் பொதுவேட்பாளர் நம்பிக்கை கொண்டிருக்கிறார் போலும்.

இந்த நிலைவரங்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தமிழ் மக்களினதோ, முஸ்லிம் மக்களினதோ அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்கான தீர்வு அணுகுமுறைகள் குறித்து இரு பிரதான வேட்பாளர்களுமே சிறிதேனும் அக்கறை காட்டுவதற்கான வாய்ப்பு இல்லையென்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. தங்களது பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பதில் குறைந்தபட்ச பற்றுறுதியையேனும் அதுவும் தேர்தல் காலகட்டத்தில் கூட காண்பிக்கத் தயாரில்லாத இருவேட்பாளர்களில் எந்த ஒருவருக்கும் வாக்களிப்பதில் என்ன பயன் ஏற்படப் போகின்றது என்று தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் நினைக்கத் தலைப்பட்டால், நிலைமை என்னாகும்? அவர்கள் தேர்தலில் பங்கேற்பதில் அக்கறை காட்டாமல் போகக்கூடும். இதற்குப் பொறுப்பு ஜனாதிபதி ராஜபக்ஷவும் எதிரணியின் பொது வேட்பாளரும் தென்னிலங்கை அரசியல் சமுதாயமுமே தவிர வேறுயாருமாக இருக்க முடியாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள்













### தமிழ் ஊடகத்துறையில் ஒரு பாய்ச்சல்

காத்திரமான உள்நாட்டு,வெளிநாட்டு அரசியல் கட்டுரைகள் மற்றும் பல விடயங்களைக் கொண்டுவருகின்ற சமகாலம் தமிழ் ஊடகவியல்துறையில் ஒரு பாய்ச்சல்தான். உலகளாவிய அரசியல், பொருளாதார மாற்றங்களை சமகாலத்தில் தமிழில் வாசிக்க முடியுமாயிருப்பது விதந்து குறிப்பிடத்தக்கது. உள் நாட்டு அரசியலை சிங்களதேசியத்தின் அல்லது பெரும்பா லான சிங்களமக்களின் இனச்சிக்கல் தொடர்பான மனஒட்டங் களை குறிப்பாக சகோதர இனத்தைச்சார்ந்த ஊடகவியலாளர் கள், பேராசிரியர்கள் கருத்துருவாக்கிகள் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்கள்.

அவர்களின் ஒப்பீட்டளவிலான முற்போக்கான சிந்தனை களை, சந்தேகங்களை தமிழ்வாசகர்களுக்கு சமகாலம் வழங்கு வது நேர்மையான ஊடகமொன்றின் பண்பை வலுப்படுத்துவ தாகவும் இருக்கின்ற அதேவேளை, இனச்சிக்கல் தொடர்பான பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு தமிழ்த் தேசியம் சார்ந்த ஊடகவியலாளர்கள், கருத்துருவாக்கிகளின் சிங்களமொழி பெயர்ப்புகளை வாசித்துக்கொள்வதற்கு ஒரு வெற்றிடம் தான் இருக்கின்றது.

இவ்விரு தேசிய எண்ணக்கருக்கள், சிந்தனைகளின் பரிமாற் றம் நிகழ்வதில் இலங்கையின் இனச்சிக்கலுக்கு ஊடகங்களி னது பங்களிப்பு அல்லது வகிபாகம் மிகமிக முக்கியமானது.

சமகாலத்தை அரசியலுக்குள் மட்டும் தேங்கவிடாது இன்னும் பரந்த வாசகர்களை நோக்கிய பாய்ச்சலுக்கு தயாராவதை அதன் சினிமாப்பக்கம் மூலம் தெளிவாக உணரக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக அ.யேசுராசா அவர்களின் 'இலங்கையில் நடந்த முதலா வது உலகத்திரைப்படவிழா 2014' பற்றிய விமர்சனம் சினிமா இரசிகர்கள், ஆர்வலர் கட்கு உற்சாகம் தருவதும் ஆர்வத்தைத் தூண்டுவதுமாகும். (இத்திரைப்படவிழா பற் றிய செய்திகளை தமிழ் தினசரிகள் வழமை போல் கண்டுகொள்ளாதது கவலைக்குரி யது)

காட்சிப்படுத்தப்பட்ட பல திரைப்படங்க ளைப் பற்றிய குறிப்புகள், இரசனைக்குறிப்பு களுக்குமப்பால் அத்திரைப்படவிழா பற்றிய பின்னணிக் குறிப்புகளையும் சேர்த்திருப்பது சுவாரசியமானது.

சமகாலம் (நவ 16-30) இதழில் 'அப்சரஸ்' திரைப்படம் பற்றி விமர்சனம் எழுதியவர் 'அடிக்கடிவரும் உடலுறவுக்காட்சிகள் கூட விரசமில்லாமல் கலைத்துவம் மிளிரப் படமாக்கப்பட்டுள்ளன' என்கிறார். உண்மை யில் காட்சிருபத்தில், சினிமாமொழியில் அக்காட்சிகள் மிகுந்த விரசத்தையும், ஆபா சத்தையும் கொண்டவை. அதைவிட அக் காட்சிகளுக்கான பின்னணிஇசை மிகுந்த வக்கிரமானதும் ஆபாசமானதுமாகும். விமர் சகர் கூறுவது அபத்தமானது.

சமகாலத்தின் இலக்கிய பக்கங்களுக்குரிய வேளை வந்துவிட்டது. குறைந்தபட்சம் கவி தைகளுக்கு இரண்டு பக்கங்களையாவது ஒதுக்க ஆசிரியர் குழுவினர் முயற்சி எடுப் பார்கள் என நம்புகின்றோம். இன்னும்

### வாக்குமூலம்

வாக்குமூலம் பகுதியில் உள்நாட்டு அர சியல்வாதிகள் தெரிவிக்கின்ற கவனத்தை ஈர்க்கும் கூற்றுகளே வெளியிடப்படுகின் றன. வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், பிரபலங்களின் சுவாரஸ்யமான கூற்று களையும் தெரிந்தெடுத்து வாசகர்களு க்குத் தந்தால் நன்றாக இருக்கும்.

அபர்ணா கதிரேசன்,
நாவலப்பிட்டி.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படங்களுக்கு என ஒரு பக்கத்தை ஒதுக்கினால் என்ன? சமகாலத்தின் அச்சுப்பதிப்பின் செம்மை, புகைப்படங்களுக்கான பக்கம் பலராலும் சிலாகிக்கப்படும் என்ற நம்பிக்கையை எமக்குத்தந்திருக்கிறது.

சி.சித்திராதரன், பருத்தித்துறை.

## 'சார்க்'கும் சீனாவும்

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தில் (சார்க்) உறுப்புரிமை பெறுவதற்கு சீனா மேற்கொள்ளும் முயற்சி குறித்து கடந்த சமகாலம் இதழில்விரிவான செய்தி ஆய்வு ஒன்று பிரசுரமாகியிருந்தது. ஏற்கனவே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பிரச்சினைகள் காரணமாக தெற்காசிய நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்த முடியாமல் சார்க் அமைப்பு தடுமாறிக் கொண்டிருக்கிறது. இந்த இலட்சணத்தில் சீனாவும் அதில் உறுப்புரிமையைப் பெற்றால் மேலும் இருதரப்பு பிரச்சினைகளின் விளைவாக சார்க்கினால் எந்தவித உருப்படியான காரியத்தையும் செய்ய முடியாமற் போகின்ற நிலைமையே தோன்றும் என்பதிற் சந்தேகமில்லை.

சார்க் அமைப்பில் இந்தியாவின் செல்வாக்கைக் குறைக்கும் ஒரு தந்திரோபாயமாகவே சில உறுப்பு நாடுகள் குறிப்பாக பாகிஸ்தானும் நேபாளமும் பங்களாதேஷும் சீனாவையும் அதில் சேர்த்துக்கொள்ள அக்கறை காட்டுகின்றன என்பதிற் சந்தேகமில்லை. சீனா உறுப்புரிமை பெறுவதை தடுப்பதற்கு இந்தியா அவ்வப்போது ஒவ்வொரு சாக்குப்போக்கைச் சொல்லிக்கொண்டேயிருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

சிவரூபன் உமாதேவி, தெல்லிப்பழை.

## நிவர்த்திக்கவேண்டிய குறைபாடு

மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தை விட்டு வெளியேறி எதிரணியின் பொதுவேட்பாளராக தன்னை அறிவித்துக்கொண்டதன் பின்னரான அரசியல் நிகழ்வுப் போக்குகள் குறித்து மிகவும் விரிவான முறையில் பல அரசியல் ஆய்வாளர்களின் கருத்துகளை சங்கிலித்தொடர்போல கடந்த சமகாலம் இதழ் அதன் வாசகர்களுக்கு தந்தது. பலவிடயங்களை அந்தக் கட்டுரைகள் மூலமாக அறிந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. பாராட்டுகள்.

ஆனால், தமிழ்த்தேசிய அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஆய்வாளர்களின் கருத்துகள் சமகாலம் இதழிலில் பெரும்பாலும் பிரசுரிக்கப்படுவதாக இல்லை. மேலும், மலையகத் தமிழர்களின் அரசியல் நிலைவரங்கள் குறித்த ஆய்வுகளும் அறவே இல்லை. இக்குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு ஆசிரியர் குழு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வேலுப்பிள்ளை கிருபாகரன், சுன்னாகம்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 12
**2014, டிசம்பர் 16 - 31**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

தேசங்கள் கவிஞர்களின் இதயங்களில் இருந்து பிறந்து செழிப்புறுகின்றன. அவை அரசியல்வாதிகளின் கைகளில் மரணத்தைத் தழுவுகின்றன.

- முகமட் இக்பால்



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

இறுதியாக நான் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டத்தில் அப்பங்களைச் சாப்பிட்டுவிட்டு நான் அரசாங்கத்தைவிட்டு வெளியே றியதாக ராஜபக்ஷாக்கள் என்னைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். நான் என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்? தரப்படுகிற உணவை வீசியெறிவதா? அநாகரிகமான ஒரு பேர்வழிதான் அவ்வாறு செய்திருப்பான்.



மைத்திரிபால சிறிசேன

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்கான பெருமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவும் உரிமை கோருகின்றனர். ஜெனரல் சரத்பொன்சேகா போன்றவர்கள் போர்க்களத்தில் முன்னரங்கத்தில் நின்று தலைமை தாங்கி படைவீரர்களை வழிநடத்திக் கொண்டிருந்தபோது கோதாபய அமெரிக்காவுக்கு ஓடிச் சென்று 20 வருடங்களாக சௌகரியமான வாழ்க்கை வாழ்ந்தார் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள்.




முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

பல சக்திகள் ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்படுகின்றன. ஈழம் கோரிக்கையை முன்வைக்காமல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிரணியின் பொதுவேட்பாளரின் மேடையில் ஏறும் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக அவர்கள் சமஷ்டி பற்றிப் பேசுவார்கள். அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் ஆதரவைப் பெற்ற எதிரணியை ஆதரிப்பதா அல்லது எமது நாட்டைப்பாதுகாத்த ஜனாதிபதியை ஆதரிப்பதா என்பதை தீர்மானிக்க வேண்டியது மக்களின் பொறுப்பு.



விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவைப் பயன்படுத்துகிறார். 30 வருட கால யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்தவருக்கு இந்த நாட்டு மக்கள் விசுவாசமாக இருக்கிறார்களா இல்லையா என்பதை பரீட்சிப்பதற்கான களமாக 2015 ஜனாதிபதி தேர்தல் அமையும்.



பொதுபலசேனா பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர்

பசில் ராஜபக்ஷ மகாவலி அபிவிருத்தி திட்டத்தில் எனது தந்தையாரின் பொதுசன தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றினார். அவரை தந்தையார் பணிக்கு அமர்த்தும்வரை அவரிடம் 10 ஆயிரம் ரூபா கூட இருக்கவில்லை. 8 வருடங்களாக அந்த வேலையில் இருந்த பசில் ஐக்கிய தேசியக்கட்சிக்காக தீவிரமாக பிரசாரம் செய்தார். அதையெல்லாம் அவர் இன்று மறந்துவிட்டார்.



நவீன் திசாநாயக்க

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விட்டு நான் போகமாட்டேன் என்று சில தினங்களுக்கு முன்னர் நான் ஊடகங்களுக்குக் கூறியது உண்மைதான். அவ்வாறு பொய் கூறியதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். எனது சொந்தப்பாதுகாப்புக் கருதியே நான் அவ்வாறு நடந்து கொள்ளவேண்டியேற்பட்டது.



மேல்மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு வெற்றி கிடைக்கும் என்பதில் நாம் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறோம். சோதிடர்களும் அவ்வாறுதான் எதிரணிக்கே வெற்றிகிட்டும் என்று கூறுகிறார்கள். நான் சோதிடத்தை பெரிதாக நம்புகிற ஒரு ஆள் அல்ல. அது ஒரு விஞ்ஞானம். ஆனால், நான் மக்களின் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்மானத்துக்கு வருவதையே விரும்புகிறேன். மக்களுடன் நான் பேசும் போது மாற்றத்துக்கான அவர்களின் வேட்கையை புரிந்து கொள்ள என்னால் முடிகிறது.



ஐக்கியதேசியக் கட்சி தலைமைத்துவ பேரவை தலைவர் கருஜெயசூரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் அமெரிக்க செனட் புலனாய்வுக்குழுவின் அறிக்கை



நியூயோர்க்கிலும் வாஷிங்டனிலும் 2001 செப்டெம்பர் 11 மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பிறகு பயங்கரவாதச் சந்தேகநபர்களை விசாரணை செய்வதற்கு அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனம் (CIA) பயன்படுத்திய வழிமுறைகள் குறித்து புலனாய்வு விவகாரங்களுக்கான செனட் சபைக்குழு டிசம்பர் 9 அறிக்கையொன்றைச் சமர்ப்பித்ததையடுத்து அமெரிக்க அரசியல் சமுதாயம் பெரும் குழப்ப நிலைக்குள்ளாகியிருக்கிறது. மனித உரிமைகளைப் பேணிக்காப்பது தொடர்பில் உலகிற்கு உபதேசம் செய்கின்ற அமெரிக்கா அதன் சொந்தச் செயற்பாடுகளால் பெரும் அவமதிப்புக்குள்ளாகியிருக்கிறது.


ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் கியூபாவில் உள்ள குவாண்டனாமோ குடாவிலும் அமைந்திருந்த தடுப்புக்



காவல் முகாம்களில் கைதிகள் கொடூரமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டது குறித்து வெள்ளை மாளிகைக்கும் அமெரிக்க மக்களுக்கும் சி.ஐ.ஏ. பொய் கூறி தவறாக வழிநடத்தியிருப்பதாகவும் முன்னர் ஒப்புக்கொள்ளப்பட்டதைக் காட்டிலும் கூடுதலான அளவுக்கு பயங்கரவாத சந்தேகநபர்கள் கொடூரமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் செனட் அறிக்கை குற்றஞ்சாட்டியிருக்கிறது. இந்தக் கொடூரச் செயல்களுக்குப் பொறுப்பான அமெரிக்க அதிகாரிகள் நீதியின்முன் நிறுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் வலுவடைந்திருக்கின்றன.

செனட் புலனாய்வுக்குழு 5 வருடகாலமாக மேற்கொண்ட விசாரணைகளின் போது சி.ஐ.ஏ.யின் 63 இலட்சம் ஆவணங்களைப் பரிசீலனை செய்திருந்தது. ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஜனாதிபதியாக இருந்தபோது 2002-2006 காலகட்டத்தில் உலகின் பல பாகங்களிலும் இருந்த இரகசிய தடுப்பு முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டிருந்த அல்- குவைதா இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் ஏனைய பயங்கரவாதச் சந்தேகநபர்களும் படுமோசமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும்கூட, எந்தவொரு பயங்கரவாதச் சதித்திட்டம் குறித்தும் அவர்களிடமிருந்து சி.ஐ.ஏ. யினால் தகவல்களைப் பெறமுடியவில்லை என்று செனட் குழு அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

செனட்குழுவின் அறிக்கை 6 ஆயிரம் பக்கங்களைக் கொண்டது. அது இன்னமும் வெளியிடப்படவில்லை. 400க்கும் அதிகமான பக்கங்களைக்




செனட் புலனாய்வுக்குழுவின் தலைவி டயான் ஃபீன்ஸ்ரீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்தி ஆய்வு**

கொண்ட சுருக்க அறிக்கையே டிசம்பர் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்த சுருக்க அறிக்கையை வெளியிட்டு வைத்து செனட் சபையில் உரையாற்றிய செனட் புலனாய்வுக் குழுவின் தலைவியான டயான்ஃ பீன்ஸ்ரீன் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்ட பல சம்பவங்களில் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் சித்திரவதைகளுக்கு ஒப்பானவையா கும். ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் சி.ஐ.ஏ. கையாண்ட இந்த வழிமுறைகள் அமெரிக்காவின் பண்புப் பெறுமானங்கள் மீதும் சரித்திரத்தின் மீதுமான கறை என்று குறிப்பிட்டார்.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சாசனத்தில் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் 1988 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டார். 6 வருடங்கள் கழித்து 1994 ஆம் ஆண்டிலேயே அமெரிக்கா அதை அங்கீகரித்தது. பிறகு 7 வருடங்கள் கழித்து 2001 ஆம் ஆண்டில் அமெரிக்கா சித்திரவதைகளைத் திட்டமிட்ட அடிப்படையில் செய்யத் தொடங்கியிருந்தது. இந்தச் சித்தரவதைகள் பல வருடங்களாகத் தொடர்ந்தன. சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் கிளம்பிய கண்டனங்களையும் பகிரங்க விவாதங்களையும் அடுத்து 2009ஆம் ஆண்டில் ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த நடைமுறைகளைத் தடைசெய்தார். கடந்த 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட செனட் புலனாய்வுக் குழுவின் அறிக்கையின் சுருக்கம் அமெரிக்காவை தோலுரித்துக் காட்டியிருக்கிறது.





அறிக்கை வெளியான தினம் லண்டன் கார்டியன் பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் பல விவகாரங்களிலும் பல யுகங்களிலும் உலகிற்கே கலங்கரை விளக்காகத் திகழ்ந்ததாக பெருமைப்பட்டுக் கொள்கின்ற அமெரிக்காவின் வரலாற்றில் இது மிகவும் இருண்டதொரு கிளைக்கதை என்று வர்ணித்திருக்கிறது.

இதுவரை அமெரிக்க காங்கிரஸின் செனட் சபை ஒபாமாவின் ஜனநாயக்க் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அண்மையில் நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சியினர் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றியதையடுத்து செனட்டின் கட்டுப்பாடு அடுத்தமாதம் முதல் குடியரசுக் கட்சியினர் வசமாகவிருக்கிறது. செனட் புலனாய்வுக் குழு மேற்கொண்ட விசாரணையில் சம்பந்தப்பட்ட சித்திரவதைகள் குடியரசுக் கட்சிக்காரரான ஜோர்ச் டபிள்யூ.புஷ் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் இடம்பெற்றவையாகும். அதனால், தங்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதைத் தவிர்க்க அக்கட்சியினர் செனட்சபை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபிறகு செனட் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை வெளியிடாமல் மூடிமறைத்து விடக்கூடும் என்று சந்தேகிக்கப்பட்ட காரணத்தினாலேயே ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் தற்போது இருக்கும் செனட் சபை அறிக்கையின் சுருக்கத்தை அதுவும் தீவிரமான பரிசீலனையின் பின்னர் வெளியிட்டதாக அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

செனட் குழுவின் அறிக்கையில் வெளிக்கொணரப்பட்ட சித்திரவதைகள் பற்றிய தகவல்களுக்காக அமெரிக்காவைக் கடுமையாக கண்டனம் செய்கின்ற அதேவேளை, உரிமை மீறல்களுக்கான பொறுப்புடைமை தொடர்பில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணமாக இந்த அறிக்கை அமைவதாக மறுபுறத்தில் பாராட்டுகளும் தெரிவிக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

லண்டன் கார்டியன் அதன் ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது.

'உலகின் எந்தவொரு நவீன ஜனநாயக நாடுமே அதன் சொந்த துஷ்பிரயோகங்கள் குறித்து இதைப் போன்ற மிகுந்த அதிர்ச்சிதரும் அறிக்கையை இதுவரையில் வெளியிட்டதில்லை'.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தல் 2015

# ஜனாதிபதி தேர்தலும் தமிழர்களின் திரிசங்கு நிலையும்



பேராசிரியர்
எஸ்.ஐ.கீதபொன்கலன்



**தற்போதைய ஜனாதிபதிக்கு வாக்களிப்பது என்பது தமிழர்களில் பெரும்பான்மையானவர்களை பொறுத்தவரை ஒரு தெரிவே அல்ல. அவர்கள் தேர்தலில் பங்கேற்பதாக இருந்தால் தாங்கள் ஆதரிக்காத அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஒருவருக்கே வாக்களிக்க வேண்டியிருக்கும்.**

ஜனாதிபதித் தேர்தலை தமிழர்கள் பகிஷ்கரிப்பார்களா? வழமை போன்று பலவேட்பாளர்கள் களத்தில் நிற்கின்ற போதிலும், அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தல் இரு பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரணியின் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேனாவுக்கும் இடையிலான போட்டியாகவே இருக்கப்போகின்றது என்பது தெளிவானது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சுகாதார அமைச்சர் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிரணியின் பொது வேட்பாளராக களமிறங்குவதாக அறிவிக்கும் வரை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான இலங்கைத் தமிழர்களின் நிலைப்பாடு ஒளிவு மறைவின்றியதாக இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காவிட்டாலும் கூட, தமிழர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளருக்கு அல்லது அக்கட்சியின் அங்கீகாரத்தைக் கொண்ட வேட்பாளருக்கு வாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களித்திருப்பார்கள். ஆனால், மைத்திரிபாலவின் வருகை இந்த நிலைவரத்தை கணிசமான அளவுக்கு மாற்றியமைத்து விட்டது.

பொதுவேட்பாளராக மைத்திரிபால களமிறங்கியிருப்பதையடுத்து தமிழ்ச் சமூகத்திற்குள் இரு பிரத்தியேகமான திரிசங்கு நிலைகள் தோன்றியிருக்கின்றன. முதலாவது, போரின் முடிவுக்கு பிறகு இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவை மாத்திரமல்ல, அரசாங்கத்தையும் அதன் நேச அணிகளையும் கூட நிராகரித்துவிட்டார்கள். அரசாங்கத்துக்கும் அதன் அனுசரணையுடனான கட்சிகள் அல்லது குழுக்களுக்கும் வாக்களிக்க அவர்கள் மறுத்து விட்டார்கள். போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் தாங்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கின்ற நெருக்கடிகள் எல்லாவற்றுக்கும் அரசாங்கமே பொறுப்பு என்று அவர்கள் நம்புகிறார்கள். வடக்கில் கணிசமான பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் (ஈ.பி.டி.பி) தேர்தல்களில் வெற்றி பெற முடியாமற் போனதற்கு இது ஒரு காரணம். எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு வாக்களிப்பதென்பது தமிழர்களில் பெரும் பான்மையானவர்களைப் பொறுத்தவரை ஒருதெரிவே யல்ல. அவர்கள் தேர்தலில் பங்கேற்பதாக இருந்தால், அண்மைக்காலம் வரை தாங்கள் ஆதரிக்காத அதே அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஒருவருக்கே வாக்களிக்க வேண்டியிருக்கும். ராஜபக்ஷ அரசாங்கத்தில் மைத்திரிபால ஒரு சாதாரண உறுப்பினராக இருக்கவில்லை. அதன் முக்கிய தலைவர்களில் ஒருவராகவே அவர் இருந்தார். பிரச்சினைக்குரியவையென்று தமிழர்கள் கருதுகின்ற அரசாங்கத்தின் கொள்கைகள் சகலதையுமே உறுதியாக நியாயப்படுத்தியவர் மைத்திரிபால. இதன் காரணத்தினால், தேர்தலில் பங்கேற்று வாக்களிப்பதில் தமிழர்களுக்கு உற்சாகம் இல்லாமற் போகக்கூடும்.

> **இரு பிரதான வேட்பாளர்களில் எவரை ஆதரிப்பது என்று ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கக்கூடிய நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இல்லை. தேர்தலில் பங்கேற்பதா அல்லது பகிஷ்கரிப்பதா என்ற முடிவை மாத்திரம் அவர்களால் எடுக்க முடியும். முறைப்படியான பகிஷ்கரிப்போ அல்லது முறைப்படியானதாக இல்லாத பகிஷ்கரிப்போ கூட ஜனாதிபதி ராஜபக்ஷவை ஆதரிப்பதற்கு சமனானதாகவே அமையும்.**

இரண்டாவது, ஜாதிகஹெல உறுமயவுடனான கூட்டணி காரணமாக மிகவும் முக்கியமான இக்கட்டு நிலை தோன்றலாம். இது ஒரு சிங்கள- பௌத்த அரசியல் கட்சியாகும். சிங்கள- பௌத்த நலன்களை பிரத்தியேகமாக மேம்படுத்துவதில் அக்கறை கொண்டு செயற்படுவதன் மூலமாக, ஜாதிக ஹெல உறுமய சிறுபான்மையினர்களுக்கு எதிரானதாக, குறிப்பாக தமிழர்களுக்கு எதிரான அரசியல் சக்தியாக மாறியிருக்கிறது. உண்மையில், ஜாதிக ஹெல உறுமய விடுதலைப் புலிகளையும் அதன் கொள்கைகளையும் எதிர்த்தது. வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட பிறகு அந்த மாகாணத்தில் சிவில் அரசியல் நிருவாகம் பொறுப்பேற்பதையும் ஜாதிக ஹெல உறுமய எதிர்த்தது. எந்தவகையான அதிகாரப் பரவலாக்க ஏற்பாட்டுக்கும் எதிரான அதன் நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாகப் பிரகடனம் செய்யவும் அக்கட்சி தயங்கியதில்லை. அதை ஒரு சிங்கள மேலாதிக்கவாத அரசியல் கட்சியாகவே தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அதேபோன்றே தமிழர்களையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் இனவெறியர்கள் என்றே அக்கட்சியும் நோக்குகிறது. எனவே, எதிரணியின் பொதுவேட்பாளர் ஜாதிக ஹெல உறுமயவுடன் கொண்டிருக்கும் கூட்டணி காரணமாக தமிழ் மக்கள் எதிரணியினால் வழங்கப்படக்கூடிய வாக்குறுதிகளை சந்தேகிக்கவே செய்வர். அதனால், மைத்திரிபாலவுக்கு வாக்களிக்க முன்னதாக தமிழர்கள் ஒன்றுக்கு இருதடவைகள் சிந்தித்துப் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுவர்.

மைத்திரிபால தமிழர் பிரச்சினையுடன் தொடர்புடைய விவகாரங்களில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கவில்லையென்பதால், தமிழ்ச் சமூகத்தில் கணிசமான பிரிவினர் அவரைப் பற்றி பெருமளவுக்கு அறிந்திருக்கவில்லை. தமிழர் பிரச்சினை தற்போதைய அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களினால் அல்லது ஈ.பி.டி.பி.போன்ற நேசக்கட்சிகள், குழுக்களின் ஊடாகவே கையாளப்பட்டது. சிங்கள சமூகம் கூட, மைத்திரிபாலவின் பின்னணி மற்றும் கோட்பாடுகள் பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டிருக்கின்றதோ என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. எவ்வாறெனினும், சிங்களவர்கள் அவரைப்பற்றி தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அத்தகையதொரு ஆர்வம் தமிழர்கள் மத்தியில் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இந்தக் காரணிகள் எல்லாம் மைத்திரிபால தொடர்பில் தமிழ்ச் சமூகம் கொண்டிருக்கக்கூடிய வெறுப்புணர்வைத் தணிக்க உதவக்கூடும் என்றபோதிலும், தங்களுக்கு பெரிதாக தெரிந்திராத ஒருவருக்கு வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதில் பெருமளவுக்கு அவர்கள் உற்சாகம் காட்டப்போவதில்லை.

எதிரணியின் பொதுவேட்பாளருக்கான அதன் ஆதரவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் பிடிகொடாத ஒரு போக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கையே கடைப்பிடித்திருக்கின்றது என்பது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இறுதி முடிவொன்றை எடுப்பதற்கு முன்னதாக, தங்களுக்கு இருக்கக்கூடிய வழிமுறைகள் சகலதையும் ஆராய்ந்து கொண்டிருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. பொதுவேட்பாளரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 'மறைமுகமாக' ஆதரிக்கும் என்று இன்னொரு செய்தி அறிகுறி காட்டியது. இவ்விரு நிலைப்பாடுகளும் குறிப்பாகக் கவனிக்கத்தக்கவை. ஏனென்றால், இரு பிரதான வேட்பாளர்களில் எவரை ஆதரிப்பதென்று ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கக்கூடிய நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இல்லை. தேர்தலில் பங்கேற்பதா அல்லது பகிஷ்கரிப்பதா என்ற முடிவை மாத்திரமே

**தமிழர்களில் வாக்குகள் தொடர்பில் மைத்திரிபால மெத்தனமான போக்கை கடைப்பிடிக்கவோ அல்லது வலிய வந்து தமிழர்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்று எண்ணவும் முடியாது. தமிழர்களின் வாக்குகள் இல்லாமல் ராஜபக்ஷவினால் தேர்தலில் வெற்றிபெற முடியும். ஆனால் மைத்திரிபாலவினால் முடியாது**

அவர்களால் எடுக்க முடியும். முறைப்படியான பகிஷ்கரிப்போ அல்லது முறைப்படியானதாக இல்லாத பகிஷ்கரிப்போ கூட ஜனாதிபதி ராஜபக்ஷவை ஆதரிப்பதற்குச் சமமானதாகவே அமையும். வாக்களிப்புப் பாணிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, தமிழர்களின் வாக்குகள் இல்லாமல் ராஜபக்ஷவினால் தேர்தலில் வெற்றிபெற முடியும். ஆனால், மைத்திரிபாலவினால் முடியாது என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. எனவே, அரசாங்கத்தைக் காட்டிலும், தமிழர்களின் வாக்குகள் பற்றி கூடுதலான அளவுக்கு அக்கறைப்பட வேண்டியவராக மைத்திரிபாலவே இருக்கிறார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கோட்பாட்டளவில் மைத்திரிபாலவை உத்தியோகபூர்வமான முறையில் ஆதரிக்காமல் இருப்பதற்கு தீர்மானித்து, செய்திகளில் கூறப்பட்டவாறு மறைமுகமாக அல்லது உத்தியோகபூர்வமற்ற முறையில் ஆதரவளிப்பதற்கு முன்வரலாம். மைத்திரிபாலவுக்கும் ஜாதிகஹெல உறுமயவுக்கும் இடையிலான உடன்படிக்கையில் சிறுபான்மையினத்தவர்களுக்கும் அதிகாரப் பரவலாக்கத்து க்கும் எதிரானவையென்று கருதப்படக்கூடிய ஏற்பாடுகள் அல்லது அவற்றுக்கு எதிரான உண்மையான ஏற்பாடுகள் உள்ளடங்கியிருந்தால் இவ்வாறு நிகழக்கூடும். அத்தகையதொரு சூழ்நிலை மைத்திரிபாலவுக்கு பின்னடைவாக அமையக்கூடியது என்றும் கருத இடமிருக்கிறது. ஏனென்றால், தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கும் அக்கறையின்மையை மனதிற் கொண்டுநோக்கும்போது அவர்களை வாக்களிப்பு நிலையங்களுக்குப் போகச் செய்து வாக்களிக்க வைப்பதற்கு அக்கறையுடனான உற்சாகப்படுத்தல் தேவைப்படலாம். அதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினாலேயே செய்ய இயலுமாக இருக்கும்.

தமிழ்ச் சமூகத்திற்குள் இன்னமும் பிரிவினைவாத கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருக்கின்ற- பெரும்பாலும் தீவிர தேசியவாதிகளாக இருப்பவர்களை உள்ளடக்கிய ஒரு பிரிவினர் ஜனாதிபதித் தேர்தலை சிங்களவர்களுக்கும் தென்னிலங்கைக்குமுரிய அலுவல் என்று கருதுகிறார்கள். தமிழர்கள் இத்தேர்தலில் பங்கேற்க வேண்டியதில்லை. அலட்சியம் செய்ய வேண்டும் என்பதே அந்தப் பிரிவினரின் சிந்தனையாகும். இத்தகைய சிந்தனையை அடிப்படையாகக் கொண்டுதான் 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க தமிழர்களை விடுதலைப் புலிகள் நிர்ப்பந்தித்தனர். புலம் பெயர்ந்த தமிழர்களில் அதிகப் பெரும்பான்மையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவர்களும் இலங்கையில் இருக்கும் ஒரு குழுவும் இன்னமும் இதே சிந்தனையைக் கொண்டிருக்கிறார்கள். எனவே, 2015 ஜனாதிபதித் தேர்தலையும் தமிழர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற அழைப்புகள் வரும். ஆனால், தங்களது அரசியல் எதிர்காலத்தைக் கட்டமைக்கும் முகமாக தேசிய தேர்தல்களில் பங்கேற்க வேண்டிய தேவையிருக்கிறது என்று தமிழ்ச் சமூகத்திற்குள் விளக்கப்பாடு அதிகரித்திருக்கிறது என்பதும் உண்மை. இத்தகைய விளக்கம் காரணமாகவே 2010 ஜனாதிபதித் தேர்தலில் கணிசமானளவு தமிழர்கள் பங்கேற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. இன்றைய கட்டத்தில் ஆட்சிமாற்றமொன்று ஏற்படுமானால் தமிழர்கள் தற்போதைய முட்டுக்கட்டை நிலையைத் தகர்ப்பதற்கு வகை செய்யக்கூடியதாக ஆக்கபூர்வமான அரசியலுக்கான புதிய வெளியொன்று தோன்ற முடியும். எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் இடையே அந்தரங்கமான புரிந்துணர்வு எதுவும் ஏற்படாத பட்சத்தில், முறைப்படியான தேர்தல் பகிஷ்கரிப்பு பெரும்பாலும் சாத்தியமில்லை. ஆனால், மைத்திரிபாலவுக்கு வாக்களிப்பதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்று தமிழர்கள் உணருவார்களேயானால், உத்தியோகபூர்வமற்ற அல்லது பலவந்தமான பகிஷ்கரிப்பு ஒன்று இடம் பெறக்கூடும்.

அதனால், மைத்திரிபால தமிழர்களின் வாக்குகள் தொடர்பில் மெத்தனமான போக்கைக் கடைப்பிடிக்கவோ அல்லது வலிய வந்து தமிழர்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்று எண்ணவோ முடியாது. எதிரணிக் கட்சிகளின் பிரமாண்டமான கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மைத்திரிபாலவுடன் ஏற்கனவே சேர்ந்து நிற்பதால், மேல்மாகாணத் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் மைத்திரிபாலவுக்கு வாக்களிப்பார்கள். மைத்திரிபாலவுக்கு வாக்களிக்கக் கூடியதாக தமிழர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கு எதிர்க்கட்சிகள் கூட்டணி பயனுறுதியுடைய பிரசார இயக்கத்தை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகலாம். வடக்கு, கிழக்கிலும் தீவிரமான பிரசாரங்களைச் செய்ய வேண்டியிருக்கும். வேட்பாளரையும் அவரது கொள்கைகளையும் வடக்கு-கிழக்கிற்கு அறிமுகப்படுத்துவதற்கு உற்சாகத்துடனான பிரசாரம் தேவை. எதிரணி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தன் பக்கமாக நிற்கச் செய்ய இயலுமாக இருந்தால் இந்தக் காரியம் சுலபமானதாகிவிடும்.

மைத்திரிபால ஜாதிகஹெல உறுமயவுடன் செய்து கொண்டுள்ள கூட்டணி காரணமாக தோன்றியிருக்கும் சந்தேகங்கள் குறித்து அந்த பிக்குமாருடன் நிதானமான முறையில் விவகாரங்களைக் கையாளவேண்டும். எதிரணியின் பொதுவேட்பாளருக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக் கும் இடையிலான உடன்படிக்கை தமிழர்களுக்கு எதிரான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம் உருவாக அனுமதிக்கக் கூடாது. தனக்கு அனுகூலமான முறையில் ஜாதிக ஹெல உறுமயவுடன் பேரம் பேசக்கூடிய நிலையில் மைத்திரிபால இருக்கிறார். சிங்கள-பௌத்த வாக்குகளை இலக்கு வைப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய பெருமளவுக்கு உதவியாக இருக்கும்.

எனவே, மைத்திரிபால நல்லாட்சியுடன் தொடர்புடைய விவகாரங்களில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு இருக்கின்ற அக்கறைகளில் கவனம் செலுத்துகின்ற அதேவேளை, எதிர்க்கட்சிகள் கூட்டணி சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிரான போக்குகளின் பால் சாய்ந்துவிடாதிருப்பதையும் உறுதி செய்யவும் வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழர்களுக்கு அக்கறையில்லாமல் இருந்தாலோ அல்லது உத்தியோகப்பற்றற்ற முறையில் தேர்தலை தமிழர்கள் பகிஷ்கரித்தாலோ மைத்திரிபாலவுக்குத் தான் அதனால் பெரும் பாதிப்பாகப் போய்விடும். ■

தமிழர்கள் தேர்தலில் பங்கேற்காமல் ஒதுங்கி இருக்கலாம். ஆனால் அதே தேர்தலும் அதன் முடிவுகளும் தங்களின் வாழ்வை பாதிப்பதை அவர்களால் தடுக்க முடியாது. தற்போதைய நிலைவரம் தொடர்வதை தமிழர்கள் விரும்புகிறார்களா அல்லது ஒரு மாற்றத்தை விரும்புகிறார்களா? ராஜபக்ஷாக்களின் கீழ் வாழ்வதற்கு அவர்கள் விரும்புகிறார்களா இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தல் 2015

# தமிழ் வாக்குகள்; மீண்டும் ஒரு 2005?

திஸ்ஸரணி குணசேகர

'இந்தத் தேர்தலின் முடிவுகளைப் பற்றி எமக்கு அறவே அக்கறை கிடையாது'. 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தல் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அன்று இவ்வாறு தான் கூறியிருந்தார்.

2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரை எதிரணியினருக்கு தமிழர்கள் தேவை. தமிழர்களுக்கு எதிரணி தேவை. தமிழர்களின் வாக்குகள் இல்லாமல் எதிரணியினரால் வெற்றிபெறமுடியாது. எதிரணியினர் வெற்றிபெறத்தவறினால் தமிழர்கள் ராஜபக்ஷ ஆட்சிக்குள் மாட்டுப்பட்டுக்கிடக்க வேண்டியது தான். தேர்தலில் வெற்றிபெறுவதற்கு ராஜபக்ஷாக்களுக்கு தமிழ் வாக்குகள் தேவையில்லை. அவர்களைப் பொறுத்தவரை தேவைப்படுவதெல்லாம் தமிழர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இருப்பது மாத்திரமே. இதை ராஜபக்ஷாக்கள் 2005 ஆம் ஆண்டில் விளங்கிக்கொண்டிருந்த காரணத்தினாலேயே தேர்தலைப் பகிஷ்கரிக்க தமிழர்களை நிர்ப்பந்திப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் அவர்கள் உடன்பாடொன்றைச் செய்தார்கள்.




அதனால், இன்றைய நிலைவரங்களைப் பொறுத்தவரை, மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக நிறுத்தியிருக்கும் எதிரணிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் உடன்பாடொன்று காணப்பட்டிருப்பதாகக் கிளம்புகின்ற வதந்தி குறித்து ராஜபக்ஷ முகாம் உரத்துக் கூச்சல் போடுவதன் தார்க்கத்தை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. சீற்றத்துடனான இந்தக் கூச்சல் பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கையர்கள் என்ற அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையொன்றில் தெளிவாகப் பிரதிபலித்திருக்கிறது 'Shame on you CBK! Shame on your ancestors! Determined to fracture the nation!!! You beloug in paris' என்ற தலைப்பில் வெளியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியிருக்கும் அந்தக் கட்டுரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும் முறைகேடான உடன்படிக்கைகளைச் செய்துகொண்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கர்ண கடூரமாகத் தாக்கியிருக்கிறது.

ஆனால், எதிரணிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டுவிடக் கூடிய சாத்தியம் குறித்து ராஜபக்ஷாக்களும் அவர்களின் சிங்கள-பௌத்த மேலாதிக்கவாத நேச சக்திகளும் மாத்திரந்தான் அச்சம் கொண்டிருக்கிறார்கள் என்றில்லை. தமிழ் அரசியல் சமுதாயத்தின் ஒரு பிரிவினரும் கூட சமமான அளவுக்கு அஞ்சுகிறார்கள். உதாரணத்துக்கு, தமிழ் நெற்றில் வெளியான ஒரு கட்டுரையை எடுத்துக்கொள்ளலாம். 'அந்தரங்க உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதாக சம்பந்தன் மீது சந்தேகம்' என்ற தலைப்பிலான அந்தக் கட்டுரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எதிரணியுடன் கூட்டணி அமைப்பதாக குற்றஞ்சாட்டியிருக்கிறது. 'இனப்படுகொலை செய்த அரசில் அங்கம் வகித்தவர்களான ஜனாதிபதி வேட்பாளர்களில் எந்தவொருவரையும் ஆதரிக்க வேண்டுமா அல்லது அடுத்த அரசாங்கத்தை தெரிவு செய்வதை சிங்கள தேசத்தின் மனச்சாட்சிக்கே விட்டுவிடவேண்டுமா என்பதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருக்குள் விவாதத்துக்குரிய விடயமாக இருக்கிறது' என்று அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைத்தான் 2005 ஆம் ஆண்டு ராஜபக்ஷாக்களிடமிருந்து கணிசமான தொகை பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு விடுதலைப் புலிகள் செய்தார்கள். அடுத்த அரசாங்கத்தை தெரிவுசெய்யும் பொறுப்பை சிங்கள தேசத்தின் மனச்சாட்சிக்கு விடுதலைப் புலிகள் விட்டுவைத்தார்கள். '7 இலட்சம் தமிழர்கள் வாக்களிப்பதை விடுதலைப் புலிகள் தடுத்த காரணத்தினால் தான் ஒரு இலட்சத்து 81 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ 2005 தேர்தலில் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. அவர்களின் அவசரமான அந்தத் தீர்மானத்தின் இன்றைய விளைவு என்ன?'

என்று 2009 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி கூறியிருந்ததை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமானது.

தமிழர்கள் மொத்தமாக வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்குவதன் மூலமாக அடுத்த ஜனாதிபதியை

> எதிரணிக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இணக்கப் பாடொன்று ஏற்பட்டு விடக்கூடிய சாத்தியம் குறித்து ராஜபக்ஷாக் களும் அவர்களது சிங்கள பௌத்த மேலாதிக்கவாத நேச சக்திகளும் மாத்திரம் தான் அச்சம் கொண்டிருக் கிறார்கள் என்று இல்லை. தமிழ் அரசியல் சமுதாயத் தின் ஒரு பிரிவினரும் கூட சமமான அளவிற்கு அஞ்சுகிறார்கள்

சிங்களவர்களும் முஸ்லிம்களும் தெரிவு செய்வதற்கு அனுமதிக்கலாம். ஆனால், அவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற ஜனாதிபதி தான் இலங்கையில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழரினதும் அன்றாட வாழ்வையும் எதிர்காலத்தையும் பாதிக்கின்ற தீர்மானங்களை எடுக்கப்போகிறார். வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விடுவதோ அல்லது வாக்குச் சீட்டுக்களை பழுதாக்குவதோ தமிழர்கள் தங்களின் வாக்குரிமையைத் தாங்களாகவே பறிப்பதாகவே அமையுமே தவிர வேறு ஒன்றுமில்லை.

தமிழர்கள் தேர்தலில் பங்கேற்காமல் ஒதுங்கியிருக்கலாம். ஆனால், அதே தேர்தலும் அதன் முடிவுகளும் தங்களின் வாழ்வைப் பாதிப்பதை அவர்களினால் தடுக்க முடியாது.

பெரிய கதையளப்புகள் ஒருபுறம் இருக்க, யதார்த்த நிலைபற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர்கள் எதிர்நோக்குகின்ற உண்மையான தெரிவு சிங்களவர்கள் அல்லது முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற உண்மையான தெரிவிலிருந்து எந்த வகையிலும் வேறுபட்டதல்ல. தற்போதைய நிலைவரமே தொடருவதை அவர்கள் விரும்புகிறார்களா? அல்லது ஒரு மாற்றத்தை விரும்புகி



றார்களா? ராஜபக்ஷாக்களின் கீழ் வாழ்வதற்கு அவர்கள் விரும்புகிறார்களா இல்லையா?

ராஜபக்ஷாக்கள் மூன்றாவது பதவிக்காலத்தையும் பெறுவதற்கு உதவ தமிழர்கள் விரும்பினால், அவர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கலாம். அல்லது தங்களின் வாக்குச் சீட்டுக்களை பழுதாக்கலாம். ராஜபக்ஷாக்கள் மூன்றாவது பதவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைப் பெற்றுக்கொள்வதை தமிழர்கள் விரும்பவில்லையானால், மகிந்த ராஜபக்ஷவையும் அவரின் பதிலாட்களையும் தவிர (Proxies) வேறு எந்த வேட்பாளருக்கும் அவர்கள் வாக்களிக்கலாம்.

தமிழர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தால், 2005 நவம்பரில் விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தத்தின் கீழ் எதை அவர்கள் செய்தார்களோ அதையே 2015 ஜனவரியிலும் செய்வதாக




இருக்கும். அதாவது மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு உதவுவதாக இருக்கும்.,

இனப்பிரச்சினை குறித்தோ அல்லது தமிழர்கள் எதிர்நோக்குகின்ற ஏனைய பிரச்சினைகள் குறித்தோ மைத்திரிபால சிறிசேன எதையும் கூற முன்வருகிறாரில்லை. சிறுபான்மையினத்தவர்கள் தொடர்பில் எத்தகைய கொள்கைகளை அவர் நடைமுறைப் படுத்துவார் என்பதும் இதுவரையில் நாட்டு மக்களுக்குத் தெரியவில்லை.

ஆனால், ராஜபக்ஷாக்கள் வெற்றி பெறுவார்களேயானால், சிறுபான்மையினத்தவர்களுக்கு அதுவும் குறிப்பாக, தமிழர்களுக்கு அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைப் பற்றி எந்தச் சந்தேகமும் இல்லை. கடந்த 5 வருடகாலமாக அவர்கள் நடைமுறைப்படுத்தி வந்த கொள்கைகளை மிகவும் விரிவாக, துரிதமாக, கூடுதல் உத்வேகத்துடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் ஆக்கிரமிப்பு தொடரும். தனியார் நிலங்கள் பாதுகாப்புப் படையினரால் அபகரிக்கப்படுவது தொடரும். பொருளாதாரத்தை இராணுவ மயப்படுத்தும் செயற்பாடுகள் தொடரும். தனியொரு சிங்கள பௌத்த குடிமகன் கூட இல்லாத பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கும் செயற்பாடுகள் தொடரும். குடிசனப் பரம்பலின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் காரியங்கள் தொடரும். இராணுவத்தினருக்கான குடியிருப்புகளின் நிருமாணம் தொடரும். எதிர்க்கருத்துக் கொண்டவர்களை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தும் போக்கு தொடரும். பௌதிக உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, மக்களுக்கு தொழில்வாய்ப்புகளையும் வருவாயையும் பெருக்க உதவக்கூடிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்காத போக்கு தொடரும். அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை உள்ளுக்குள்ளாலேயே குடைந்து சத்தை அகற்றும் செயற்பாடுகள் தொடரும். வடமாகாணசபையைச் செயற்படவிடாமல் சூழ்ச்சித்தனமான செயற்பாடுகள் தொடரும்.

தேர்தல் பகிஷ்கரிப்பை நியாயப்படுத்திக் கதைக்கின்ற தமிழ் கடும்போக்காளர்கள் இவையெல்லாவற்றையுமா விரும்புகிறார்கள்?

வடமாகாணத்தின் தற்போதைய நிலைவரம் அச்சந் தருவதாகவும் பரிதாபத்துக்குரியதாகவும் இருக்கிறது. வறுமை படுமோசமானதாக இருப்பதை புள்ளிவிபரங்கள் பிரகாசமாக வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன. வன்னியில் வறுமைநிலை 28.8 சதவீதமாக இருக்கிறது. கிளிநொச்சியில் 12.7 சதவீதமாகவும் மன்னாரில் 20.1 சதவீதமாகவும் யாழ்ப்பாணத்தில் 8.3 சதவீதமாகவும் இருக்கிறது. தேசிய சராசரி வறுமை நிலையுடன் (6.7 சதவீதம்)ஒப்பிடும்போது வவுனியாவில் மாத்திரமே வறுமை நிலை குறைந்த வீதத்தில் (3.4சதவீதம்) காணப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் மிகவும் உயர்வாகவே இருக்கிறது. மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகளில் கவனம் செலுத்தாமல் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டுகின்ற ஏறுமாறான கொள்கையை பொருளியல் நிபுணர்கள் கடுமையாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரமடையும் சமூகப் பிரச்சினைகள் பொருளாதார இடர்பாட்டை மேலும் மோசமாக்குகின்றன. பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. யாழ்ப்பாணத்தின் இளஞ்சந்ததியினரில் கணிசமான எண்ணிக்கையினர் போதைப் பொருளுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. தென்னிந்தியாவின் கேளராவிலிருந்து கொண்டுவரப்படுகின்ற கஞ்சாவுக்குப் பிரதியுபகாரமாக யாழ்ப்பாணத்திலிருந்து தங்கம் கடத்தப்படுவதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகையினால் பேட்டி காணப்பட்ட வட பகுதி மீனவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கடத்தல் பொருட்கள் பரிமாற்றம் நடுக்கடலில் நடந்துவருகிறது. மதுவுக்கு அடிமையாகும் போக்கும் நீண்டகால அடிப்படையில் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய இன்னொரு பிரச்சினையாகும். 15 ஆயிரம் லீற்றர்களுக்கும் கூடுதலான மதுவகைகள் தினமும் தீர்ந்துபோகின்றன. வடமாகாணத்தின் மதுபாவனைப்பாணி முற்றிலும் மாறிவிட்டது. அளவுக்கு அதிகமாக மது அருந்தும் பழக்கம் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துவிட்டது.

இந்தத் தீமைகள் எல்லாம் கடுமையான இராணுவப் பிரசன்னத்தையும் கரையோரத்தில் தீவிர கடற்படைக் கண்காணிப்பையும் கொண்ட ஒரு மாகாணத்தில் தான் இடம்பெறுகின்றன.

வடக்கில் என்றாலென்ன தெற்கில் என்றாலென்ன சமூக,அரசியல், பொருளாதார பிரச்சினைகள் குறித்து கவலைப்பட முடியாத அளவுக்கு இளஞ்சந்ததியினர் போதைப் பொருளுக்கோ மதுவுக்கோ அடிமையாகிப் போவது குறித்து ராஜபக்ஷாக்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. களத்தில் உள்ள உண்மை நிலைவரங்களை மாற்றியமைப்பதற்கு அரச அதிகாரத்தைப் பயன்படுத்தும் இஸ்ரேலிய நடைமுறையை ராஜபக்ஷாக்கள் நெஞ்சறிந்து ஒழுங்குமுறையாகப் பின்பற்றுகிறார்கள். இந்தத் தேர்தலில் அவர்கள் வெற்றிபெறுவார்களேயானால், வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் குடிப்பரம்பலின் இனவிகிதாசாரத்தை மாற்றியமைப்பதற்கான திட்டத்தை துரிதப்படுத்துவார்கள். வட மாகாணத்தில் தமிழர்கள் வாழுகின்ற பிரதேசங்களின் நிலத்தொடர்ச்சி முற்றாக சீர்குலைக்கப்பட்டு, அதிகாரப் பரவலாக்கல் என்பது ஜனநாயகரீதியில் சாத்தியமற்றதாக மாறும் வரை இந்தத் திட்டத்தை ராஜபக்ஷாக்கள் தொடருவார்கள். அவர்கள் தேர்தலில் வெற்றிபெறுவார்களேயானால் இவற்றையெல்லாம் யார் தடுத்து நிறுத்தப் போகிறார்கள்? தமிழர்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் பட்சத்தில் ராஜபக்ஷாக்களின் வெற்றி உறுதிப்படுத்தப்படுவதாகவே இருக்கும். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள கடும்போக்காளர்கள் கூச்சல் போடுவதற்கு வாய்ப்பு கிடைக்கக்கூடும். ஆனால், ராஜபக்ஷாக்களின் ஆட்சியின் கீழ் இலங்கையில் வாழவேண்டியிருக்கின்ற சாதாரண தமிழர்கள் தானே உண்மையான விலையைச் செலுத்தவேண்டும்.

> ராஜபக்ஷாக்கள் மீண்டும் வெற்றி பெறுவார்களேயானால் தமிழர்களுக்கு எதிராக கடந்த ஐந்து வருடகாலமாக நடைமுறைப் படுத்தி வந்த கொள்கைகளை விரிவாக, துரிதமாக, கூடுதல் உத்வேகத்துடன் நடைமுறைப்படுத்துவார்கள். தேர்தல் பகிஷ்கரிப்பை நியாயப்படுத்தி கதைக்கின்ற தமிழ் கடும்போக்காளர்கள் இதை விரும்புகிறார்களா?

சர்வதேச நெருக்கடிக்குழு (International crisis Group) சுட்டிக்காட்டியிருப்பதைப் போன்று, வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இன்னமும் இறுக்கமான இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற நிலையில் (கடந்த வருடத்தைய மாகாணசபைத் தேர்தலில் இடம்பெற்றதைப் போன்று) எதிரணிக் கட்சிகளினால் மேற்கொள்ளப்படக்கூடிய பிரசாரங்களை மட்டுப்படுத்துவதற்கும் வாக்களிப்பில் பங்கேற்கக்கூடிய தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் தொகையைச் சாத்தியமானளவு குறைப்பதற்கு அவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்புப் படைகள் பயன்படுத்தப்பட முடியும். வடக்கிலும் கிழக்கிலும் குறைந்த வாக்களிப்பு வீதத்தை உறுதி செய்வதென்பது ராஜபக்ஷவின் முக்கியமான ஒரு இலக்கு. எனவே, தமிழர்கள் தாங்களாகவே தேர்தலைப் பகிஷ்கரிப்பார்களேயானால் ராஜபக்ஷ சகோதரர்களைப் பொறுத்தவரை அவர்களின் கனவு பலித்ததாகி விடும்.

ஜாதிகஹெல உறுமய முக்கியமாக பங்கேற்கின்ற போதிலும் கூட, எதிரணி இதுவரை இனவெறிப் பொறியில் வீழ்ந்துவிடாமல் சமாளித்துக் கொண்டு போகிறது. ராஜபக்ஷாக்களின் அச்சுறுத்தல்களுக்குப் பயப்படாமல் தமிழர்களை வாக்களிக்கச் செய்வதற்கு இனவெறியைக் காட்டாத போக்கு மாத்திரம் போதுமானதல்ல. எதிரணியின் அரசியல் வேலைத்திட்டத்தில் தமிழர்களுக்கும் உண்மையான பங்கொன்று கொடுக்கப்பட வேண்டும். 2005 ஆம் ஆண்டைப் போன்றே இத்தடவையும் ராஜபக்ஷாக்களும் தமிழர்கள் தரப்பில் உச்ச பட்சக் கோரிக்கையை முன்வைத்துச் செயற்படுவோரும் (Tamil Maximalists) தமிழர்கள் தாங்களாகவே தங்களை வாக்குரிமையற்றவர்களாகச் செய்வதற்கு தூண்டுதல் அளிக்கும் காரியங்களை ஒருங்கிசை செய்கிறார்கள். மைத்திரிபாலவின் அரசியல் வேலைத் திட்டத்தில் சாதாரண தமிழர்களை பங்கும் ஈடுபாடும் கொண்டவர்களாக்குவதன் மூலம் மாத்திரமே அரசாங்கத்தின் தந்திரோபாயத்தையும் மேற்கூறப்பட்ட கடும்போக்கு தமிழ்ச் சக்திகளின் நோக்கங்களையும் முறியடிக்கக்கூடியதாக இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தல் 2015

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் மைத்திரிபால ஏன் உடன்பாட்டுக்கு வரமுடியாது?



கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ





நான்கு ஆண்டுகள் மட்டும் பதவியில் இருந்த பின்னர் இடைநடுவில் அறிவிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நடைபெற்றுச் சில நாட்களே கழிந்துள்ளன. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி , முக்கியமானதொரு. முடிவை இந்நாட்டு மக்கள் எடுக்கப் போகின்றனர். இரு வேட்பாளர்களிடையிலான பெரும்போட்டியாக மாறியுள்ள இத்தேர்தல் நாட்டின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது. 1931 ஆம் ஆண்டில் இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற தேர்தல்கள் யாவற்றிலும் இதுவே மிக முக்கியமானதாகும்.

அரசியல் யாப்புச் சர்வாதிகாரம் என்ற பாதையில் நாடு தொடர்ந்து பயணிக்கப்போகிறதா அல்லது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடும் போக்கைத் தடுத்து நிறுத்தி அதனை மீண்டும் மலரச் செய்வதற்கு கிடைத்த வாய்ப்பை மக்கள் பயன்படுத்தப் போகின்றனரா என்பதை இந்தத் தேர்தல் தீர்மானிக்கப்போகிறது. அதிசயங்கள் மந்திரசக்தியால் நடைபெறுவது போல் எதுவும் நடக்கப் போவதில்லை என்பது உறுதி. அரசியல் அரங்கில் செயற்படுவோர் உணர்ந்து செயற்படுவதன் மூலமே நடப்பது நடக்கும். ஜனநாயகத்தை மீள மலரச் செய்வது நாட்டு மக்கள் அனைவருக்கும் அவசியமானதொரு தேவை, இனம், மொழி, மதம், பால் வேறுபாடுகள் கடந்து யாவரும் ஒன்று சேரவேண்டிய விடயம் இது.

ஜனநாயகத்தைப் புத்துயிர் பெறச் செய்வதற்குரிய திட்டம் ஒன்றை மைத்திரிபால சிறிசேன முன்வைத்திருக்கிறார். இவரது திட்டம் நம்பிக்கை தருவதாக உள்ளது. ஐக்கியதேசியக் கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகளுடனும் கலந்துரையாடிய பின் முன்வைக்கப்பட்ட திட்டம் இது. அவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்துள்ள கட்சிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பிரதான கொள்கைத் தீர்மானங்கள் வெளியிடப்பட்டன. இதன் போது கையாளப்பட்ட நடைமுறைகள் ஜனநாயகத் தன்மையும், வெளிப்படைத் தன்மையும் மிக்கவை. (இரகசிய நிகழ்ச்சி நிரல்களோ, சதித்திட்டங்களோ இதன் பின்னணியில் இல்லை)

### தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும்

எதிர்க்கட்சிகளில் சில இச்செயல் முறையில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கி நிற்கின்றன. நேரடியாகப் பங்குபற்றாமல் ஒதுங்கி நிற்கும் இரு கட்சிகள் முக்கியமானவை. ஒன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றையது ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி.

மக்கள் விடுதலை முன்னணி என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் தற்போதைய ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என்று அது கூறுகிறது. அத்தோடு அக்கட்சி தனித்துப் போட்டியிடவும் முன்வரவில்லை. முந்திய காலத்தில் பெற்ற கசப்பான அனுபவங்கள் காரணமாக எதிர்க்கட்சி வேட்பாளர் எவருக்கும் ‘நற்சாட்சிப்பத்திரம்’ கொடுப்பதை அக்கட்சி விரும்பவும் இல்லை. மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ‘நற்சாட்சிப் பத்திரம்’ வழங்கும் விடயத்தில் கொண்டுள்ள அபிப்பிராயம் புரிந்து கொள்ளக்கூடியதே. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் பொது மேடைகளில் ஜனாதிபதி முறையின் ஒழிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் வேறுபல பிரச்சினைகளை முன்வைத்தும் பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்போ இன்றுவரை மௌனம் சாதித்து வருகிறது.


மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவைவிட பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவிற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுதான் கட்டாயம் தேவையானது. மக்கள் விடுதலை முன்னணியின் வாக்கு வங்கி தற்போது 200, 000 வாக்குகளாகும். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் 600,000 வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க முடியும். முன்கூட்டியே அவர்கள் பிரசார இயக்கத்தில் இறங்கினால் அவர்கள் சொற்படி நடப்பதற்கு இவ்வாக்காளர்கள் தயாராக இருக்கிறார்கள். தேவையற்ற தாமதம் காரணமாக இது கைகூடாமல் போகலாம்.

டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பு ஹைபார்க்கில் நடைபெற்ற பொது எதிரணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு இருந்தார். ஆனால் இறுதி நேரத்தில் அவர் கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொண்டார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கூட்டமைப்பு இன்னும் முடிவு எதனையும் செய்யவில்லையென்று காரணம் கூறினார். பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன விடுதலைப்புலிகளின் முகவர் அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார் என்று அரசாங்கம் குற்றம் சாட்ட ஆரம்பித்திருக்கும் பின்னணியில், எம்.ஏ.சுமந்திரன் ஹைப்பார்க் கூட்டத்தைத் தவிர்த்துக் கொண்டதை ஒரு தந்திரோபாய உத்தியாகவும் கருத இடமுண்டு. இதுதான் காரணம் என்று கொண்டால் இந்தத் தந்திரோபாயம், உத்திகள் என்பன குறித்து எனக்கு மாறுபட்ட கருத்து உள்ளதென்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல்களில் சிறிய பின்னடைவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை இவ்வாறான ஒளிப்பும் மறைப்பும் விளையாட்டு இலங்கை அரசியலை மேலும் மேலும் படுகுழியில் விழுத்தும். அரசாங்கத்தின் பிரசாரத்தில் பாதுகாப்பு என்பதற்கு முக்கிய இடம்கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கும் ஏனைய சிறுபான்மையினருக்கும் எதனையும் விட்டுக் கொடுக்க முடியாது என்பதை அது கூறிவருகிறது. இந்நிலையில் எதிர்க் கட்சிகள் ஏன் கொள்கை சார்ந்த நேர்மையான முடிவை எடுக்கக்கூடாது? பெரும்பான்மைச் சமூகத்திற்குத் தமிழ்த்தேசியப் பிரச்சினை குறித்து ஏன் அறிவூட்டும் நடவடிக்கையில் இறங்குவதோடு பகிரங்கமாகத் தமது கொள்கையை அறிவிக்கக்கூடாது? இவ்விடயத்தில் அவதானத்தோடும் புத்திசாதுரியமாகவும் நடக்க வேண்டியது உண்மையே. ஆனால் இது செய்ய முடியாத கடினமான பணி என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏனெனில் போர் முடிந்து விட்டது. பிரிவினைவாத ஆயுதக் கிளர்ச்சி அரசியலுக்கு கிட்டிய எதிர் காலத்தில் சாத்தியமே கிடையாது. இப்பொழுது தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவுள்ள மனத்தடைகளும், ஐயங்களும் அகநிலைப்பட்டவை. அல்லது புற யதார்த்தத்தில் இருந்து விலகிநிற்கும் கடும் சிக்கல்வாத தத்துவம்சார் (Metaphysical) பிரச்சினைகளாகும். நேர்மையற்ற அரசியல்வாதிகள் அரசியலில் பொய்ப்பிரசாரம், மக்களிடையே பயத்தை ஊட்டுதல் என்பவற்றைப் பயன்படுத்தி அதனால் நன்மை பெறுகின்றனர் என்பது உண்மையே.

**தமிழர்களுக்கும் ஏனைய சிறுபான்மையினங்களுக்கு எதனையும் விட்டுக்கொடுக்க முடியாது என்று அரசாங்கம் கூறி வருகின்ற நிலையில் எதிர்க்கட்சிகள் ஏன் கொள்கை சார்ந்த நேர்மையான முடிவை எடுக்கக்கூடாது? பெரும்பான்மை சமூகத்திற்கு தமிழ்த் தேசிய பிரச்சினை குறித்து ஏன் அறிவூட்டும் நடவடிக்கையில் இறங்கி பகிரங்கமாக தமது கொள்கையை அறிவிக்கக்கூடாது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயினும் மக்கள் புத்திசாலிகள். அவர்கள் பொதுப்புத்தியை உபயோகிப்பவர்கள். அரசியல்வாதிகளும் அவர்களது அடிவருடிகளும் கூறும் திரிபுபட்ட காட்சியை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை என்றே கருதுகிறேன்.

### திரிசங்கு நிலை

நான் இக்கட்டுரையில் எழுப்பும் பிரச்சினையை வேறு ஒரு வகையில் கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன் கூறியிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்கள் எதிர்நோக்கும் 'இக்கட்டான நிலையும்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்;

'சிறிசேனவிற்கு உத்தியோக பூர்வமான முறையில் ஆதரவு அளிப்பதில்லையென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானிக்கலாம். அதற்குப் பதில் மறைமுகமாகவோ உத்தியோக பூர்வமற்ற முறையிலோ தமது ஆதரவை வழங்கலாம். இது சாத்தியமான ஒரு முடிவு ஆகும். சிறிசேனவிற்கும் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் இருந்து அந்த ஒப்பந்தத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான வெளிப்படையான ஆபத்து உள்ளடக்கப்பட்டிருந்தால் அல்லது அதிகாரப்பரவலாக்கலுக்கு மாறான கருத்துகள் கூறப்பட்டிருந்தால் இம் முடிவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்யலாம். அவ்வாறு ஒரு நிலை இருக்குமானால் அது சிறிசேனவிற்குப் பாதகமான ஒன்று தான். ஏனெனில் தேர்தல் பற்றித் தமிழர்கள் அக்கறையற்ற மனோபாவத்துடன் தான் இருப்பார்கள். அவர்களை வாக்குச் சாவடிக்குச் செல்ல வைப்பதாயின் ஏதாவது ஒரு பெரிய தூண்டல் இருக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் அத்தகைய தூண்டலைக் கொடுக்க முடியும்.'

எனது கட்டுரையின் முற்பகுதியில் நான் சிறிசேனவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஒப்பிட்டுச் சில கருத்துகளைக் கூறினேன். சிறிசேனவைத் தமிழர்களுக்குத் தெரியாது. அவரின் தகுதிகள் என்ன என்பதும் தமிழ் மக்களுக்குத் தெரியாது, சிறுபான்மையினர் பிரச்சினையில் அவர் என்ன செய்யப்போகிறார் என்பதும் தமிழ் மக்களுக்குத் தெரியாது, எனக் குறிப்பிட்டேன். இந்தப் பின்னணியில் தான் கீதபொன்கலன் 'அவர்களை (தமிழர்களை) வாக்குச் சாவடிக்குச் செல்ல வைப்பதாயின் ஏதாவது ஒரு பெரிய தூண்டல் இருக்க வேண்டும்' என்று எழுதினார். இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நோக்கிச் சொல்லப்பட்டது. அத்தோடு கீதபொன்கலன் இவ்வாறு கூறினார். 'சிறிசேன தமிழ் வாக்குகள் தனக்குக் கிடைக்கும் என்றும், தாமாகவே தமிழர்கள் முன்வந்து தனக்கு வாக்களிப்பார்கள் என்றும் நினைத்தால் அது தவறு!' கீதபொன்கலன் தனது கருத்தைத் இத்தேர்தல் தொடர்பாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். அவர் பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டின்படியே இப்படிக்கூறினார். ஆயினும் இவ்விடயம் பற்றி இன்னும் சில முக்கிய அம்சங்கள் உள்ளன. நான் இங்கு ஒரு கேள்வியை அல்லது சில கேள்விகளை எழுப்ப விரும்புகிறேன்.

பொது எதிரணி வேட்பாளருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் புறத்தில் தமிழர் தரப்பு எப்படிச் சிந்திக்கிறது என்பதைப் பார்ப்போம். ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் பிரிவு) தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். எதிர்வரும் தேர்தல் பற்றியும், பிரதான இரண்டு வேட்பாளர்கள் பற்றியும் அவர் திரும்ப திரும்பக் கூறுகின்ற அபிப்பிராயம் 2014 டிசம்பர் 8 ஆம் திகதிய 'டெய்லி மிரர்' பத்திரிகையில் பிரசுரமானது.

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது ஏதாவது வகையில் முறைசார் தன்மையுடைய உடன்பாட்டை வைத்துக் கொள்ளுதல் தவிர்க்கப்படுவதற்குப் பின்னால் இருக்கக்கூடிய அனுமானம் இலங்கை சமூகத்தில் தமிழர்கள் தீண்டப்படாத, தீண்டப்படக் கூடாத ஒரு பிரிவினர் என்பதேயாகும். எதிர்காலத்தில் இணக்கப்பாடொன்று ஏற்படுவதற்கு தடையாக இருக்கும் கருத்தாக இது உள்ளது**

ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட முடியுமா? மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றிபெறுவதற்கு அத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தம் எந்தளவுக்கு உதவி செய்யும்?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது ஏதாவது வகையில் முறைசார் தன்மையுடைய உடன்பாட்டை வைத்துக் கொள்ளுதல் தவிர்க்கப்படுவதற்குப் பின்னால் ஒரு அனுமானம் உள்ளது. இலங்கைச் சமூகத்தில் தமிழர்கள் தீண்டப்படாத, தீண்டப்படக் கூடாத ஒரு பிரிவினர் என்பதே இந்த அனுமானம். அவர்களை பிறர் எவரும் ஒரு தடியால் கூட எட்டி நின்று தொடுவது கூடப் பிழை என்ற கருத்தும் இந்த அனுமானத்தில் உள்ளடங்கி உள்ளது. எதிர்காலத்தில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படுவதற்குத் தடையாக இருக்கும் கருத்தாக இது உள்ளது. அத்துடன் தமிழ்த் தீவிரவாதிகள் மீண்டும் மீண்டும் கடந்த காலத்தில் பிரிவினை வாதத்திலும் தம்மை தனிமைப்படுத்திக் கொள்வதிலும் முனைந்தார்கள் என்பதற்கான காரணத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது. மறு

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன என்பது கூறப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர வைக்கும் திட்டம் எதுவும் இல்லை. பொது வேட்பாளர் தமக்குப் பின்னால் நிற்கும் தீவிரவாத இனவாத சக்திகளின் கருத்துகளையே வெளியிட்டு வருகிறார். அரசியல் தீர்வு என்ற விடயத்தைவிட்டு விடுவோம். தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகள் பற்றிக் கூடக் கவனம் செலுத்தப்படவில்லை''.

முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தலும், இணக்கப்பாட்டை ஏற்படுத்தலும் என்ற நோக்கில் சிந்தித்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சிந்தனை முற்றிலும் தவறானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழர்களின் மைய நீரோட்ட அரசியல் சக்திகள் தமிழர் பிரச்சினைக்கான தீர்வுகள் சிங்கள சமூகத்தில் இருந்தோ அல்லது சிங்களத் தலைவர்களிடம் இருந்தோ தானாகவே வந்துசேரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு தமிழர் தரப்பு ஒற்றுமையோடு செயற்படவேண்டும். சிங்களவர் தரப்புடன் பரஸ்பர இணக்கச் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். அவ்வாறு ஒத்துழைக்காத நிலைப்பாட்டையே சுரேஷ் பிரேமசந்திரனின் கூற்று வெளிப்படுத்துகிறது. இது தொழிற்சங்கம் ஒன்று பேரம்பேசும்போது எடுக்கும் தீவிர வாதக் கருத்தியலுக்கு ஒப்பானது. அதில் இருந்து தோன்றிய ஒன்று, இக் கருத்தியல் வேலை கொள்வோர்- வேலையாள் எதிர்நிலைக்கு அழுத்தம் கொடுப்பது. இங்கே இது ஆளுவோர்- ஆளப்படுவோர் என்ற எதிர் நிலை உறவு முறையாக வெளிப்படுகிறது. தமிழ்ச்சமூகமும் அவர்களது பிரதிநிதிகளும் தம்மை வடக்குக் கிழக்கு என்ற குறுகிய எல்லைக்குள் தனிமைப்படுத்திக்கொள்ளாது நாட்டின் பொதுவான அரசியல் செயல் முறையில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது ஒரு அடி முன்னோக்கி வைப்பதாக இருக்கும். கலாநிதி ராஜசிங்கம் நரேந்திரன் கூறியிருப்பதை இங்கே மேற்கோளாகத் தர விரும்புகிறேன். அவருடைய கருத்து நாம் இக்கட்டுரையில் விவாதிக்கும் விடயத்திற்கு மிகப் பொருத்தமானது.

"இலங்கையில் வாழும் தமிழ் மக்களாகிய நாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் இலங்கையின் மக்கள் என்ற முறையில் வாக்களிப்பில் கலந்துகொள்ள வேண்டும். பாராளுமன்றத் தேர்தல்களில் நாம் எம்மை இலங்கையின் தமிழ் மக்கள் என்று கருதிக்கொண்டு வாக்களிப்போம். மாகாண சபைத் தேர்தல்களில் வாக்களிக்கும் போது நாம் தமிழர்கள் என்று கருதிக்கொண்டு வாக்களிப்போம். இன்றைய கட்டத்தில் மூன்று வெவ்வேறு தேர்தல்களுக்கும் வாக்களிப்பில் நாம் வைத்துக் கொள்ள வேண்டிய திட்டம் இவ்வாறு இருத்தல் நல்லது.

### இன்றைய தேவை

பொதுவேட்பாளர் என்று ஒருவரை நிறுத்தும் போது அவரையும் அவரது அரசியல் அமைப்பையும் பலர் பல கோணத்தில் நின்று அணுகுவர். அவருடன் வெவ்வேறு அக்கறைக் குழுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் அரசியல் குழுக்களும் புரிந்து ணர்வை ஏற்படுத்த முனையும். ஜாதிகஹெல உறுமயகூட அப்படி யான ஒரு புரிந்துணர்வை சிறிசேனவு டன் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அதேவேளை இப்பொழுது வேட் பாளர் மிக முக்கியமான பிரிவினரான தமிழர்களுடன் ஒரு புரிந்துணர்வுக்கு வந்திருக்க வேண்டியது அவர் மீதுள்ள மிகப்பெரிய பொறுப்பாகும். தமிழர்களுடனும் அவர்களது பிர தான பிரதிநிதிகளுடனும் உடன்பாட் டிற்கு வந்திருக்க வேண்டும். இப்பின் னணியில் தான் பொதுவேட்பாளரு க்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு க்கும் புரிந்துணர்வு உடன்பாடு ஏற் படுத்தப்படுதல் அவசியமாகிறது. இரு சமூகங்களுக்கும் இடையில் உள்ள பிளவையும் இச்சமூகங்களின் அரசியல் கட்சிகளுக்கு இடையிலான பிளவையும் நீக்குவதற்கு வழி செய்ய வேண்டும். இத்தகைய புரிந்துணர்வு வாக்குகளின் அடிப்படையில் மட்டும் ஏற்படுத்தப்படவேண்டியதன்று. பொதுவேட்பாளர் (அவரது கூட்ட ணியும்) எதிர்காலத்தில் அமைக்கப் படும் அரசு ஒரு தேசிய அரசாக/ எல் லாக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாகக் குறைந்தது இருவருடங்கள் செயற்படும் என்று அறிவித்துள்ளார். இது பாராட்டக்கூடிய ஒரு விடயம். சிறிசேனவும் ஜாதிக ஹெல உறும யவும் ஒரு உடன்பாட்டிற்கு வந்திருப் பது, சிறிசேனவும்- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உடன்பாட்டுக்கு வரு வதற்குத் தடையாக அமைய வேண் டியதில்லை. ஜாதிகஹெல உறுமய வின் தலைவர் சம்பிக்க ரணவக்கவே இதனை வெளிப்படையாகத் தெரி வித்துள்ளார்.

தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் புரிந்துணர்வு உடன்பாடு தீர்வு வழ ங்கமாட்டாது என்பது தெளிவு. ஆயி னும் இரு சமூகங்களிற்கும் இடையில் இணக்கத்திற்குத் தடையாக இருக்கும் விடயங்களை அகற்றுவதில் முதற்படி யாக இது அமையும். தமக்கிடையே யுள்ள பிரச்சினைகளைப் பரஸ்பரம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என் பதை இருதரப்பினரும் இக்கட்டத்தில் அறிவிக்க முடியும். பல்வேறு சமூகத் தினரும் எதிர்நோக்கும் பிரச்சினைக ளையும் பேசித் தீர்வு காண்பது என்று உடன்பாட்டுக்கு வரமுடியும். ஜனாதி பதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியும் இதுகாலவரை தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பையும், தமிழ்ச் சமூ கத்தையும், தமிழரின் புலம் பெயர்ந் தோர் சமூகத்தையும் திரும்பத் திரும்ப ஏமாற்றி வந்ததோடு அவர்களைப் பலிக்கடாக்களாக்கியதேயன்றி நியாயமான தீர்வினையோ இணைக்



**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அல்லது தமிழர்களின் மைய நீரோட்ட அரசியல் சக்திகள் தமிழர் பிரச்சி னைக்கான தீர்வுகள் சிங்கள சமூகத்திலிருந்தோ அல்லது சிங்களத்தலைவர்களிடமிருந்தோ தானா கவே வந்து சேரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு தமிழர் தரப்பு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அவ்வாறு ஒத்துழைக்காத நிலைப்பாட் டையே சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன**

கப்பாட்டையோ கொண்டு வராமல் காலம் கடத்தினர். யுத்தம் முடிந்த பின்பும் யுத்த வழியில் செல்வதற்கே அவர்கள் முயற்சித்தனர்.

தேர்தல் ஒரு சந்தர்ப்பம் மட்டுமே. தமிழர்-சிங்களவர் என்ற இரு சமூகங் களும் தமக்கிடையிலான வேற்றுமை களிடையே பொதுவான இணங்கக் கூடிய விடயங்களைக்கண்டுகொள்ள வேண்டும். இதேபோல் முஸ்லிம் சமூ கமும் ஒன்றுபடுவதற்கான பொதுவி டயங்களைக் கண்டு பிடிக்க வேண் டும். ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் மீளக்கொண்டுவரு தல், நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதி செய்தல், நல்லாட்சியை ஏற் படுத்துதல், ஆகக்குறைந்தது நிறை வேற்று ஜனாதிபதியிடமிருக்கும் அளவுக்கு மீறிய அதிகாரங்களைக் குறைத்தல் ஆகிய விடயங்கள் இரு பகுதியினரும் இணங்கிக் கொள்ளக் கூடிய பொது விடயங்களாகும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் தாம் ஒப் பமிடப்போகும் புரிந்துணர்வு உடன் படிக்கையில் உள்ளடக்கப்படவேண் டிய விடயங்களைக் கூறலாம். என் னைப் பொறுத்தளவில் தமிழ்ச் சமூகத்திற்கு அவசியமானவை எவை எனக்கருதும் நான்கு விடயங்கள் உள்ளன. 1) கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வின் (LLRC) சிபார்சுகளை முழுமை யாக நடைமுறைப்படுத்தல் 2) வடக்கு மாகாண சபை, கிழக்கு மாகாணசபை என்பன செயற்படுவதற்கு ஏற்ற நிதிக ளைத் தடையின்றி வழங்குதல் 3) அத் துமீறிய வகையில் பலாத்காரத்தை உபயோகித்து குடியேற்றங்களைச் செய்வதை நிறுத்துதல் 4) நாட்டின் பாதுகாப்பிற்கும் ஆட்புல இறை மைக்கும் பங்கம் ஏற்படாத வகையில் இராணுவத்தை வடக்கில் இருந்து படிப்படியாக அகற்றிக்கொள்ளுதல். மீள் குடியமர்த்தல் புனர்வாழ்வு, அபி விருத்தி ஆகிய நடவடிக்கைகள் தடை யின்றித் தொடர வேண்டும் என்பதும் மேற்குறித்த நான்கு விடயங்களில் உட்கிடக்கை ஆகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தல் 2015

# ரணில் விக்கிரமசிங்க இவ்வருடத்தின் முக்கிய பிரமுகர்



எதிரணியின் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதற்கு சந்திகா குமாரதுங்கவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலமாக தனது கட்சிக்குள்ளும் அரசாங்கத்திற்குள்ளும் இருந்த சகல சதிகாரர்களையும் விக்கிரமசிங்க திணறச் செய்துவிட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 ஜூலை பொதுவேலை நிறுத்தத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இருந்த பயிற்சி ஆசிரியர்களுக்குத் தலைமை தாங்கியதற்காக ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினால் நான் வேலை நீக்கம் செய்யப்பட்டேன். அப்போது கல்வியமைச்சராக இருந்தவர் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. மூன்றுவருடங்களுக்கும் கூடுதலான காலமாக நான் சொல்லொணா கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. வேலைநிறுத்துக்காரர்களில் சுமார் 50 பேர் தற்கொலை செய்துகொண்டார்கள். நான் ஒரு போதுமே ஐக்கியதேசியக்கட்சிக்கு வாக்களித்ததில்லை. இனிமேலும் வாக்களிக்கப்போவதில்லை. அவ்வாறு இருந்தும்கூட, ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி எழுதுவதற்கு தீர்மானித்தேன். அவரைத் தாக்குவதற்காக அல்ல, பாராட்டுவதற்காகவே.

மகிந்த ராஜபக்ஷவையும் அவரது பரிவாரத்தையும் வீட்டுக்கு அனுப்புவதற்கு எதிரணியின் பொதுவேட்பாளராக தேர்தலில் களமிறக்குவதற்கு ஒரு நல்ல மனிதரை அல்லது ஒரு நல்ல பெண்மணியை இந்த நாட்டில் உள்ள நல்லவர்கள் எல்லோரும் தேடிக்கொண்டிருந்தார்கள் மைத்திரிபால சிறிசேன தனது அமைச்சர் பதவியையெல்லாம் துறந்து அரசாங்கத்திலிருந்து வெளியேறும்வரை. நானும் கூட அவ்வப்போது ஊடகங்களுக்கு கட்டுரைகளை எழுதுவது உட்பட பல்வேறு வழிகளில் அந்த உன்னதமான முயற்சிக்கு என்னாலியன்ற பங்களிப்பைச்செய்து வந்தேன். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உறுதியான நிலைப்பாட்டைக்கொண்டவர் என்ற காரணத்தால், அவரையே பொது வேட்பாளராக எதிர்க்கட்சிகள் நிறுத்தவேண்டுமென்று வலியுறுத்த முயன்றேன். ஐ.தே.க.பிளவுபட்டு, சீர்குலைந்து போயிருப்பதால் மகிந்தவை தோற்கடிக்க விக்கிரமசிங்கவினால் முடியாமற் போகும் என்று ஏனைய பலரைப் போலவே எனக்கும் தெரியும். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் விக்கிரமசிங்க அக்கறை கொண்டிருக்கவில்லை என்றே அந்த நேரத்தில் தோன்றியது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரான பிரசார இயக்கமொன்றைத் தொடங்கியவர் என்பதால் வண.மாதுளுவாவே சோபித தேரரே ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு எதிராகப் போட்டியிடுவார் என்றே பலரும் நினைத்தனர். ஆனால், மகிந்தவைத் தோற்கடிப்பதில் அவருக்கு இருக்கக்கூடிய ஆற்றல் குறித்தும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. அவர் ஒரு பௌத்த பிக்குவாக இருப்பதால் அவரை ஆதரித்து பௌத்தர்கள் அல்லாத சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் வாக்களிப்பது சாத்தியமில்லை என்று நம்பப்பட்டது.

அதேவேளை, எமது இன்றைய 'ஹீரோ' ரணில் விக்கிரமசிங்க நவீன அரசியல் போக்குகள் குறித்து கற்றுக்கொள்வதற்கு அமெரிக்கா செல்லப்போவதாக அறிவித்தார். அப்போது அரசியல் கற்பதற்கு அமெரிக்கா போவதற்குப் பதிலாக அதே அரசியலை மெரமுலான (ஜனாதிபதியின் வீடு)யில் ரணில் கற்றுக்கொள்ள முடியும் என்று மகிந்த ராஜபக்ஷ நையாண்டியாகச் சொன்னதைக் காணக்கூடியதாக இருந்தது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இல்லாத அரசியலமைப்பொன்றை வரைவது எவ்வாறு என்று கற்றுக்கொள்ளவருமாறு மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து ரணிலுக்கு அழைப்பொன்று வந்தது. அதேவேளை, அந்த நிறுவனத்தில் உள்ள மாணவர்களுக்கு ஆசிய பிராந்திய விவகாரங்கள் தொடர்பில் விரிவுரைகளை நிகழ்த்துமாறும் அவரிடம் கேட்கப்பட்டது. இவ்வருடம் ஏப்ரில் மாத ஆரம்பத்தில் அமெரிக்காவுக்கு கிளம்பிய விக்கிரமசிங்க ஒரு மாதத்துக்குப் பிறகு திரும்பிவந்தார். நாடு திரும்பிய கையோடு அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக வெளியிட்ட அறிவிப்பு வெற்றி பெறக்கூடிய ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டுமென்று இயக்கத்தை முன்னெடுத்துக்கொண்டிருந்தவர்களை ஊக்கங்கெடச் செய்துவிட்டது.



பி.பேர்ட்டி ரணவீரகே

சோபித தேரோ மேற்கொண்டிருந்த முயற்சிகளுக்கும் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சிக்காக போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தவர்களுக்கும் விக்கிரமசிங்கவின் அறிவிப்பு பாரதூரமான பாதிப்பாகப் போய்விட்டது. நாம் பெரும் ஏமாற்றமடைந்தோம். ஏனென்றால் மகிந்தவுக்கு சவாலைத் தோற்றுவிக்கக் கூடியவராக விக்கிரமசிங்க இல்

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக ரணில் முன்னர் பகிரங்கமாக கூறிய போதிலும் அதில் அவருக்கு அக்கறை இல்லை என்பது இப்போது வெளிச்சத்திற்கு வந்துவிட்டது அல்லவா? அவர் எந்த அளவிற்கு அரசியல் முதிர்ச்சி அடைந்தவராக இருக்கிறார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது அல்லவா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையென்பதால், மகிந்தவே மீண்டும் வெற்றிபெற்று பலவருடங்களுக்கு தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் இருக்கக்கூடிய நிலைமை தோன்றப் போகிறது என்று நாம் நினைத்தோம். ஆனால், தனது கட்சியைப் பலப்படுத்துவதற்கும் தனது உறுப்பினர்களை தன்னைச் சுற்றி அணிதிரட்டுவதற்கும் விக்கிரமசிங்க செய்கின்ற ஒரு தந்திரமாகவே இது இருக்கக்கூடும் என்று என் உள்மனம் அன்று கூறியது.

தேர்தலில் போட்டியிடப்போவதாக அவர் பகிரங்கமாகக் கூறியபோதிலும், உண்மையில் அதில் அவருக்கு அக்கறையிருக்கவில்லை என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டதல்லவா? அவர் எந்தளவுக்கு அரசியல் ரீதியில் முதிர்ச்சியடைந்தவராக இருந்தார், இப்போதும் இருக்கிறார் என்பது சந்தேகத்துக்கிடமின்றி இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது அல்லவா? மகிந்தவை தன்னால் தோற்கடிக்க இயலாமற்போகும் என்பது எம்மெல்லோரையும்விட விக்கிரமசிங்கவுக்குத்தான் நன்றாகத் தெரிந்திருந்தது. போர் வெற்றிக்குப் பிறகு மகிந்தவுக்கு எதிராக போட்டியிடும் பட்சத்தில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் தனக்கு மிகக்குறைவு என்பதனால் தான் 2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவை போட்டியிட அவர் அனுமதித்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு உத்தேசித்திருப்பதாக விக்கிரமசிங்க தெரிவித்த பிறகு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஐ.தே.க.வை அவரால் பலப்படுத்தக்கூடியதாக இருந்தது என்பதை நிகழ்வுப் போக்குகளை சற்று பின்னோக்கிப் பார்க்கும் போது எம்மால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறதல்லவா?

விக்கிரமசிங்கவின் அறிவிப்பு மகிந்தவுக்கும் அவரது பரிவாரத்துக்கும் நல்லதொரு செய்தியாக இருந்தது. ஆனால், அவரின் அந்தப் புதிய நிலைப்பாட்டை இருகாரணங்களுக்காக அவர்கள் சந்தேகித்தனர். ஒரு புறத்தில், பொதுவேட்பாளர் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்காக வண. சோபித தேரோ கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்த அதே வேளை மறுபுறத்தில், ஐ.தே.க. விக்கிரமசிங்க குழு என்றும் சஜித் பிரேமதாச குழுவென்றும் இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. ஐ.தே.க. பிளவுபட்டிருந்த நிலையில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதே சாத்தியம் என்று அவர்கள் நினைத்தார்கள். விக்கிரமசிங்கவையும் பிரேமதாசவையும் ஐக்கியப்படுத்துவதற்காக விக்கிரமசிங்கவின் முதுகுக்குப் பின்னால் மகிந்த அன்ட் கம்பனியின் ஏஜென்டான ரிறான் அலஸும் ஐ.தே.க.வின் பொதுச்செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கவும் இரகசியப்பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள் என்பது இப்போது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகிவிட்டதல்லவா? அவர்கள் இவ்வாறாக எல்லாம் நடந்துகொண்டது ஐ.தே.க.வைப் பலப்படுத்தவேண்டுமென்ற விருப்பத்தினால் அல்ல. மாறாக ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு எதிராக விக்கிரமசிங்க போட்டியிடுவதை உறுதிசெய்துகொள்வதற்குத் தான். திஸ்ஸ அத்தநாயக்க அரசாங்கத்துடன் இரகசிய பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று ரவி கருணாநாயக்க எம்.பி. அம்பலப்படுத்திய போது முதலில் அதை மறுத்த அத்தநாயக்க, பிறகு ஒத்துக்கொண்டார்.

மகிந்தவை எதிர்த்துப்போட்டியிட்டு விக்கிரமசிங்க தோல்வியுறும் பட்சத்தில், கட்சிக்குள் இரண்டாவது இடத்தில் இருக்கும் தனக்கு ஐ.தே.க.வின் தலைமைத்துவத்தை அவர் கையளிக்க வேண்டிய நிலை உருவாகும் என்று பிரேமதாச நம்பவைக்கப்பட்ட காரணத்தினாலேயே அந்தச் சதித்திட்டம் வெற்றியடைந்தது.



பிரேமதாச விக்கிரமசிங்கவுடன் ஐக்கியமாகிக் கொண்டு கட்சியின் பிரதித் தலைவர் பதவியை மீண்டும் ஏற்றுக்கொண்டதுடன் நின்று விடாமல், ஜனாதிபதித் தேர்தலில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்பதற்காக தனது உயிரைக் கூட தியாகம் செய்யத் தயாராயிருப்பதாகவும் கூறினார். தனது கடும் முயற்சிகாரணமாக கட்சியை மீண்டும் ஐக்கியப்படுத்தக் கூடியதாக இருந்தது குறித்து பெருமகிழ்ச்சியடைவதாக திஸ்ஸ அத்தநாயக்க கூறியதையும் காணக்கூடியதாக இருந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று (டிசம்பர் 8) திஸ்ஸ அத்தநாயக்க மகிந்தவுடன் இணைந்துகொண்டதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது கடந்த சில வருடங்களாக அவர் மகிந்தவினதும் அவரது பரிவாரத்தினதும் இரகசிய ஏஜென்டாக ஐ.தே.க.வுக்குள் இயங்கி வந்திருக்கிறார் என்றே நம்பவேண்டியிருக்கிறது. உண்மை நிலையைக் கண்டறிய விரிவான விசாரணையொன்றை முடுக்கி விடவேண்டியது ஐ.தே.க. வின் பொறுப்பாகும். தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன எதிரணியின் பொதுவேட்பாளராகக் களமிறங்கியதையடுத்து கட்சியினர் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய சோர்வைப் போக்குவதற்கு உடனடியாக ஐ.தே.க.வுக்கு அதிர்ச்சி தரக்கூடிய ஒரு கட்சித் தாவலை அரங்கேற்ற வேண்டியது மகிந்தவுக்கு அவசரமாக அப்போது தேவையாக இருந்தது.

மீண்டும் விக்கிரமசிங்கவைப் பற்றி பார்ப்போம். அவர் கூர்மதிமிக்கதொரு அரசியல்வாதி என்பதால் சதிகாரர்கள் வைத்த பொறியில் வீழ்ந்துவிடவில்லை. மகிந்தவைத் தோற்கடிக்கக்கூடிய அளவுக்கு வாக்காளர்கள் மத்தியில் போதுமான செல்வாக்கு தனக்கு இல்லை என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். சந்திரிகாவை அல்லது வேறு ஒருவரை பொதுவேட்பாளராகக் களமிறக்குவதற்கு அவருடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் மூலமாக தனது கட்சிக்குள்ளும் அரசாங்கத்திற்குள்ளும் இருந்த சகல சதிகாரர்களையும் விக்கிரமசிங்க மடக்கித் திணறச் செய்துவிட்டார். சஜித் பிரேமதாச மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க போன்ற சில ஐ.தே.க. தலைவர்கள் தன்னை கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து அகற்றுவதற்கு மேற்கொண்ட சகல சதி முயற்சிகளையும் மாத்திரமல்ல, இன்னொரு 8 வருடங்களுக்கு தொடர்ந்து ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்கு மகிந்த மேற்கொண்ட முயற்சிகளையும் கூட விக்கிரமசிங்க இறுதியில் தோற்கடித்துவிட்டார். இலங்கையில் உள்ள கடவுள்களின் ஆசீர்வாதங்களை மாத்திரமல்ல, இந்தியாவில் உள்ள கடவுள்களின் ஆசீர்வாதங்களையும் மகிந்த வேண்டி நிற்பதுடன் கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டி பிரசாரங்களை அவர் முன்னெடுப்பதனால் அவரின் தோல்வி குறித்து இப்போதைக்கு எதிர்வு கூறுவது சாத்தியமானதல்ல. கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பலருடன் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு அரசியல் நிலைவரங்களைத் தெரிந்துகொள்ள முயற்சித்து வந்திருக்கிறேன். அனேகமாக படித்தவர்கள் சகலரும் மாற்றம் ஒன்று அவசியம் என்றும் அதற்காக மைத்திரிபாலவுக்கே வாக்களிக்கப்போவதாகவும் கூறினார்கள்.

அடுத்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பிறகு புதிய யுகம் ஒன்று உதயமாவதைக் காண இலட்சக் கணக்கான மக்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் மகிந்தவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு விக்கிரமசிங்க தீர்மானித்திருந்தால், இன்று எஞ்சியிருக்கக்கூடிய சொற்ப ஜனநாயகத்தையும் மகிந்த தனது மூன்றாவது பதவிக்காலத்தில் குழி தோண்டிப் புதைப்பார் என்பதில் சந்தேகம் இருக்காது.

விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசியலமைப்பும் ஆட்சியுமே நாட்டின் சீரழிவுக்கு வழிவகுத்தன என்றபோதிலும், மைத்திரிபாலவை ஆதரிக்க முன்வந்து சிறப்பான எதிர்காலத்துக்காக எதிரணியின் அரசியல் வேலைத்திட்டத்துக்கும் இணக்கம் தெரிவித்ததன் மூலமாக விக்கிரமசிங்க பெரும் நாட்டுக்கு மகத்தான சேவையொன்றைச் செய்திருக்கிறார். எனவே, அவரை இவ்வருடத்தின் சிறந்த முக்கிய பிரமுகர் (Man of the year) என்று பாராட்டுவதில் எனக்கு எந்தத் தயக்கமுமே இல்லை. இலட்சக்கணக்கான இலங்கையர்களும் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி தேர்தல் 2015

# வேண்டியது வாக்குகள், வேண்டாதது வாக்கு வங்கி



என்.சத்தியமூர்த்தி

தமிழர் பிரச்சினையை பொறுத்தவரை ஜனாதிபதி ராஜபக்ஷவும் மைத்திரிபாலவும் கிட்டத்தட்ட ஒரே கொள்கையையே கொண்டுள்ளனர். பாராளுமன்ற தெரிவுக்குழு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ள அதேவேளை மைத்திரிபால தமிழர் பிரச்சினையில் எந்த வாக்குறுதியையும் கூறத்தயாராக இல்லை.

தேசிய அளவிலான ஜனாதிபதித் தேர்தல் வந்தாலும் வந்தது, தமிழர்கள் யாருக்கும் 'வேண்டாத' வாக்கு வங்கியாக மீண்டும் ஒரு முறை உருவெடுத்துள்ளனர். உண்மையென்னவோ, இரண்டு முக்கிய சிங்கள கூட்டணிகளின் வேட்பாளர்களுக்கும் தமிழர்களின் வாக்குகள் வேண்டும். ஆனால், இந்த முறை அதனை கேட்டுப் பெறுவதற்கு மட்டும் அவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

இதற்குக் காரணம் இருக்கிறது. இனப்போர் முடிந்த கையோடு, தமிழர்களும் அவர்களது அரசியல் தலைமையும் பழையது அனைத்தையும் மறக்க தயாராகிவிட்டார்கள் எனலாம். போரின் முடிவும், அது முடிந்த விதமும் அதற்கு ஒரு காரணம். ஆனால், மத்திய அரசு மட்டுமல்ல, சிங்கள மக்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் நாட்டிற்கும் பெரும்பான்மை இன மக்களுக்கும் ஏற்பட்ட ஆபத்துகளை மறப்பதற்கு அவ்வளவு எளிதாக தயாரில்லை.

அவர்களைப் பொறுத்தவரையிலும், இனப்போர் நிகழ்ந்த காலம் முழுவதும், விடுதலைப் புலிகள் ஆதரவு நிலையை எடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை, கடந்த ஐந்து ஆண்டுகளாக புதிய அவதாரம் எடுக்க விழைவதை ஏற்றுக்கொள்ள இன்னமும் தயாராகவில்லை. கூட்டமைப்புத் தலைமையும், சிங்கள பகுதிகளில் சென்று அந்த மக்களை சந்திப்பதை விட்டு, கொழும்பில் சிங்கள அரசியல் தலைமைகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்துள்ளன.

ஏன், தமிழர் பகுதிகளில் கூட, கூட்டமைப்பின் இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட தலைவர்கள், கட்சியின் அரசியல் நிலைப்பாட்டிற்கு ஆதரவு திரட்டியதாக தகவல்கள் இல்லை. மாறாக, இனப்போர் முடிந்த பின்னர், மத்திய அரசின் பல வளர்ச்சிப் பணிகளையோ, மாகாண சபைத் தேர்தல்கள் உட்பட்ட சில அரசியல் முயற்சிகளையோ வரவேற்க அவர்கள் தவறி விட்டனர். அதனால், கீழ் மட்டத்தில் கூட 'தமிழ்த் தேசியம்' மற்றும் 'பிரிவினை' பேசுவோரின் கைப்பாவைகளாக கூட்டமைப்பின் தலைவர்கள் பலரும் மாறி விட்டதாகவே சிங்கள மக்கள் கருதுகிறார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியின் சில தலைவர்களும், பாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புச் செயலாளர் கோதாபய ராஜ பக்ஷ உள்ளிட்ட ஒரு சில உயர் அரசு அதிகாரிகளும் இதனை வெளிப்ப டையாகவே கூறிவருகின்றனர். ஆனால், தற்போது ஜனாதிபதித் தேர் தலில் எதிரணியின் பொது வேட்பாள ரான மைத்திரிபால சிறிசேனாவின் ஆதரவுத் தலைவர்கள் கூட இதே கருத்தையே கொண்டுள்ளனர். இதுவே, கூட்டமைப்புத் தலைமையு டன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத் துவதற்கும், தேர்தல் ஒப்பந்தம் வைத் துக் கொள்வதற்கும் அவர்கள் தயங்குவதற்கும் முக்கிய காரணம்.

## குழப்புகிறாரா மைத்திரி?

தமிழர்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி ராஜ பக்ஷவும் எதிரணி வேட்பாளர் மைத் திரிபாலவும் கிட்டத்தட்ட ஒரே கொள் கையினையே கொண்டுள்ளனர் என்று கருதலாம். இன்னும் சொல்லப்போ னால், ஜனாதிபதி ராஜபக்ஷ, இனப்பி ரச்சினை தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழு எடுக்கும் முடிவுகளை தான் ஏற்றுக்கொள்வதாக அறிவித் துள்ளார். ஆனால், அத்தகைய முடிவு களை அவர் உண்மையிலேயே ஏற் றுக்கொள்வாரா என்பது வேறு விடயம்.

அதே சமயம், எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால இதனை தனது தேர்தல் வாக்குறுதி யாக கூறுவதற்கே தயக்கம் காட்டுகி றார். இன்னும் சொல்லப்போனால், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற் றால், தனது முதல் நூறு நாள் பணித் திட்டத்தில் இனப்பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைகளை தொடங்கு வேன் என்று கூறவும் அவர் தயாராக இல்லை.

மாறாக, தான் பதவியேற்றால் பதிமூன்றாவது திருத்தத்தை மட்டுமா வது அமுல்படுத்துவேன் என்று கூட அவர் தேர்தல் வாக்குறுதி அளிப்பார் என்று கருத இடமில்லை. ஆனால், மாகாண அரசுகளுக்கு அதிகாரம் வழங்க மாட்டேன் என்பதில் மட்டும் அவர் தெளிவாக இருக்கிறார். அது போன்றே, இராணுவ அமைச்சகத் தைத் தன்னிடமே வைத்திருப்பேன் என்றும், 'போர்க் குற்றங்கள்' குறித்து சர்வதேச விசாரணை நடத்தி, இலங் கைப் பிரஜைகளை தண்டிப்பதற்கு அனுமதிக்கமாட்டேன் என்றும் சிங்கள மக்களுக்கு உறுதி அளித் துள்ளார்.

அந்த வகையில், தனது முதல் நூறு நாள் ஆட்சியிலேயே நிறைவேற்று ஜனாதிபதி பதவியை நீர்த்துப்போகச் செய்வேன் என்றும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக பதவியில் உட கார வைப்பேன் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். ஆனால், அதிலும் குழப்பம் உள்ளது.

மைத்திரிபாலவை ஆதரிக்கும் கட் சிகளில், ஐக்கிய தேசியக் கட்சி மிக முக்கியமானது. அந்தக் கட்சி, நிறை வேற்று ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால், அந்தக் கட்சிக்கு மைத்திரியை ஆத ரிப்பதை விட்டால், ஜனாதிபதித் தேர் தலில் வேறு வழியில்லை. அவரு னும் சொல்லப்போனால், மைத்திரிபா லவை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக ராஜபக்ஷ அரசின் உள்ளே இருந்து கொண்டே இயக்கி வந்தது, ஹெல உருமய என்று கூறுவோரும் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போல் அல்லாது, ஹெலஉறுமயா, நிறை வேற்று ஜனாதிபதி பதவிக்கே எதி ரல்ல. மாறாக, அந்தப் பதவியோடு ஒட்டிக்கொண்டுள்ளதாக அந்தக் கட்சி திடீரென கண்டுபிடித்துள்ள சர்வாதி காரப் போக்கையே எதிர்க்கிறது. எனவே, அவர்களைப் பொறுத்த வரையில், நிறைவேற்று ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை குறைத் துக் கொண்டால் மட்டுமே போதும்.

## தமிழர் சமூக தலைமை

இந்தப் பின்னணியில், மன்னார் ஆண்டகை இராயப்பு ஜோசப் தலை மையில் தமிழர் சமூக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

> 2010 ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் ஜனாதிபதி ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகாவையே ஆதரித்தன. என்றாலும் ராஜபக்ஷவே வெற்றி பெற்றார். சிறுபான்மை இனத்தவர்களே வாக்கு வங்கி ஆதரவு இல்லை என்றாலும் பெரும்பான்மை இனத்தவரின் ஆதரவின் மூலமே இது சாத்தியமானது. இதே காரணத்தை மனதில் நிறுத்தியே தற்போதைய தேர்தலில் இரு பிரதான வேட்பாளர்களும் தமிழ் வாக்காளர்களையும் கூட்டமைப்பையும் கண்டும் காணாதது போல் இருக்கிறார்கள்

டைய கணக்கில், கிட்டத்தட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பெரிய மாறுபாடு இல்லை என்று கூட கூறலாம்.

ஆனால், மைத்திரிபாலாவைப் போலவே ஜனாதிபதி மகிந்தவின் அணியில் இருந்து வெளியேறி, 'ஹெலஉறுமயா' கட்சியும் தற்போது எதிர்க்கட்சி அரசியல் செய்கிறது. இன்

இதற்கு முன்னரும் கூட, மத்திய அரசில் அங்கம் வகிக்காத அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் சமுதாய அமைப்புகளும் ஒன்று சேர்ந்து தங் களது அரசியல் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்று கூறி, ஆண்டகை ஜோசப் முயற்சி எடுத்தி ருந்தார். அது போன்றே, ராஜபக்ஷ அரசுடன் நடத்திய அரசியல் பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளில், சமுதாய அமைப்பு களை கலந்தாலோசிக்காமல் எந்தவித மான முடிவுகளும் எடுக்கக்கூடாது என்றும் அந்தத் தரப்பு வலியுறுத்தி வந்தது.

இந்த இரு முயற்சிகளுமே வெற்றி பெறவில்லை. சமுதாய அமைப்பின் போர்வையில், கூட்டமைப்புத் தலை மைக்கு அரசியல் தீர்வு குறித்து புதிய அழுத்தங்கள் கொடுக்கப்படுவதை விரும்பாததும் இதற்கு முக்கிய காரணம். இந்தப் பின்னணியில் தற் போதைய புதிய முயற்சி முன்னெடுக் கப்பட்டுள்ளது.

கொள்கை ரீதியாக, இரு சாராரும் பெரும்பாலும் ஒத்த கருத்தையே கொண்டுள்ளார்கள். 'ஐக்கிய இலங் கையில் அரசியல் தீர்வு' என்று இரு சாராரும் ஏற்றுக்கொண்டாலும், புதிய சமூக அமைப்பு, சமஷ்டி அமைப்பால் மட்டுமே அதனை செயல்படுத்த முடி யும் என்று மீண்டும் வலியுறுத்தி உள்ளது. இதனை அப்படியே, கூட்ட மைப்புத் தலைமை ஏற்றுக்கொண் டுள்ளது என்று கூறிவிடமுடியாது.

இதில் தான், கூட்டமைப்பின் தேர் தல் கால குழப்பங்கள் தொடங்கும் வாய்ப்பு உள்ளது. தற்போதைய நிலைவரப்படி, எதிர்க்கட்சிகளின் வேட்பாளரான மைத்திரிபால, சமஷ்டி அரசு தனக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க விடயமல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார். தேர்தல் காய்ச்சல் தொடங்குவதற்கு முன் னரே, ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவும், பதிமூன்றா வது திருத்தத்திற்கு அப்பால் சென்று புதிய அரசியல் சலுகைகளை வழங்க முடியாது என்றும் கூறியிருந்தார்.

## உறுதியற்ற செய்திகள்

தற்போதைய நிலைவரப்படி, கூட்ட மைப்புத் தலைவர் சம்பந்தன், முன், னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவை சந்தித்துப்பேசி, மைத்திரி பாலவை ஆதரிப்பதாக உறுதி கூறி யுள்ளதாக, உறுதியற்ற செய்திகள் கூற கின்றன. அது, முக்கிய விடயமல்ல. மாறாக, அத்தகைய உறுதிமொழி கொடுக்கப்பட்டிருந்தால், அதனை தமிழ்ச் சமூகம் எதிர்க்க வேண்டும் என்ற தோரணையில் புலம்பெயர்ந் தோரில் ஒரு சாராரும் அவர்களது ஆதரவு இணைய தளங்களும் செய்தி வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக் கது.

இந்தத் தரப்பினர், கூட்டமைப்பும், தமிழ் வாக்காளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்க வேண்டும் என்று கூறவில்லை. அதன் மூலமாக வே, ஜனாதிபதித் தேர்தலை, தமிழ் சமுதாயம் மீண்டும் ஒரு முறை புறக்க ணிக்க வேண்டும் என்ற வகையில் அவர்கள் மனதளவில் கருத்து கொண் டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

இது, கூட்டமைப்புத் தலைமை மீது அதிக அழுத்தம் கொடுக்கவல்லது. தமிழ் அரசியல் தலைமையை பொறுத்தவரையில், இனப்போர் முடிந்துவிட்ட காலகட்டத்தில், தேசிய அளவிலான தேர்தல்களைப் புறக்க ணிப்பதன் மூலம், தமிழ்ச் சமுதாயம் தங்களது, அரசியல் உரிமைகளையும் பெரும்பான்மை இன அரசியல் தலை மைகளிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேரம் பேசி நல்ல முடிவு எட்டுவதற்கு இருக்கக்கூடிய வாய்ப்பையும் இழந்துவிடும் என்று கருதுவதாகவே தோன்றுகிறது.

இதுவே, ஜனநாயக நாட்டில் நியாய மான அரசியல் கூட. ஆனால், தேர் தல்களைப் புறக்கணிப்பதன் மூலம், 'தமிழ்த் தேசியத்தின்' தனி முத்தி ரையை மீண்டும் பதிப்பதாக யாரா வது நினைத்தால், அதுவே மீண்டும், கடந்த காலங்களைப் போல் தமிழ்ச் சமூகத்திற்கு மாறாத காயங்களை ஏற் படுத்திவிடும் என்பதே உண்மை. இதை புலம்பெயர் தமிழர்கள் வேண் டுமானால் ஏற்றுக்கொள்ளலாம். போரின் அழிவுகளில் இருந்து மீண்டு எழுந்துவரும் அப்பாவி தமிழ் மக் களால் தாங்கிக்கொள்ள முடியாது.

கூட்டமைப்பின் வழக்கமான தேர் தல் கால குழப்பத்திற்கு அடுத்த காலத் தில் விடை கிடைக்க வேண்டும். கூட் டமைப்பின் முக்கிய உறுப்பு கட்சியான தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராஜா, கட்சித் தலைமை அனைத்து சாராரையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கும் என்று கூறியுள்ளார். ஜனாதிபதித் தேர் தலில் இரு முக்கிய வேட்பாளர் களுமே தமிழர்களுக்கு என்று எந்த வாக்குறுதியும் தரவில்லை என்று கூட் டமைப்பின் மற்றொரு தலைவரான சுரேஷ் பிரேமசந்திரன் அடிக்கோ டிட்டு காட்டி வருகிறார்.

இதற்கிடையில், பெரும்பான்மை இனத்தின் முக்கிய கட்சிகளைப் போலவே, கூட்டமைப்பிற்குள்ளும் கட்சித்தாவல்கள் நடைபெறும் வாய்ப் புகள் உள்ளதாக சில பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அது போன் றே, கூட்டமைப்பும், மத்திய அரசில் தற்போது அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸும் சேர்ந்து தேர்தல் குறித்து முடிவு எடுக்கும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

அவ்வாறு இரு கட்சிகளும் சேர்ந்து முடிவு எடுத்தால், அது குறிப்பாக கிழக்கு மாகாண சபையில் அதிரடி மாற்றங்களைக் கொண்டுவரத்தக்கது. ஆனால், அது மட்டுமே ஜனாதிபதி தேர்தலின் தலையெழுத்தை மாற்றி எழுதத்தக்கதல்ல. காரணம், கடந்த 2010ஆம் ஆண்டு தேர்தலிலும், கூட் டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் தனித்தனியாக, ஜனாதிபதி ராஜபக்ஷ விற்கு எதிராகவும், அவரை எதிர்த்து போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.


ஆனால், அந்தத் தேர்தலில் ஜனாதி பதி ராஜபக்ஷவே வெற்றி பெற்றார். சிறுபான்மை இனத்தவர்களின் வாக்கு வங்கி ஆதரவு இல்லை என்றாலும், பெரும்பான்மை இன வாக்காளர்க ளின் ஆதரவின் மூலம் மட்டுமே அது சாத்தியமானது. இதே காரணத்தை மனதில் நிறுத்தியே, தற்போதைய தேர்தலிலும், இரு முக்கிய வேட் பாளர்களும், தமிழ் வாக்காளர்க ளையும், கூட்டமைப்புத் தலை மையையும் கண்டும் காணாதது போல் இருக்கிறார்கள்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனநாயகத்தை நோக்கிய துயர்மிகு நெடும் பயணம்

தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் இரு ஆண்டுகள் மீதமாக இருக்கும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துகிறார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. எதிரணியால் நிறுத்தப்பட்டுள்ள பொது வேட்பாளர் 18ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் இந்நாட்டில் ஜனநாயகத்திற்குச் சாவு மணி அடித்து விட்டதையும், அண்மையில் நடாத்தப்பட்ட தேர்தல்களைப் பார்க்கும் போது நீதியான தேர்தல் நடைபெறுமா என்ற அச்சம் தோன்றியுள்ளதையும் சுட்டிக் காட்டுவதோடு, நாட்டில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சர்வாதிகாரி முறையை யாப்புத்திருத்தம் உருவாக்கியிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.



ஆர்.எம்.பி.சேனநாயக்க

ஜனாதிபதி மகிந்தவின் படத்துடன் கூடிய சுவரொட்டிகளும், கட்அவுட்களும் காணும் இடமெல்லாம் தெரிகின்றன. இதனைச் சட்டமுறையற்றது என்று கூறுதல் முடியாதெனினும் இது நிச்சயமாக அறநெறிக்கு மாறானது என்பதில் ஐயமில்லை. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் அவசியத்தை எடுத்துக்காட்டுவோர், இந்த அறநெறி மீறலைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இன்று ஆளும் கட்சியை விட்டு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறிவிட்டனர். ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றின் உறுப்பினர்களான இவர்களே 18 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

அது மட்டுமன்று பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க மீது எழுந்த மானமான முறையில் பழி சுமத்தி அவரை பதவி நீக்கம் செய்வதற்கும் இவர்கள் உதவினார்கள்.

இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அவ்விதம் நடந்துகொண்டார்கள் என்ற கேள்வி எழுகிறது. கட்டற்ற அதிகாரங்களை தனிநபர் ஒருவருக்கு வழங்குவதில் உள்ள ஆபத்துகளை உணராத அறிவிலிகளா இவர்கள்? இவர்களுக்கு மனச்சாட்சி என ஒன்று கிடையாதா? இப்போது இவர்களுக்கு மனச்சாட்சி உறுத்துகிறதா? அல்லது இவர்கள் மனம் மாறிப் புதுப் பிறவி எடுத்து விட்டார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித இயல்பும் பலவீனங்களும்

கட்டற்ற அதிகாரத்தை ஒரு தனி நபருக்கு வழங்க உதவிய இவர்கள் அரசியல் விஞ்ஞானம் பற்றியும் உலக வரலாறு பற்றியும் படித்திருந்தார்களானால் 'அரசியல் அதிகாரம்' என்பதன் உண்மை இயல்புகளைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அமெரிக்காவின் அரசியல் யாப்பை உருவாக்கிய முதல்வர்களில் சமஷ்டிவாதிகள் (FEDERALIST) என்போர் கூறிய வார்த்தைகள் கருத்தூன்றிப் படித்துப் பார்க்க வேண்டியவை. சமஷ்டிவாதிகளின் அறிக்கைகளில் (FEDERALIST PAPERS) இருந்து ஒரு பந்தி வருமாறு.

'அரசாங்கம் என்றால் என்ன? அது மனிதர்களின் படைப்பு அல்லவா? மனிதருக்கு உள்ள இயல்புகளும் பலவீனங்களும் அரசாங்கத்தில் வெளிப்படும் அல்லவா? மனிதர்கள் தேவர்களாக இருப்பார்களாயின் அரசாங்கம் என்ற ஒன்றே தேவையற்றது. தேவர்கள் மனிதர்களை ஆட்சி செய்தால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் உட்கட்டுப்பாடுகளோ வெளிக் கட்டுப்பாடுகளோ தேவையில்லை. அரசாங்கத்தின் ஒரு பிரிவில் அல்லது அங்கத்தில் பல அதிகாரங்களும் படிப்படியாகக் குவிந்துவிடக்கூடிய ஆபத்தைத்தடுக்க வேண்டுமானால் அப்பிரிவில் அதிகாரம் செலுத்தும் மனிதர்களின் தனிப்பட்ட உள்நோக்கங்களின் தூண்டலால் பிற பிரிவுகளின் எல்லைகளை மீறிச் செய்யும் அத்து மீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரசியல் யாப்பு வழிமுறை களை (CONSTITUTIONAL MEANS) வகுத்துரைப்பதே ஒரே ஒரு பாதுகாப்பு வழிமுறையாகும்'.

சமஷ்டிவாதிகளின் அறிக்கைகள் கட்டுப்பாடுகளும் சமன்படுத்தல்களும் (Checks and Balances) என்னும் அரசியல் யாப்பு எண்ணக்கருவை முன்வைத்து அதற்காக வாதாடும் முறையில் அமைந்துள்ளன. அரசாங்கம் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொருதுறையும் பிற இருதுறைகளையும் கட்டுப்படுத்துவனவாய் செயற்படும். ஒரு துறை எல்லை மீறும் போது மற்ற இருதுறைகளும் தம் அதிகாரத்தை உபயோகித்து அதனை அடக்கி வைப்பதால் 'கட்டுப்பாடுகளும் சமன்படுத்தல்களும்' நடைமுறையில் இருக்கும் என்பதே இக்கருத்தின் சாரமாகும். இலங்கையில் நடந்தது என்ன? 18 ஆவது திருத்தம் 'கட்டுப்பாடுகளும் சமன்படுத்தல்களும்' முழுவதையும் இல்லாமல் செய்துவிட்டது. 18 ஆவது திருத்தத்திற்கு முன்னரே இலங்கையின் இன்றைய அரசியல் யாப்பு ஜனாதிபதிக்கு குற்றப் பொறுப்பில் இருந்து விலக்கையும் பாதுகாப்பையும் வழங்கிவிட்டது. அரசியல் யாப்பு ரீதியான கடமைகளைச் செய்யும்போது ஜனாதிபதி இழைக்கும் குற்றங்களில் இருந்து பாதுகாப்பை வழங்கும் ஏற்பாடுகள் அமெரிக்காவினதும், பிரெஞ்சு நாட்டினதும் அரசியல் யாப்புகளில் உள்ளன. இதற்கு மாறாக இலங்கையின் அரசியல் யாப்பு ஜனாதிபதியின் தனிப்பட்ட குற்றச் செயல்களுக்கும் விலக்களிப்புச் செய்துள்ளது. ஜனாதிபதி ஆட்கொலை என்ற குற்றச்செயலைச் செய்தால் கூட பூரணமான விலக்களிப்பையும் பாதுகாப்பையும் பெறுகிறார். இவ்வாறான பூரண விலக்களிப்பும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதால் ஜனாதிபதி இழைக்கக்கூடிய எந்தக் குற்றச்செயலுக்கும் சட்ட மீறல்களுக்கும் நீதித்துறைக்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு கிடையாது. பண்டைய ரோமாபுரியின் அரசியல் ஞானிகள் காவலர்களை காவல் செய்வது எப்படி? என்ற கேள்வியைக் கேட்டார்கள். (வேலியே பயிரை மேய்வதா?) மொ-ர் இந்தப் பழைய கேள்விக்கு அரசியல் விஞ்ஞானிகளும் அரசியல் ஞானிகளும் 'கட்டுப்பாடுகளும் சமன்படுத்தல்களும்' (Checks And Balances) என்ற உயர்ந்த தத்துவத்தை விடையாகத் தந்துள்ளார்கள்.

18ஆவது திருத்தம் கொண்டுவரப் படுவதற்கு முன்னரே இலங்கை இன்றைய அரசியல் யாப்பு ஜனாதிபதிக்கு குற்றப் பொறுப்பிலிருந்து விலக்கையும் பாதுகாப்பையும் வழங்கி விட்டது. அரசியல் யாப்பு ரீதியான கடமைகளைச் செய்யும் போது ஜனாதிபதி இழைக்கும் குற்றங்களிலிருந்து பாதுகாப்பை வழங்கும் ஏற்பாடுகள் அமெரிக்க, பிரெஞ்சு அரசியல் யாப்புகளில் உள்ளன. ஆனால் இதற்கு மாறாக இலங்கையின் அரசியல் யாப்பு ஜனாதிபதியின் தனிப்பட்ட குற்றச்செயல்களுக்கும் விலக்களித்துவிட்டது.

## மனித உரிமைகளும் பொருளாதாரச் சுதந்திரங்களும்

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனம் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்டது. ஐ.நா.வின் உறுப்பு நாடுகளில் ஒன்று என்ற வகையில் எமது நாட்டு அரசாங்கமும் இதில் ஒப்பமிட்டுள்ளது. தார்மீக பண்பாட்டுச் சுதந்திரம், மனச்சாட்சியின்படி நடப்பதற்கான சுதந்திரம், கருத்துகள், தகவல்களைப் பரிமாறுவதற்குரிய சுதந்திரம் என்பன ஜனநாயகம் நிலைபெற வேண்டுமாயின் அவசியம் பேணப்படவேண்டியவை. பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்திக்கும் இச்சுதந்திரங்கள் இன்றியமையாத வை. தனிநபரின் சுய முயற்சிக்கு உரிய ஊக்கு விப்பை வழங்கும் சுதந்திரமான பொருளாதார முறை அவசியமானது. அதுவே தனிநபரிடம் உள்ளு றையும் ஆற்றலையும் புத்தாக்கத் திறனையும் வெளிக் கொணரவல்லது. ஆனால் மனித இயல்பை மாற்றி அமைத்துவிடலாம் என்று நம்பும் இடதுசாரிகள் இக் கருத்துகளை ஏற்பதில்லை.

தகவல்களைப் பெறும் உரிமை சுதந்திரம் இன்று எமக்கு உள்ளதா? தகவல் பெறும் உரிமை பற்றிய சட்ட வரைவு பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்பட்ட தல்லவா? ஏன் பாராளுமன்றம் இதனைப் புறந்தள்ளி யது? ஏன் இது சட்டமாக்கப்படவில்லை? தனிநபர் கள் விரும்பியபடி பொருளாதார நடவடிக்கைகளில் இன்று ஈடுபட முடிகிறது. அடிவருடிகளின் முதலா ளித்துவம் இன்று மேலோங்கி நிற்பதால் செல்வாக் குள்ளவர்கள் மட்டுமே சுதந்திரத்தோடு பொருளா தார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் அல்லவா? சுதந்திரமான சந்தைப் பொருளாதாரம் என்றால் போட்டிக்கு இடம் இருக்க வேண்டும். நுழைவுக்கான சுதந்திரத்தையே போட்டிச் சந்தை குறிப்பிடுகிறது. தொழிற்துறைகளிலும் விரும்பிய பொருளாதார முயற்சிகளிலும் ஈடுபடும் சுதந்திரம் இன்று மக்களு க்கு இருக்கிறதா?

நமக்கு நேர்மையான அரசு ஒன்று தேவை. அது நேர்மையானதாக மட்டுமல்லாமல் திறமைமிக்க தாயும் இருத்தல் வேண்டும். மக்களால் தெரிவு செய் யப்பட்டவர்கள் தான் ஆட்சி செய்ய வேண்டும் என் பது மட்டுமல்ல தெரிவு செய்யப்படுபவர்கள் திறமை மிக்கவர்களாய் நல்லாட்சியை எமக்கு வழங்கக்கூடி யவர்களாயும் இருத்தல் வேண்டும். இத்தகையோர் அரசின் நிறை வேற்றுத்துறைக்குள் (Executive branch) இருத்தலும் வேண்டும். பெரிக்கிள்ஸ் (Pericles) என்ற பண்டைய தத்துவஞானி தேர்தல் முறை மூலம் நிறைவேற்றுத்துறைக்குப் பொருத்தமான திற மைசாலிகளை தேர்ந்துகொள்ளும் ஆற்றல் சாதாரண மக்களிடம் இல்லை என்றொரு கருத்தைக் கூறினார். இவரின் இக்கருத்து இக்காலத்து ஜனாதிபதி முறை மைக்குள் புகுந்துள்ள ஒரு கருத்தாகும். இதன்படி தான் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி தனக்கு வேண்டிய அமைச்சர்களையும் பாராளுமன் றத்தில் இருந்து தெரிந்துகொள்ளவேண்டியதில்லை என்ற விதி (அமெரிக்க அரசியல் யாப்பில் மொ-ர்) புகுந்துள்ளது; எமது நாட்டில் நடப்பது என்ன? ஜனா திபதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொருளா தார நன்மைகளையும் சலுகைகளையும் அள்ளிக் கொடுப்பதற்காக அவர்களை அமைச்சர் பதவிகளு க்கு நியமனம் செய்கிறார். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்டிப்போட்டு தன் காலடியில் விழவைக்கும் அரசியல் ஊழலை இன்று எதிரணிக் குத் தாவி ஆதரவை வழங்குவோர் அன்று மகிழ்ச்சி

> அடிவருடிகளின் முதலாளித்துவம் இன்று மேலோங்கி நிற்பதால் செல் வாக்குள்ளவர்கள் மட்டுமே சுதந்திரத் தோடு பொருளாதார நடவடிக்கைக ளில் ஈடுபடுகிறார்கள். சுதந்திரமான சந்தைப்பொருளாதாரம் என்றால் போட்டிக்கு இடமிருக்க வேண்டும். நுழைவுக்கான சுதந்திரத்தையே போட்டிச்சந்தை குறிப்பிடுகிறது. தொழிற்துறைகளிலும் விரும்பிய பொருளாதார முயற்சிகளிலும் ஈடு படும் சுதந்திரம் இன்று மக்களுக்கு இருக்கிறதா?

யோடு ஏற்றுக்கொண்டார்கள். இலஞ்சத்தைக் கொடுப்பவரும் அதனைப் பெறுபவரும் சமமான குற்றப்பொறுப்பை உடையவர்கள் என்பது இலஞ்ச மோசடி தொடர்பான சட்டம் சொல்லும் உண்மை யாகும்.

### எதிர்ப்பாளர்கள் எதிரணியுடன் ஏன் இணைந்துகொண்டார்கள்?

இன்று நிறைவேற்று ஜனாதிபதிமுறையை ஒழிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இந்த நபர் கள் அன்று 18 ஆவது திருத்தத்திற்கு ஏன் வாக்களித் தார்கள்? இவ்வாறு வாக்களித்தவர்களில் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்குள் புகுந்து கொண்ட ஆய்வறிவாளர்கள் சிலரும் உள்ளடங்கு வர். 18ஆவது யாப்புத்திருத்தத்திற்கு OPA என்ற சுருக்க எழுத்துகளால் அழைக்கப்படும் உயர்தொழி லர் கழகங்கள் நிறுவனமும் (Organization of professional Associations) தனது ஆதரவை வழங்கி யது. இச்செயல் உயர் தொழிலர் சமூகத்திற்குக் கிடைத்த பெரும் அவமானம்! OPA இன்று உயர்தொ ழிலர் அமைப்பு என்ற நிலையில் இருந்து உயர்தொ ழில் நாடி பதவிகளுக்காக அலையும் பரிதாபத்திற்கு ரியவர்களின் அமைப்பாகத் தரம் தாழ்ந்து விட்டது. அவர்கள் அரசாங்கம் செய்வது சரியா பிழையா என் பதைப் பற்றி யோசிக்காமல் தம் சுய நலன்களுக்கா கப் பந்தம் பிடிப்பவர்களாவர். அரசாங்கத்தைத் தொடர்ந்து வாயார புகழும் ஒரு பெரியார் வெளி நாட்டுத் தூதுவர் பதவியைப் பரிசாகப் பெற்றுள்ளார். உயர் தொழிலர்களின் இலட்சணம் இதுதான்!

ஆகவே நாம் இந்த அரசியல்வாதிகளதும் ஆய்வ றிவாளர்களதும் மனச்சாட்சியைத் தொட்டு

(64ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

# இலங்கையில் சீனா நிர்மாணிக்கும் துறைமுகங்களைப்பற்றி ஜப்பானுக்கு கவலையில்லை

'இலங்கையில் எந்தவொரு துறைமுகத்தையும் நிர்மாணிக்கவோ அல்லது துறைமுகங்களைப் புனரமைக்கவோ சீனாவுக்குச் சுதந்திரம் இருக்கிறது. சகல நாடுகளினதும் கடல் போக்குவரத்துகளை மேம்படுத்துவதற்கு அது நல்லது. ஜப்பான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஆனால், சீனாவின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையில்லை என்பதும் பல நாடுகளுடன் எல்லைத் தகராறுகளைக் கொண்ட சீனா தன்னையொரு இராணுவ வல்லமை கொண்ட நாடாக முன்னிலைப்படுத்த முயற்சித்துக்கொண்டிருப்பதுமே பிரச்சினையாகும்'.

இவ்வாறு கூறுகிறார் வெளியுறவு விவகாரங்கள் தொடர்பில் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் விசேட ஆலோசகராக விளங்கும் பேராசிரியர் ரொமோ ஹிகோ ரனிகுச்சி.

அண்மையில் புதுடில்லிக்கு வருகை தந்திருந்த அவர் அங்குள்ள 'சமகாலம்' செய்தியாளர் எம்.பி. வித்தியாதரனுக்கு பேட்டியொன்றை அளித்திருந்தார்.

இலங்கையில் சீனாவின் ஈடுபாடுகள் குறித்து மனந்திறந்து கருத்துகளை வெளியிட்ட பேராசிரியர் ரனிகுச்சி மீன்பிடித்துறையில் இலங்கைக்கு தொழில்நுட்ப ரீதியாகவும் மனித ஆற்றல் மேம்பாட்



எம்.பி.வித்தியாதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத் துறையிலும் உதவுவதற்கு ஜப்பான் தயாராயிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அவருடனான பேட்டியை கேள்வி- பதில் வடிவில் இங்கே தருகிறோம்.

**கேள்வி: அச்சந்தரும் வகையில் சீனா எழுச்சி கண்டுவருவதையடுத்து இந்து சமுத்திரத்திலும் இலங்கையிலும் பூகோள அரசியல் (Geopolitics) மிகவேகமாக மாற்றங்கண்டு வருகிறது. இந்தப் பின்புலத்தில், இலங்கையில் சீனாவின் செல்வாக்கைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஜப்பான் அதன் வியூகங்களை எவ்வாறு வகுக்கின்றது?**

**ரனிகுச்சி:** இலங்கையில் மிகுந்த அக்கறையுடன் சீனா நிர்மாணித்து வரும் துறைமுகத்தைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. சீனா போன்ற மிகப்பெரிய வாணிப நாட்டைப் பொறுத்தவரை, 21 ஆம் நூற்றாண்டு கடல்பட்டுப்பாதையை உருவாக்கிக் கொள்வதற்காக துறைமுகவசதிகளில் முதலீடு செய்வதில் அவர்களுக்கு பிரச்சினையிருக்கப்போவதில்லை. எமக்கும் அதைப்பற்றிச் சிக்கல் ஏதுமில்லை. ஆனால் அவர்களது இராணுவ பலத்தை அதிகரிக்கும் செயற்பாடுகள் என்று வரும்போது, கிழக்கு சீனக்கடல், தென் சீனக்கடல் மற்றும் அதற்கு அப்பாலும் இராணுவ பலத்தை பயன்படுத்துகின்ற முனைப்பு என்று வரும்போது, நாம் பல நெருக்கடிகளைக் காண்கிறோம். அதனால் சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டுமென்று ஜப்பானிய அரசாங்கம் சீனர்களை இடையறாது கேட்டுக்கொண்டிருக்கிறது. கடல் பிராந்தியம் தொடர்பான சட்டங்கள், கடல் சட்டங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைகளை முக்கியமாக இதுவிடயத்தில் குறிப்பிடலாம். பெரிய நாடுகளாயிருந்தாலென்ன, சிறிய நாடுகளாக இருந்தாலென்ன எந்தநாடுமே உறுதியாகப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இவை. இதையே நாம் இந்தியர்களுக்கும் கூறுகின்றோம். கடல் பிராந்தியத்தில் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று நாம் மிகுந்த அக்கறையுடன் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி: துறைமுகங்களையும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்வதன் மூலமாக இலங்கையில் தனது ஈடுபாட்டை அதிகரிக்க சீனா அண்மைக்காலமாக விசேட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை, அபிவிருத்திக்கு நிதியைத் தேடுவதே அதன் பிரச்சினை. எனவே, மியன்மாரில் ஜப்பான் செய்கின்ற பெருமளவு அபிவிருத்திப் பணிகளைப் போன்று இலங்கைக்கும் போதுமானளவு நிதியுதவியைச் செய்து சீனாவின் நகர்வுகளைத் தடுப்பதற்கான திட்டம் எதுவும் இருக்கிறதா?**

**ரனிகுச்சி:** எந்தத் தரப்புக்குமே பாதிப்பில்லாததாக அமையும்வரை இலங்கையில் சீனா செய்கின்ற முதலீடுகளைத் தடுக்க வேண்டுமென்றோ, சமநிலைப்படுத்த வேண்டுமென்றோ நான் நினைக்கவில்லை.

இது சீனாவுக்கு மாத்திரமல்ல, இலங்கைக்கும் நல்லதாகவே அமையும் என்று நான் நினைக்கின்றேன். சிறந்த துறைமுக வசதிகளை இலங்கை கொண்டிருக்க முடியுமாக இருந்தால், அது ஏனைய உலக நாடுகளுக்கும் பயனுடையதாக இருக்கும் என்றும் நான் நம்புகிறேன். ஏனென்றால், இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கிறது. நீண்டகாலத்துக்கு முன்பிருந்தே ஜப்பானிய வணிகக் கப்பல்கள் எரிபொருள் நிரப்புவதற்காகவும் உணவுவகைகளை வாங்கிக் கொள்வதற்காகவும் இலங்கையின் துறைமுகங்களுக்கு தற்காலிக விஜயங்களைச் செய்து வந்திருக்கின்றன. எனவே, நல்ல துறைமுக வசதிகளுடனான இலங்கை, சீனர்கள் உட்பட எவருக்குமே பயனுடையதாகும். அதனால், இலங்கையில் சீனாவின் முதலீடுகளுக்கு சரிசமவலிமை காட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்வதில் ஜப்பானுக்கு அக்கறையில்லை. இலங்கையின் சமாதான முயற்சிகளிலும் தேசத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளிலும் ஜப்பானியர்களுக்கு அக்கறையுண்டு. இலங்கையில் மனிதவள ஆற்றலை அதிகரிப்பதிலும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதிலும் ஜப்பானியர்கள் ஈடுபாடு காட்டுகிறார்கள். அதனால், இலங்கைக்கு அவசியமான நிதியுதவிகளைச் செய்வதற்கு ஜப்பான் தயாராகியிருக்கிறது. ஆனால், அத்தகைய நிதியுதவிகள் எந்தவகையிலும் சீனர்களின் ஈடுபாட்டுக்கு சரிசமவலிமை காட்டும் முயற்சிகளாக இருக்கப்போவதில்லை.

> சீனாவின் முதலீடுகளுக்கு சரி சம வலிமை காட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எமக்கு அக்கறையில்லை. இலங்கையின் சமாதான முயற்சிகளிலும் தேசத்தைக்கட்டியெழுப்பும் செயன்முறைகளிலும் அக்கறையுண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: இந்து சமுத்திரத்தில் இராணுவ பலத்தை விரிவுபடுத்துவதில் தங்களுக்கு அக்கறையில்லை என்று சீனர்கள் கூறுகின்ற அதேவேளை, எங்கெங்கு முடியுமோ அங்கங்கெல்லாம் அவர்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதிகளை இராணுவ நோக்கங்களுக்குத் தானே பயன்படுத்தி வருகின்றார்கள். முத்து மாலை (String of Pearls) கோட்பாடொன்றையும் அவர்கள் வளர்த்தெடுத்திருக்கிறார்கள். எனவே, ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் அரசாங்கத்தின் முன்னைய கொள்கைகளில் மாறுதல் ஏதாவது இருக்குமா?**

**ரனிகுச்சி:** இராணுவபலத்தை முனைப்புறுத்திக்காட்டுவதென்பது உகந்த செயல் அல்ல. அவ்வாறு செய்வது பதற்றநிலையையும் ஸ்திரமின்மையையுமே தோற்றுவிக்கும். சீனா அதன் இராணுவ வல்லமையைக் கட்டியெழுப்புவதற்கு கையாண்டிருக்கக் கூடிய வழிமுறைகள் உலகின் ஏனைய நாடுகளின் வெறுப்புணர்வையே சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன. சீனாவைப் பற்றி உலக நாடுகள் கூடுதலான அளவுக்கு சந்தேகத்தை வளர்த்துக்கொள்ளவும் பதற்ற நிலை அதிகரிக்கவுமே அவை வழி செய்திருக்கின்றன.

உலகின் ஏனைய பகுதிகளுக்கு ஒரு சமாதான ரீதியான எண்ணத்தை இன்னமும் வெளிக்காட்ட முடியுமா இல்லையா என்பதும் அந்த எண்ணத்தைப் பயன்படுத்தி தங்களது இராணுவபல அதிகரிப்பு எவருக்குமே தீங்கானது அல்ல என்று இலங்கை, பங்களாதேஷ், இந்தியா மற்றும் மியன்மார் போன்ற நாடுகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமா இல்லையா என்பதும் முற்றுமுழுதாக பெய்ஜிங்கைப் பொறுத்ததேயாகும். அவ்வாறு சீனர்கள் செய்தால்தான், அவர்கள் தாங்களாக தனித்து எதையுமே நினைத்த மாத்திரத்தில் செய்ய முடியாது என்பதையும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இருக்கின்றன என்பதையும் உணர்த்தக்கூடிய சமிக்ஞைகளை ஜப்பான் போன்ற நாடுகளினால் தொடர்ந்தும் வெளிக்காட்டக்கூடியதாக இருக்கும். எனவே, இந்தியா போன்ற நாடுகளுடன் ஜப்பான் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். அத்துடன் இலங்கையும் அவ்வாறே செயற்படுவதைக் காணவே நான் பெரிதும் விரும்புகிறேன். வேறுவார்த்தைகளில் கூறுவதானால், சீன முதலீடுகள் இலங்கைக்கு நல்லது என்பதுடன், சீன இராணுவத்தின் செயற்பாடுகள் கூடுதலான அளவுக்கு வெளிப்படைத்தன்மை கொண்டவையாகவும் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாட்டை உணர்ந்தவையாகவும் அமையுமானால், மேலும் சிறப்பாக இருக்க முடியும்.



சீனா அதன் இராணுவ வல்லமையை கட்டியெழுப்புவதற்கு கையாண்டு வரும் வழிமுறைகள் உலகின் ஏனைய நாடுகளின் வெறுப்புணர்வு சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. சீனாவைப்பற்றி உலக நாடுகள் கூடுதலான அளவிற்கு சந்தேகத்தை வளர்த்துக் கொள்ளவும் பதற்ற நிலை அதிகரிக்கவும் வழி செய்திருக்கின்றன.

**கேள்வி: ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை எவ்வாறு நீங்கள் வர்ணிக்கிறீர்கள்?**

**ரனிகுச்சி:** ஒட்டு மொத்தத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் நன்றாகவே இருக்கின்றன. ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தையடுத்து இந்த உறவுகள் மேலும் கூடுதலான அளவுக்கு நெருக்கமானவையாக்கப்பட்டுள்ளன. நான் அறிந்த வரையில், மொனோரயில் திட்டத்தை அமைக்க ஜப்பான் இலங்கைக்கு உதவப் போகின்றது என்ற பேச்சும் உள்ளது. இலங்கை ஒரு தீவாக இருப்பதால், சுனாமிக்கு தாக்குப்பிடிக்கக் கூடியதாக கடல் அணைகளை Sea walls இலங்கைக்கு வழங்கி பங்காளிகளாகிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஜப்பான் வழங்குகின்ற ஆதரவை இலங்கை மக்கள் தக்கவாறு மதிக்கிறார்கள் என்பதை ஜப்பானியர்களில் பெருமளவானோர் தெரிந்திருக்கிறார்கள். 2011 மார்ச்சில் ஜப்பானை சுனாமி தாக்கியதையடுத்து இலங்கை மக்களிடமிருந்து வந்த அனுதாப ஒருமைப்பாட்டு உணர்வைக்கண்டு ஜப்பானியர்கள் மனம் நெகிழ்ந்துபோனார்கள் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்டத் தவறக்கூடாது என்று நினைக்கிறேன். இலங்கையின் பல நகரங்களில் ஜப்பானியர்கள் மீது ஒருமைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. அதை ஜனாதிபதியும் அரசாங்கமும் உற்சாகப்படுத்தியதை நாம் அறிவோம். அத்தகைய நெருக்கமானதாக ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இருந்து வந்திருக்கின்றன. மனித ஆற்றல் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, ஆற்றல் மேம்பாடு மற்றும் பல துறைகளில் இலங்கை மக்களுடன் சேர்ந்து பணியாற்ற ஜப்பானிய அரசாங்கம் மேலும் கூடுதலான அளவுக்குத் தயாராயிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

**கேள்வி: இலங்கையர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் கொண்டிருக்கின்ற அக்கறையைப் பொறுத்தவரை, உங்களது அரசாங்கம் விசேடமான திட்டங்களைக் கொண்டிருக்கிறதா? ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***டன் உங்களுக்கு ஏதாவது உடன் படிக்கை இருக்கிறதா?***

**ரனிகுச்சி:** ஜப்பான் இலங்கைக்கு வழங்குகின்ற அபிவிருத்தி உதவிகள் பகட்டான கட்டிடங்களை, நெடுஞ்சாலைகளை, மற்றும் பாலங்களை கட்டியெழுப்பும் பணிகளுடன் பெருமளவுக்கு சம்பந்தப்பட்டவை என்று கூறிவிட முடியாது. எமது உதவிகள் இலங்கை மக்களின் ஆற்றல்களை விருத்தி செய்கின்ற செயற்திட்டங்களுடனேயே கூடுதலான அளவுக்கு சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. எனவே, இலங்கையில் மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புவதில் இருநாடுகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு போதுமான வாய்ப்புகள் இருக்கின்றன என்று நான் கருதுகின்றேன். மனித மூலதனம் என்று கூறும் போது நான் குறிப்பாக, ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொலிஸ் மற்றும் கரையோரக்காவல் படையினரை உருவாக்குகின்றதையே மனதிற் கொண்டுள்ளேன்.

**கேள்வி:** ***இலங்கையர்களுக்கு மீன்பிடித்துறையில் சில தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் நீங்கள் திட்டமிடுகின்றீர்களா? ஏனென்றால், இலங்கையர்களில் அதுவும் குறிப்பாக தமிழ் மக்களில் கணிசமான எண்ணிக்கையினர் மீன்பிடியையே தங்களது பிரதான ஜீவாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.***

**ரனிகுச்சி:** அதைப்பற்றி என்னிடம் திட்டவட்டமான தகவல் எதுவும் இல்லை. எனவே, இதுவிடயத்தில் ஜப்பானிய அரசாங்கம் எதைச் செய்கின்றது, எதைச் செய்யவில்லை என்பதை உங்களுக்கு இருக்கக்கூடிய தொடர்புகளைப் பயன்படுத்தி அறிந்துகொள்வதே நல்லது என்பதே எனது ஆலோசனை. ஆனால், இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு ஜப்பானிய அரசாங்கம் விரும்புகின்ற துறைசார் நிபுணத்துவ ஆற்றல்களைப் பொறுத்தவரை கடற்தொழிலும் முக்கியமான ஒன்று என்பதை மாத்திரம் என்னால் கூறமுடியும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான மிகவும் முக்கியமான அத்திபாரமாக மனித ஆற்றல்விருத்தியையே ஜப்பான் எப்போதுமே கருதுகிறது. அதனால், இலங்கையில் மீனவ சமுதாயத்துக்காக முன்னெடுக்கக்கூடிய பணிகளில் மனித ஆற்றல் விருத்தியுடன் தொடர்புடையவற்றில் ஜப்பானிய அரசாங்கம் எப்போதுமே மிகுந்த அக்கறை கொண்டதாக இருக்கிறது.

**கேள்வி:** ***இந்தியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் சீனாவுடன் எல்லைத் தகராறுகளைக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இந்தோ- பசுபிக் பிராந்தியத்தின் எதிர்காலம் எத்தகையதாக அமையுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்? அமெரிக்காவுடன் ஜப்பானுக்கு இருக்கின்ற கூட்டணியையும் பொருட்படுத்தாமல் சீனர்கள் ஜப்பானுடனும் அதேபோன்ற பிரச்சினைகளைக் கிளப்பியிருக்கிறார்களே? அதனால் அவர்கள் மற்றவர்களைப் பற்றி கவலைப்படுவதாக இல்லை என்றே நான் நினைக்கிறேன்.***

**ரனிகுச்சி:** இன்னும் 10, 15,20 வருடங்களில் சீனா எத்தகைய பாதையில் செல்லப் போகின்றது என்பதை அதன் தலைமைத்துவக் குழுமத்தினால் கூட சொல்ல முடியாமல் இருப்பதே இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மைகளுக்கான மிகப்பெரிய தோற்றுவாயாக இருக்கிறது என்பதே எனது அபிப்பிராயம். சீனாவின் கனவுகள் பற்றி ஜனாதிபதி சி ஜின்பிங் பல விடயங்களைக் கூறிக்கொண்டிருக்கிறார். ஆனால், 20 வருடங்களில் சீனா எத்தகையதொரு நாடாக வந்துசேரும் என்று பலரும் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுகிறார்கள். இருபது வருடங்களில் சீனா இன்னதாகத்தான் மாறாப்போகின்றது என்பதை அந்த நாட்டின் முயற்சிகளை அடிப்படையாக வைத்து எதிர்வுகூற முடியாது என்பதே எனது அபிப்பிராயம். அத்தகைய நிச்சயமற்ற தன்மை பலருக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சீனாவைச் சுற்றியுள்ள நாடுகளின் மக்களுக்கு பெரும் அச்சத்தை இந்த நிச்சயமற்ற தன்மை தொடர்ந்து ஏற்படுத்தப் போகிறது என்பது மாத்திரம் நிச்சயம். தங்களது இராணுவபல அதிகரிப்பு எந்தளவுக்கு வெளிப்படையானதாகவும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டுணர்வு கொண்டதாகவும் இருக்கிறது என்பதை எஞ்சிய உலகிற்கு சீனர்கள் தொடர்ச்சியாக வெளிக்காட்டினால் மாத்திரமே நாம் கூறுகின்ற இந்த அச்சவுணர்வு போக்கடிக்கப்பட முடியும். ஆனால், சீன இராணுவம் வேறுயாருக்குமன்றி, சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாத்திரமே விபரங்களை அறிவிக்கிறது என்பதால், மிகப்பெரிய நாடுகளின் இராணுவங்களுடன் ஒப்பிடும்போது சீன இராணுவமே மிகவும் குறைந்த அளவுக்கு பொறுப்புக்கூறும்



ஜப்பான் இலங்கைக்கு வழங்குகின்ற அபிவிருத்தி உதவிகள் பகட்டான கட்டிடங்களை, நெடுஞ்சாலைகளை மற்றும் பாலங்களை கட்டியெழுப்பும் பணிகளுடன் பெருமளவிற்கு சம்பந்தப்பட்டவை அல்ல. இலங்கை மக்களின் ஆற்றலை விருத்தி செய்கின்ற செயற்திட்டங்களுடனேயே எமது உதவிகள் கூடுதலான அளவிற்கு சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன

***(62ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# மத்திய கிழக்கின் எதிர்கால நிலப்படத்தை வரையப்போகிறவர்கள் யார்?



பீட்டர் யோன்ஸ்

ஈராக், சிரியா என்ற இரு நாடுகளும் ஐக்கியப்பட்டனவாய் இருக்க வேண்டும் என்று ஐக்கிய அமெரிக்கா விரும்புகிறது. அல்லாவிடில் மத்திய கிழக்கில் குழப்பமான புதிய நிலைமைகள் உருவாகும் என அது கருதுகிறது. அமெரிக்காவின் விருப்பம் ஒருபுறம் இருக்க, மத்திய கிழக்கில் குழப்பநிலை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது என்பதே உண்மை.

மத்திய கிழக்கின் இன்றைய கொந்தளிப்பு நிலை பல மட்டங்களில் வெளிப்படுகிறது. பல்வேறு சக்திகள் அங்கே இயங்குவதையும் அவற்றால் ஏற்படும் குழப்பங்களையும் இது எடுத்துக்காட்டுவதாயும் உள்ளது. சிரியாவில் உள்நாட்டு யுத்தம் தொடர்கிறது. ஈராக்கில் கிளர்ச்சி தோன்றியுள்ளது. எகிப்திலும் ஏனைய நாடுகளிலும் கூட அமைதியின்மை நிலவுகிறது. முன்னர் இப்பகுதியில் சுன்னி முஸ்லிம்களுக்கும் ஷியா பிரிவினர்களுக்கும் இடையே ஓரளவு சமாதானமும் அமைதியும் நிலவின. இப்போது சமயப்பிரிவுகளுக்கிடையிலான மோதல்கள் இப்பிராந்தியத்தில் அதிகரித்துள்ளன. இப்பிராந்தியத்தின் நிலவரைபடத்தை மீள வரைந்து கொள்ள வேண்டும் என்ற முனைப்பின் பிரதிபலிப்பாக மத்திய கிழக்கின் கொந்தளிப்பை விளக்க முடியும். நிலவரைபடத்தை வரைய முனைபவர்கள் ஒவ்வொருவரும் பிறரில் இருந்து முற்றிலும் வேறுபட்ட நோக்கங்களுடன் செயற்படுவது சிக்கலை மிகுவிப்பதாய் உள்ளது.

முதலாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த போது ஒட்டோமன் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னணியிலேயே மத்திய கிழக்கை ஐரோப்பிய வல்லரசுகள் தம் நலன்களுக்கு உகந்தவாறு பிரித்து வெவ்வேறு அரசுகளை உருவாக்கின. தமது யுத்தகால கூட்டாளிகளுக்குப் பரிசாகக் கொடுப்பதற்காக பிரித்தானியாவும் பிரான்ஸும் புதிய அரசுகளை உருவாக்கின. அத்தோடு, தமது குடியேற்ற நாடுகளுக்கான பயணப்பாதைகளைப் பாதுகாத்தலும், எண்ணெய் வளங்களைச் சுரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுதலும் இந்த ஏகாதிபத்திய நாடுகளின் நோக்கங்களாக இருந்தன. புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அரசுகள் பிராந்தியத்தின் பழங்குடியினர் சமூகங்கள், மதப்பிரிவினைகள் போன்றவற்றோடு பொருத்தமுறாதனவாக அமைந்தன. ஈராக், சவூதி அரேபியா, ஜோர்தான், சிரியா, லெபனான் ஆகியவற்றிலும் பிறநாடுகளிலும் பழங்குடி மக்கள் பிரச்சினை, மதப்பிரிவினைகள் என்பன இதனால் தொடரலாயின. இவற்றுள் ஜோர்தான் போன்ற சில நாடுகள் மட்டும் அரசியல் ஒன்றுமையை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டன. ஏனைய நாடுகள் வன்முறை அதிகாரபலம் கொண்டு ஆளப்படுபவையாக இருந்தன. ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் ஆட்சியாளர்கள் தூக்கிவீசப்பட்டனர். அவற்றின் அரசியல் முறைமைகளும் சிதைக்கப்பட்டன. சில வற்றில் ஆட்சியாளர்களுக்கு நெருக்குதலும் ஆபத்தும் தோன்றியுள்ளன. இந்நாடுகள் யாவற்றிலும் மத்தியில் உள்ள அரசுக்கு எதிரான சக்திகள் நாடுகளை பிளவுபடுத்தும் திசையில் இழுத்துச் செல்கின்றன.

மத்திய கிழக்கின் பல அரசுகள் சிதைந்து அழியும் நிலையில் உள்ளன. சிரியாவும், ஈராக்கும் இவற்றுள் முன்னணியில் உள்ளன. யேமன், லிபியா ஆகியனவும் அழிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நாடுகள் பிளவுபட்டுப் பலசிறிய நாடுகள் இன்னும் சில ஆண்டுகளுக்குள் தோன்றலாம். இந்த நாடுகளை இன்றைய நிலவரை எல்லைகளோடு தொடர்ந்து நிலைபெறச் செய்வது பற்றி மேற்கு வல்லரசுகள் விரும்பினால் கூட நடைமுறையில் இது சாத்தியமாகப் போவதில்லை. அடுத்து வரும் சில பத்தாண்டுகள் மத்திய கிழக்கில் குழப்பம் மிகுந்த காலப்பகுதியாகவே இருக்கப்போகிறது.

தற்போதிருக்கின்ற ஒழுங்கமைப்பை மாற்ற விரும்புகின்றவர்களில் ஒவ்வொரு பிரிவினரும் வேறுபட்ட நோக்கங்களுடன் செயற்படுவ தால் எதிர்காலத்தில் குழப்பம் மேலும் அதிகரிக்கும். சில பிரிவினர் தமக்கு தனியான அரசு வேண்டும் என்று கோருகிறார்கள். இவர்கள் கருதும் அரசு வெஸ்ட் பாலியன் மாதிரியிலான இறைமையுடைய தனி அரசு ஆகும். தனிஅரசை அமைப்பது பிராந்தியத்தின் அரசியல் நிலையை மேலும் சிக்கலாக்கும் என்பதால், சில பிரிவினர் அதனை ஆதரிக்கவில்லை. குர்தியர்கள் (Kurds) போன்ற இனக் குழுமங்கள் இன்றைய சர்வதேச முறைமையில் இணைந்து கொள்வதையே விரும்புகின்றன. அதனைக் குழப்ப விரும்பவில்லை. சிரியாவில் நிலைமை மேலும் சீரழியுமாயின் அங்கே உள்ள மத இனப்பிரிவினர்கள் சிலர் தமது பாதுகாப்பைக் கருதி தனி அரசாகப் பிரிந்து போவதை விரும்பக்கூடும்.

சர்வதேச முறைமை என்பது பற்றிய எமது எண்ணத்திற்கு மாறுபட்ட சிந்தனை உடையனவாக இஸ்லாமிய அரசு இயக்கம், அல்-குவைதா என்பனவும் பிற இயக்கங்களும் காணப்படுகின்றன. இவ்வியக்கங்கள் கோரும் அரசு, வழமையாக நாம் அறிந்த அரசு என்ற வகைப்பட்டதாயும் இல்லை. இவ்வியக்கங்கள் சமய அடிப்படையில் ஒன்றிணைந்த கற்பனையான மக்கள் சமூகத்தையும், அத்தகைய சமூகத்தை சமய தத்துவங்களின்படி வழிநடத்தும் அரசு ஒன்றை அமைப்பதையும் பற்றிய கனவுடன் செயற்படுகின்றன. இத்தகைய கருத்தியலுக்கு ஆட்பட்ட குழுக்களின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களே அண்மையில் கனடாவிலும் பிற இடங்களிலும் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தகைய குழுக்கள் தோல்வியையே தழுவும், ஏனெனில் அநாகரிகமான வன்கொடுமையைத் தவிர அவை எதனையும் மக்களுக்குக் கொடுக்கப் போவதில்லை. மக்கள் எதிர்பார்க்கும் சேவைகளை இவை அவர்களுக்கு வழங்கப்போவதில்லை. இக்குழுக்கள் பயணிக்கப்போகும் வழித்தடம் எப்படி இருக்கப் போகின்றது என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. இவை பிரிந்தழிந்து சிறு சிறு தீவிரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லான நாடுகளின் கூட்டு இப்போது வான்தாக்குதல்களை நடத்தி உதவி செய்கின்றன. இந்தப் பிரிவினர் வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் அவை ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் காப்பனவாக இருக்கப்போவதில்லை. அப்படியானால், ஏன் அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் வான் தாக்குதல்கள் மூலம் உதவ வேண்டும்? இங்கு போரிடும் ஏனைய பிரிவுகள் சில இன்னும் மோசமான நிலைமையையே உருவாக்க வல்லன. அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே காரணம். இத்தீவிரவாதிகளின் இலக்குகள் அடையப்பெற்றால் அவை இரத்தக் காடாக இப்பிராந்தியத்தை மாற்றி விடும். அவை கொண்டுவரும் பேரழிவு பயங்கரமானது. நாகரிக மிக்க எந்த மனிதனும் அவைபற்றி எண்ணிப்பார்த்தால் நடுங்குவான் என்ற எண்ணமே வான் தாக்குதல்களை நடத்தி ஆதரவு கொடுப்பதன் காரணம். ஆனால், இம்முயற்சி வெற்றியளிக்குமா என்பது சந்தேகமே. நிலைமை இன்னும் மோசமாகலாம்.

தக் குழுக்களாக மாறும், பிறரோடு சண்டையிட்டதுபோல் தமக்கிடையே தீவிரமாகப் போரிட்டு குழப்பத்தையும் இரத்தக்களரியையும் இவை கொண்டு வரப்போகின்றன. அதே சமயம் தம்நோக்கங்களில் ஆழமான பிடிப்பையும் உறுதியையும் கொண்டவையாக இக்குழுக்கள் உள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை, ஆகையால் வெஸ்ட்பாலியன் மாதிரியில் தனி அரசுகள் கொண்டதான நிலவரைபடத்தை வரைய முனையும் சக்திகள் தமக்குள்ளேயே தீவிரமாக மோதிக்கொள்கின்றன. இன்று நடைபெறும் இந்த நிலவரைபடத்தை மாற்றி வரையும் முயற்சிகளினூடே இரண்டு யதார்த்த உண்மைகள் வெளிப்படுகின்றன. முதலாவதாக இந்தப் போரும், மோதலும் ஒட்டோமன் பேரரசின் வீழ்ச்சியின் விளைவு. இரண்டாவதாக தனி அரசு அமைத்தல் என்ற முனைப்போடு போரிடும் குழுக்கள் இப்பிராந்தியத்தில் மாற்று ஒழுங்கு ஒன்றைக் கொண்டு வரும் எண்ணத்தோடு சண்டையைத் தொடருகின்றன.

### அச்சத்தால் தூண்டப்படும் கொள்கை

ஐக்கிய அமெரிக்கா இப்பிராந்தியத்தில் பின்பற்றும் கொள்கையை அச்சத்தால் தூண்டப்படும் கொள்கை எனலாம். ஈராக்கும், சிரியாவும் பிளவுபடாமல் ஐக்கியமாக இருக்காவிட்டால் அவற்றின் சிதைவால் புதிய பிரச்சினைகள் மேற்கிளம்பும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது. ஆனால், சிக்கல்கள் ஏற்கனவே தோன்றிவிட்டன. மேற்குலகு தனது இலக்குகள் எவையோ அவற்றை அடைவதற்கான ஆயுதபலத்தை உபயோகிப்பதற்கும் தயாராக இல்லை. இன்றைய அரசு எல்லைகளை இருந்தபடி இருக்கச் செய்வதற்கு நீண்ட காலத்திற்கு படைகளை இப்பகுதியில் நிறுத்திவைக்க வேண்டும். அதற்கு மேற்கு நாடுகள் விரும்பவில்லை. சதாம் ஹுசென் போன்றவர்களை மீளத் தலைவர்களாகக் கொண்டுவருதல், சிரியாவின் பஷார் அல் அசாத் போன்றவர்களை ஆட்சியில் தொடருவதற்கு ஆதரவளித்தல் என்ற கொள்கைகள் மூலம் தற்போதைய நாட்டெல்லைகளைப் பாதுகாக்கலாம். ஐக்கிய அமெரிக்கா அத்தகைய கொள்கையை நடைமுறைப் படுத்தவும் விரும்பவில்லை. ஆனால் நிலைமைகள் மாறினால் அமெரிக்கா தன் கொள்கையை மாற்றவும் கூடும். தனியரசுகளை அமைக்கும் எண்ணத்தோடு போரிடும் சில பிரிவினர்களுக்கு அமெரிக்கா தலைமையி

இன்றைய கொந்தளிப்பு நிலை புதிய கூட்டுக்கள் ஏற்படுவதைச் சாத்தியமாக்கும். இப்பிராந்தியத்தின் மாற்றங்களை கவலையோடு பார்க்கும் நாடாக ஈரான் விளங்குகிறது. அந்நாட்டுத் தலைவர்கள் புரட்சிகரமான வீர வசனங்களைப் பேசினாலும் இன்றிருக்கும் நிலையை ஈரான் மாற்ற விரும்பவில்லை என்பதே உண்மை. இறைமை, புதிய அரசுகளின் தேவை என்பன பற்றிய ஈரானின் சிந்தனைப் போக்கு பிரிவினைவாத சக்திகளின் கருத்துக்கு மாறானது. மத்திய கிழக்கில் நாம் எதிர்பாராத புதிய உறவுகள் கூட உருவாகும் சாத்தியம் உள்ளது. ■

***(பீட்டர் யோன்ஸ் ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் சர்வதேச அலுவல்கள் துறையின் இணைப் பேராசிரியர். ஸ்ரான் போர்ட் பல்கலைக்கழகத்தின் ஹூவர் இன்ஸ்டி டியுட்டின் வருகை தரு பேராசிரியருமாவார்.)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்



2015 பிரித்தானியா பொதுத் தேர்தல்

# சூடு பிடிக்கும் குடிவரவுப் பிரச்சினை


2015 மே மாதம் பிரித்தானியாவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. அத்தேர்தலில் மிக முக்கியமானதாக அமையப்போகும் அறைகூவலாக குடிவரவுப் பிரச்சினை உள்ளது. பிரித்தானியாவின் இரு பிரதான கட்சிகளான பழமைவாதக் கட்சியும் (கன்சர்வேட்டிவ் கட்சி) தொழிற்கட்சியும் இப்பிரச்சினையை கையாள்வதில் பெரும் குழப்பத்தை எதிர்நோக்குகின்றன. பிரித்தானிய அரசியலை இன்று இப்பிரச்சினை பெரும் மாற்றத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

குடிவருவோருக்கு கொடுக்கும் கொடுப்பனவுகள் / நன்மைகளை 'நியாயமான' அளவிற்கு தாம் குறைக்கப்போவதாகவும், இதற்கு ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகள் தமக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் பிரதமர் டேவிட் கமரூன் அண்மையில் நிகழ்த்திய உரையொன்றில் குறிப்பிட்டார். ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இருந்து பிரிட்டனிற்கு உள்வரும் குடியேறிகள் பற்றிய விடயம் ஐரோப்பிய யூனியனுடன் பிரித்தானியா எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய முக்கிய விடயம் என்றும், தனது நாட்டின் ஐரோப்பிய யூனியன் அங்கத்துவத்தோடு அது தொடர்புடையதென்பதையும் கமரூன் குறிப்பிட்டார். தான் விரும்பிய மாற்றங்களைச் செய்வதில் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். டேவிட் கமரூனின் புதிய திட்டத்தின்படி குடியேறிகள் நான்கு ஆண்டுகள் காத்திருந்தபின்னர் தான் சில நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஐரோப்பிய யூனியனில் இருந்து வரும் குடியேறிகள் வரிச்சலுகைகளையும், சமூகசேவை, உள்ளூராட்சிச் சபைகள் என்பனவற்றின் வீட்டுவசதிகள் என்பனவற்றையும் நான்கு ஆண்டுகள் பிரிட்டனில் வாழ்ந்த பின்னரும் வேலை செய்த பின்னருமே பெற வேண்டும் என்பதே கமரூனின் திட்டம். இதனைவிட வெளிநாட்டில் வதியும் குடியேறிகளின் பிள்ளைகளுக்கு எந்தவித சலுகைக



தொழிற்கட்சித்தலைவர்
எட் மில்லிபாண்ட்



ஐக்கிய இராச்சிய
சுதந்திரக்கட்சி தலைவர்
நிகெல் ஃபாரேஜ்



ஹர்ஷ் வி பந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் கொடுக்கவோ, உதவிகளை அனுப்பவோ முடியாது. தொழிற் கட்சியும் லிபரல் கட்சியும் அறிவித்த கொள்கைகளின் கடுமையான வடிவத்தில் கமரூனின் இக்கொள்கை அமைந்துள்ளது. இப்போது உள்ள நடைமுறைகளின்படி ஐரோப்பிய யூனியன் பிரஜைகள் பிரிட்டனுக்குள் தொழில் வாய்ப்புகளுக்கு போட்டியிட்டு நுழையலாம். இதற்கு எதிராக குடிவரவுக்கட்டுப்பாடுகள் இல்லை. ஆனால், ஐரோப்பிய யூனியனுக்கு வெளியே உள்ளவர்கள் பிரிட்டனுக்குள் தொழில்தேடி நுழைவதற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன.

டேவிட் கமரூனின் இந்தப் பேச்சு பலராலும் எதிர்வு கூறப்பட்ட ஒன்றாகும். ஐரோப்பிய யூனியனில் இருந்து வரும் குடிவரவைக் கட்டுப்படுத்தும் மாற்றங்களைச் செய்வது என்ற அடிப்படையில் யூனியனில் பிரிட்டன் தொடர்ந்து இருப்பது பற்றித் தீர்மானிக்கக்கூடிய 2017ஆம் ஆண்டுப் பொதுசன வாக்கெடுப்புக்கு அவர் ஆயத்தமாகிறார்.

'இது நடைபெற்று வரும் விவாதத்தின் ஓர் அம்சம். பொறுமையோடு சிந்திக்க வேண்டிய விடயம்' என்று கமரூனின் கூற்றுகளுக்கு ஐரோப்பிய யூனியன் பதிலுரை வழங்கியது. பிரித்தானியாவிற்கு உள்ளே



லிபரல் கட்சித்தலைவர் - பிரதிப்பிரதமர் நிக் கிளெக்

சுதந்திரக்கட்சி (INDEPENDENCE PARTY (UKIP) என்ற கட்சி குடிவரவு தொடர்பான தப்பெண்ணங்கள் பரப்பப்படுகின்றன. மக்களிடையே பிரிவினைக்குத் தூபம் போடப்படுகிறது என்று குற்றம் சுமத்தி வருகிறது. டேவிட் கமரூனின் பேச்சு ஐரோப்பிய யூனியனை நோக்கியதாக உள்ளதோடு சுதந்திரக்கட்சியினருக்கு எதிரான தாக்குதல் என்றும் கொள்ள முடியும். பிரதமர் டேவிட் கமரூன் ஒரு சமயத்தில் தீவிரவாதியாகவும், யதார்த்தவாதியாகவும் இருக்க முயற்சிக்கிறார். பிறர் ஒரு பிரச்சினையாக கருதுவதை அவர் புரிந்துகொள்கிறார்; அதற்கான தீர்வையும் துணிச்சலோடு முன்வைக்கிறார். இருப்பினும் அவர் தம் முயற்சியில் இன்னும் வெற்றியடையவில்லை.

கமரூனின் பேச்சு அவரை விமர்சிப்போரைத் திருப்திப்படுத்தியதாகத் தெரியவில்லை. பழமைவாத கட்சியின் வலதுசாரிகள் ஐரோப்பிய யூனியனில் இருந்து வருவோரின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால், கமரூன் சுதந்திரமான உள்வருகை பற்றிய விதிகளை புதியதாக எழுதிக்கொள்வதைப் பற்றியே பேசியிருப்பது வலதுசாரிகளுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது. தொழிற்கட்சித் தலைவர் எட்மில்லிபான்ட் இப்பிரச்சினை குறித்து தனது நிலைப்பாட்டை இன்னும் தீர்மானிக்க முடியாதவராக இருக்கிறார். ஆனால் அவர் டேவிட் கமரூன் குடிவரவுக் கொள்கையில் தனது நம்பகத்தன்மையை இழந்துவிட்டார் என்று குற்றம் சாட்டினார். பிரதமர் 'ஆனால்' 'இருந்தாலும்' போன்ற சொற்களைக் கூறி மழுப்பாமல் குடிவரவு வரவரக் கூடுகிறது என்ற உண்மையைப் போட்டு உடைத்திருக்கிறார். அதேவேளை 'நாங்கள் சொல்வதைச் செய்கையில் காட்டாவிட்டால் ஐந்து வருடங்களுக்குள் எங்களைத் தூக்கி எறியுங்கள்' என்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் கூறியிருப்பதாக மில்லிபான்ட் கண்டனம் தெரிவித்தார்.

பிரித்தானியாவின் சனத்தொகைக் கட்டமைப்பிலும் அரசியலிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் பின்னணியிலேயே டேவிட் கமரூனின் பேச்சை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவரது கட்சி குடிவரவு எண்ணிக்கையை குறைக்கப்போவதாகக் கூறியது. ஆனால் சென்ற ஒரு ஆண்டு காலத்தில் (இவ்வருடம் ஜூன் முடிவுவரை) மட்டும் பிரித்தானியாவில் இருந்து குடியகல்வாக வெளியேறியவர்களை விடக் குடியேறிகள் எண்ணிக்கை 2,60,000 த்தால் உயர்வாகக் காணப்பட்டது. பிரித்தானிய அரசியலில் சுதந்திரக் கட்சியின் பிர வேசம் புதிய ஒரு திருப்பம் ஆகும். சுதந்திரக் கட்சி என்ற பெயர் குறிப்பிடுவது போல் பிரித்தானியா ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகிச் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பது இக்கட்சியின் பிரதான கொள்கைகளில் ஒன்று. இது தெளிவானது, மக்களால் விளங்கிக் கொள்ளக்கூடிய செய்தி. இதனால் தேர்தல்களின் போது சுதந்திரக் கட்சி பெருமளவு வாக்குகளைக் கவர்ந்து கொள்கிறது. மே மாதத்தில் நடந்த தேர்தலில் அதன் வாக்குப்பலம் உச்சம் பெற்றது.

வெற்றிப் பாதையில் சுதந்திரக்கட்சி

சுதந்திரக்கட்சியின் இரு பிரதிநிதிகள் இப்போது பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். பெரிய கட்சிகளுக்கு இவர்கள் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இருப்பது சங்கடத்தைத் தருவதாக உள்ளது. இவ்விரு பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற ஆசனங்களைத் தம்கட்சியால் பிடிக்க முடியும் என்று சொல்கிறார்கள். அண்மையில் சுதந்திரக்கட்சி இடைத்தேர்தல் ஒன்றில் வெற்றிபெற்றது. இது ஒரு சாதனையாகும். 9000 வாக்குகள் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருந்த பழமைவாதக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரை சுதந்திரக்கட்சி வீழ்த்தியது. பழமைவாதக் கட்சி தம்மால் இயன்றதனைத்தையும் செய்தபோதிலும் இவ்

**பிரித்தானியாவின் இன்றைய அரசியல் தலைமை குடிவரவு தொடர்பாக கொண்டுள்ள கொள்கையால் பலர் ஏமாற்றமடைந்துள்ளனர். இக்கொள்கை பல பின்விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது. ஐரோப்பிய யூனியனுடன் பிரிட்டன் கொண்டுள்ள உறவுகளிலும் பல மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்க்கலாம்.**

வீழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை.

எந்தவொரு ஆசனத்தையும் பழமைபேணும் கட்சி காப்பாற்றும் நிலையில் இல்லை என்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கன்சர்வேட்டிவ் கட்சியை விட்டு விலகத் தயாராக உள்ளனர் என்றும் சுதந்திரக்கட்சி இப்போது கூறிவருகிறது. கடந்த மூன்று வருடகாலத்தில் அக்கட்சி தனது பிரசார தந்திரோபாயத்தை மிகத்திறமையாகக் கையாண்டு வருகிறது. கட்சிக்கு நிதி உதவிகளும் கிடைக்கின்றன. முன்பு லிபரல் ஜனநாயகக் கட்சி தேர்தலில் வெற்றி பெறும் தந்திரத்தைக் கெட்டித்தனமாகக்கையாண்டது. அதுபோல் இப்பொழுது சுதந்திரக் கட்சியினர் தேர்தல் வெற்றிக்கான ஒழுக்கக் கட்டுப்பாட்டை நன்கு பயின்று பின்பற்றுகின்றனர். மே மாதத்தில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் தேர்தல்களுக்குப் பின்னர் சுதந்திரக் கட்சிக்கு நம்பிக்கை வலுத்துள்ளது. தம்மால் 20 ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என்று அவர்கள் இலக்கு வகுத்தனர். தற்போது இடைத்தேர்தல் முடிவுகள் அளித்த நம்பிக்கை காரணமாக அவர்கள் இன்னும் கூடிய தொகை ஆசனங்களைப் பிடிக்கலாம் என எண்ணுகின்றனர்.

பழமைவாதக் கட்சியினர் தேர்தல் முடிவுகளைக் கண்டு அச்சம் கொண்டதாகவோ கமரூன் பதவியை விட்டு இறங்கும் காலம் நெருங்கி விட்டதாக எண்ணியதாகவோ கொள்ள முடியாது. அடுத்து வரும் தேர்தலில் தாம் வெற்றிகொள்வோம் என்றே அவர்கள் கருதுகின்றனர். மற்ற இரு அரசியல் கட்சிகளும் கூட எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி பற்றி உணர்வுடையனவாய் உள்ளன. தொழிற்கட்சியின் தலைவர் மில்லிபான்ட் அண்மைக்கால இடைத்தேர்தல்களில் தமது கட்சிக்கு வாக்குகள் பாதியாகக் குறைந்துவிட்டன என்பதை உணருகிறார். தாம் மையநீரோட்டத்தில் இருந்து விலகிவிடக்கூடிய ஆபத்தை அவர் உணர்கிறார். லிபரல் ஜனநாயகக்கட்சி ஆட்சியில் பங்குகொண்டுள்ள கூட்டாளிக் கட்சியாகும். அவர்களின் சரிவும் ஆரம்பித்துவிட்டது. அண்மைக்கால இடைத்தேர்தல்களில் இக்கட்சிக்கு 349 வாக்குகளே கிடைத்தன. முன்னர் எப்போதும் இல்லாத இந்த வீழ்ச்சி கேலிக்கு இடமானது.

பிரித்தானியாவின் இன்றைய அரசியல் தலைமை குடிவரவுக் கொள்கை தொடர்பாகக் கொண்டுள்ள கொள்கையால் பலர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இக்கொள்கை பிரித்தானியாவிற்குள் பல பின்விளைவுகளை ஏற்படுத்த உள்ளது. அத்தோடு ஐரோப்பிய யூனியனுடன் பிரிட்டன் கொண்டுள்ள உறவுகளிலும் பலமாற்றங்கள் நிகழவுள்ளன. ■


***(ஹர்ஷ்.வி.பந்த் லண்டன் கிங்ஸ் கல்லூரியின் பாதுகாப்பு கல்விப் பிரிவில் சர்வதேச உறவுகள் துறையின் பேராசிரியர் ஆவார்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்திய விவகாரம்

# எச்சரிக்கை சாமியார்கள்...!





ராம்பால்



அ.மார்க்ஸ்

"இந்தியாவில் ரஜ்னீஷ், புட்டபர்த்தி சாய்பாபா, சந்திரா சாமி, திரேந்திர பிரம்மச்சாரி, ரவிசங்கர், வேதாத்ரி மகரிஷி, நித்தியானந்தா, அசாரம் பாபு, பாபா ராம் தேவ், ராம்பால்.... என ஏகப்பட்ட சாமியார்கள். தங்களை அவதாரங்களாக முன்னிறுத்திக் கொள்ளும் இவர்களுக்கு ஏராளமான ஆசிரமங்கள், சொத்துகள், கோடிக்கணக்கான பக்தர்கள். இவர்களது அரசியல் தலையீடுகளும், அரசியல் கட்சிகள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்வதும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளன. சில வாரங்களுக்கு முன் ராம்பால் எனும் இத்தகைய சாமியார் ஒருவரைக் கைது செய்ய காவல்துறை சென்றபோது அவரது பக்தர்கள் தடுத்ததும் சுமார் மூன்று நான்கு நாட்கள் போராட்டத்திற்குப்பின் ஆறு பேர்களைப் பலிகொடுத்தே அவரைக் கைது செய்ய நேர்ந்ததும் பெரும் பரபரப்பாகியுள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தங்களைக் கடவுளின் அவதாரமாக முன்னிறுத்தி யோகம், ஆன்மீகம், ஏன் வாழ்க்கைக் கலையைக் கற்றுத் தரும் சாமியார்களின் ஊழல்களையும், ஏமாற்றுக்களையும், பாலியல் குற்றங்களையும், எதிர்ப்பாளர்களைக் கொன்றொழித்த சதிகளையும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. இவை தொடர்பாக எல்லோருக் கும் தெரியாத எதை நான் புதிதாகச் சொல்லிவிடப் போகிறேன்.

ஏராளமான சொத்துக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றோடு ஏராளமான, பக்த கோடிகளையும் விட்டுச் சென்ற புட்டபர்த்தி சாயி பாபாவைப் பற்றி குரோட்டன்ஸ் தலையன் என நாத்திகம் இராமசாமி தனது வார இதழில் தொடர்ந்து எழுதி வந்ததை மாணவனாக இருந்த காலத்திலேயே நான் படித்து அதிர்ச்சி அடைந்திருக்கிறேன். சற்று வயது வந்த போது சாயிபாபாவின் ஏமாற்றுக்களைத் தோலுரித்து ஆப்ரகாம் கோவூர் எழுதிய Begone Godmen நூலைப் படித்து வியந்துள்ளேன். ஃபுல்ப்ரைட் ஸ்காலர் அணு விஞ்ஞானி, காந்தியவாதி, அறிவித்துச் செயல்பட்ட நாத்திகவாதி, பத்மபூஷண் டாக்டர் எச்.நரசிம்மையா அவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தபோது (1973-77) விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்கள் அடங்கிய 'அற்புதங்கள் மற்றும் மூட நம்பிக்கைகள் குறித்த உண்மைகளை அறியும் குழு' ஒன்றை அமைத்து சாயிபாபா நிகழ்த்தும் அற்புதங்களை ஆய்வு செய்ய முனைந்தது, அதற்கு அந்த அவதார மனிதர் ஒத்துழைக்க மறுத்தது, பின் அது சர்ச்சையானது எல்லாவற்றையும் அப்போது பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். சாயிபாபாவின் அருளால் பாண்டவபுரம் சாய் கிருஷ்ணா எனும் பாலகனின் உடம்பிலிருந்து விபூதி உதிர்ந்த அற்புதம் கண்டு ஆயிரமாயிரம் பக்தர்கள் திரண்டபோது இந்த உண்மை அறியும் குழுவில் இருந்த விஞ்ஞானிகள் அந்தப் பாலகனிடம் நெருங்கிச் சென்று அவன் அசந்த நேரத்தில் சட்டையை உருவ, அவன் உடலில் கட்டி வைக்கப்பட்ட விபூதிப் பொட்டலங்கள் அம்பலமான செய்தியை நான் மட்டுமா படித்தேன். ஆயிரமாயிரம் வாசகர்களும் படித்தனர். சாயிபாபாவின் படுக்கை அறையில் மூன்று கொலைகள் நடந்து அந்தப் புனிதரின் அறைகளில் இரத்தக் கறை படிந்ததே. அது அவரது அடியார்களுக்குத் தெரியாதா?


இது தொலைக்காட்சி ஊடகங்களின் காலம். நித்தியானந்தாவின் பாலியல் வக்கிரங்களை ஒரு தொலைக்காட்சி அம்பலப் படுத்தியதையும் ஒரு புலனாய்வு இதழ் அவரது ஆச்சிரம நடவடிக்கைகளைத் தொடர்ந்து தோலுரித்ததையும் இலட்சக் கணக்கான மக்கள் காணவில்லையா?

அஸ்ராம் பாபு அப்பாவி விவசாயிகளின் நிலத்தை அபகரித்து வழக்குகளை எதிர் கொண்டிருப்பதும் 15 வயதுப் பெண்ணை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியதையும், பின் அது தடயவியல் சோதனைகளில் உறுதி செய்யப்பட்டதையும் இன்று அவர் அந்தக் குற்றச்சாட்டில் கம்பி எண்ணிக் கொண்டிருப்பதையும் நாடெங்கிலுமுள்ள அவரது 400 ஆச்சிரமங்களில் உள்ள அடியவர்களும் '20 மில்லியன்' பக்தர்களும் அறியார்களா?

எல்லோருக்கும் எல்லாமும் தெரியும். ஆனால் நித்யானந்தாவுக்கு இன்னும் பக்தர்கள் திரண்டு கொண்டுதான் உள்ளனர். அஸ்ராம் பாபுவுக்கு ஆதரவாக அவரைக் கைது செய்யக்கூடாது என டில்லியில் திரண்ட அவரது பக்தர்களிடம் பத்திரிகையாளர்கள் பேசியபோது, இந்த உலகத்தில் உள்ள அத்



அசாரம் பாபு



ராம் தேவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனை பேரையும் பாபுதான் கொன்றார் என்று சொன்னாலும் நாங்கள் நம்பமாட்டோம்' என்றல்லவா சொன்னார்கள். ஒரு மாதத்திற்கு முன் ஹரியானாவில் உள்ள சத்லோக் ஆச்சிரமத்தில் இறை மனிதர், கபீரின் மறுபிறப்பு ராம்பாலைக் கைது செய்ய காவல்படைகள் குவிக்கப்பட்ட போது அவரைக் காக்க உயிரைக் கொடுத்தல்லவா அவரது பக்தர்கள் போராடினார்கள். ஆறு உயிர்கள் பலியாயினவே. அவரோடு அன்று 865 பேர் கைதானார்களே.


இதில் இன்னொன்றும் நமக்குப் புரியவில்லை. பிரச்சினைகளிலிருந்தும், வாழ்வில் எதிர்கொள்ளும் விடை தெரியாக் கேள்விகளிலிருந்தும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள எந்த மகான்களிடம் இம்மக்கள் சரணடைந்தனரோ, அந்த மகான்களையே அவர்கள் காப்பாற்றப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படியும் காப்பாற்ற இயலாமல் அவர்கள் கம்பி எண்ணிக் கொண்டும், பெயில் கிடைக்குமா என வேண்டிக் கொண்டும் இருக்க நேர்ந்த போதும் கூட எப்படி இந்த ஊர் இன்னும் இவர்களை நம்பிக் கொண்டிருக்கிறது?

எப்படி இன்னும் இத்தகைய அவதார சாமிகளின் எண்ணிக்கை இங்கு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது?

பாலியல் ரீதியான அத்துமீறல்களில் வெளிவந்தவை மிகச் சொற்பம். எப்படி இவர்கள் வசீகரிக்கப்பட்டு சாமியார்களால் பாலியல் சுரண்டல்களுக்கு ஆட்படுத்தப்படுவதோடு, கூட்டுப் புணர்ச்சி முதலான காரியங்களும் ஆச்சிரமங்களில் இடம்பெறுகின்றன என எத்தனையோ கட்டுரைகள் ஆங்கில இதழ்களில் வெளிவந்துள்ளன. இது குறித்து உளவியலாளர்கள் கருத்துகளைச் சொல்லியுள்ளனர். பெயர் தெரிவிக்க விரும்பாத தம்பதியர் தாங்கள் வசியப்படுத்தப்பட்ட வரலாற்றைப் பதிவு செய்துள்ளனர். அப்படியும் பெண்கள், தம்பதியர் ஆச்சிரமங்களில் அடைக்கலம் ஆகிக் கொண்டுதானே உள்ளனர்?

இவை எளிதில் விடை சொல்ல முடியாத கேள்விகள். இந்தியாவில் தான் இப்படி அவதார மனிதர்களின் இருப்பு அதிகமாக உள்ளதென்றாலும் பிற நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இதே வடிவில் இல்லாவிட்டாலும் அங்கெல்லாமும் கூட கடவுள் நம்பிக்கைகள், வழிபாடுகள் அதிகமாகியுள்ளன என்றுதான் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. தவிரவும் ரஜ்னீஷ் போன்ற நம்மூர் சாமியார்களுக்கு வெளிநாடுகளிலும் ஏகப்பட்ட ஆதரவு இருக்கிறது.

இந்துமதத்தில் பிற மதங்களைப்



நித்தியானந்தா


போலக் கூடித் தொழுதல் (communion) எனும் கருத்தாக்கமும், அந்தக் கூடித் தொழுதலை நிறைவேற்றி வைக்கும் பாதிரிகள் அல்லது இமாம்கள் என்றொரு பிரிவும் இல்லாததால் அந்த இடத்தை இந்த அவதார மனிதர்கள் நிரப்புகின்றனர் என்றும் ஒரு கருத்தைப் பார்த்தேன். அப்படியான கூடித் தொழும் வழமை இங்கு இல்லாதபோதும் மடங்கள் மற்றும் மடாதிபதிகளை வணங்குதல் என்கிற மரபு இங்கு நீண்ட நாட்களாக இருக்கத்தான் செய்கிறது. அதன் தொடர்ச்சியாக இதைக் காணவும் செய்ய வாய்ப்புள்ளது. தவிரவும் பிற மதங்களிலும் இதேபோல இல்லாவிட்டாலும் சில மாற்றங்கள் நடந்து கொண்டுதான் உள்ளன. எத்தனை தவ்ஹீத் ஜமாத்கள் வந்தபோதும் தர்ஹா வணக்கம் குறையவில்லை. ஆஜ்மீர் தர்ஹாவிலும் நாகூர் தர்ஹாவிலும் கூட்டம் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தில் நற்செய்திக் கூட்டங்களின் எண்ணிக்கைகள் பெருகுகின்றன. தினகரன் போன்றோர் நாடெங்கிலும் தங்கள் வழிபாட்டு நிலையங்களை அமைத்துக் கொண்டுதான் உள்ளனர்.

அன்றொரு நாள் ஒரு வேலையாக பாலவாக்கம் அந்தோனியார் கோவில் பக்கம் சென்றிருந்தேன். அங்கு அல்லேலுயா பாணியில் ஒரே சத்தமும் ஆர்ப்பாட்டமுமாக வழிபாடு நடந்து கொண்டிருந்தது. இதென்ன ஒரு கத்தோலிக் கோவிலில், வேறு ஏதாவது பிரிவினர் வழிபாடு நடத்துகின்றனரா என விசாரித்தால் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார்தான் அந்த வழிபாட்டை நடத்திக் கொண்டிருந்தார்.

ஆக வழமையான இறை நம்பிக்கை (belief) என்பதைத் தாண்டி அற்புதங்களை (miracles) நாடும் வேட்கை அதிகரித்து வருவது மட்டும் நமக்குப் புரிகிறது.

பொருள்முதல்வாதத் தத்துவங்கள், மூட நம்பிக்கை எதிர்ப்புப் பிரசாரங்கள், அறிவியல் உண்மைகள் எல்லாம் தோற்றுக் கொண்டு இருக்கின்றனவா? பூமி உருண்டை எனவும், இரவு பகல், பருவச் சுழற்சி முதலியன எப்படி ஏற்படுகின்றன எனவும் விளக்குதல் மட்டும் போதாதா? மழை எப்படிப் பெய்கிறது, நீர் எப்படி ஆவி ஆகிறது, பனிக்கட்டியாய் உருவம் எடுக்கிறது என்கிற கேள்விகளுக்கு விடை கிடைத்தால் மட்டும் மனித மனம் திருப்தி அடைவதில்லை. அதற்கும் மேலாகச் சில வாழ்வியல் கேள்விகளுக்கு அதற்கு விடை தேவைப்படுகிறது. நான் எத்தனை நல்லவனாக இருந்த போதிலும் ஏன் எனக்கு இந்தச் சோதனைகள்? இத்தனை அநீதிகளையும் செய்பவன் எப்படி எந்தச் சறுக்கலும் இல்லாமல் மேலேறிக் கொண்டுள்ளான்? இப்படியான கேள்விகளுக்கு விஞ்ஞானத்தால் பதில் சொல்ல இயலவில்லையே? பிணி, மூப்பு, சாக்காட்டிலிருந்து தப்புவதற்கு புத்தர் சொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்



சந்திர சுவாமி

வழி திருப்தி அளிக்கவில்லையே. பணம் உள்ளவர்களின் சராசரி ஆயுளும் நோய் எதிர்ப்பு சக்தியும் ஏழை எளியவர்களுக்கு இல்லையே.

மார்க்சியம் முதலிய புரட்சிகரத் தத்துவங்கள் அளித்த பதில்களும் நடைமுறையில் நிறுவப்பட்டு மக்களின் கைகளில் பலன்களாக விடியவில்லை. முதலாளியத்திற்குப் பின் அப்படி ஒன்றும் சோசலிசம் உருப்பெற்று விடவில்லை. உருப்பெற்றவையும் வெற்றி பெறவில்லை. என்ன நடந்தது எனக் கம்யூனிஸ்டுகள் விளங்கிக்கொள்ளவும் இல்லை; விளக்கவும் இல்லை; தங்களை மாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை.

மாற்றாக உருவான அடித்தள மக்கள் இயக்கங்களும் பேசியவை எல்லாம் வெறும் வாய் வீச்சுக்களாகவே முடிந்தன. கட்டப் பஞ்சாயத்துகளுக்கும், சாதி அடையாளத்தைக் காட்டி வாரிசு அரசியல் செய்வதற்குந்தான் இட்டுச் சென்றன. சாதிஅமைப்பில் இடையிலும் கீழும் உள்ளவர்கள் தங்கள் இழி நிலைகளை மேம்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் வெறும் புனைவு அளைவிலேயே நின்றன. சாதிப் பெருமை பற்றிய புனைவு வரலாறுகளை உருவாக்குதல், ஆண்ட பரம்பரை எனச் சொல்லிக் கொள்ளுதல், சாதித் திருஉருக்களை உருவாக்குதல் என்பதாக அமைந்தன. அறிவுஜீவிகள் இவ்வாறு உருவாகும் நிலையை விளக்குவதோடு நில்லாமல் இதைக் கொண்டாடி இதுவே போதும் என அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தங்களை வளப்படுத்திக் கொண்டனர்.

இன்றைய சாமியார் விவகாரங்களில் சமீபத்தில் நடந்த ராம்பால் கைது மட்டும் சற்று வித்தியாசமானது. இந்தச் சாமியார் விவகாரங்கள் எல்லாவற்றையும் நாம் ஒன்றாகப் பார்த்துவிடவும் முடியாது. ராம்பால் தன்னைக் கபீரின் மறு பிறவி என அழைத்துக் கொண்டார். கபீர் சாதிமத வித்தியாசங்கள் இல்லாத ஒரு சமூகத்தைக் கனவு கண்டவர். கபீர் பந்த் என்பது இன்று வட நாட்டில் சாதி, தீண்டாமை வேறுபாடுகளுக்கு எதிராக நிற்கும் ஒரு வழிபாட்டுப் பிரிவு. பெரும்பாலும் அடித்தளச் சாதியினர்.

ராம்பாலின் ஆச்சிரமத்தில் சேர்வதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. அவர்கள் சாதி மற்றும் தீண்டாமை வேறுபாடுகளைக் கடைபிடிக்கக்கூடாது. சடங்கு, ஆசாரங்கள், சிரார்த்தம் கொடுப்பது முதலியவற்றை விட்டுவிட வேண்டும். புண்ணியத் தலங்களுக்கு யாத்திரைகள் சென்று வழிபடவும்கூடாது. சென்ற நூற்றாண்டுகளில் இந்துத்துவ உருவாக்கத்திலும், மதமாற்ற எதிர்ப்பு, பசு வதை எதிர்ப்பு ஆகியவற்றிலும் முன்னின்ற ஆரிய சமாஜத்தையும், அதன் மூலவர் தயானந்த சரஸ்வதியையும் ராம்பால் கடுமையாக விமர்சித்து வந்தார்.

பாபா ராம் தேவ், அஸ்ராம் பாபு முதலிய சாமியார்களை வெகுவாக ஆதரித்து வந்த ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தினருக்கு ராம்பால் எப்போதும் ஆகாதவராகவே இருந்தார்.

இந்தப் பின்னணியில்தான் ஆர்ய சமாஜிகளுக்கும் ராம்பால் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடந்த ஒரு மோதலில் ஒரு ஆரிய சமாஜி கொல்லப்பட்டார். அந்த வழக்கில் ராம்பாலையும் சேர்த்திருந்தனர். அது தொடர்பான அழைப்பாணை வந்தபோது இவர் நீதிமன்றம் சென்றிருந்தால் பிரச்சினை இப்படி ஆறு பேர் சாவது என்பதுவரை போயிருக்காது. இந்தச் சாமியார்கள் எல்லோரையும் நித்தியானந்தா மாதிரி இதுபோன்ற விடயங்களில் விவரமானவர்கள் எனச் சொல்ல இயலாது. ராம்பால் ஆச்சிரமம் மிகவும் ஆடம்பரமாக இருந்தது, அங்கிருந்து நிறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்பது தவிர அவர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் அல்லது நிலப் பறிப்பு அல்லது சந்திராசாமி போன்று ஆயுத வியாபாரத் தொடர்பு என்றெல்லாம் இதுவரை புகார் ஏதுமில்லை.

இயக்கங்கள், போராட்டங்கள் அல்லது நமது அரசியல் சட்டம், ஜனநாயக ஆளுகை ஆகியவற்றின் மூலம் விடுதலை கிடைக்காத நிலையில் இந்த அடித்தள மக்கள் சாதி ஒழிப்பையும், சமத்துவத்தையும் ராம்பால் அளித்த இந்தக் கற்பனையான விடுதலையின் மூலம் சுகித்தார்களோ? மதம் குறித்துப் பேராசான் கார்ல் மார்க்ஸ் சொன்னவைதான் நினைவுக்கு வருகின்றன.

எல்லோரும் கைவிட்டார்கள் என்கிறபோது இந்த 'எல்லோரிலும்' என்பதில் அரசியல் இயக்கங்கள் தவிர கடவுளரும் அடக்கமாகிறார்கள் போலும். இல்லாவிட்டால் ஆலய வழிபாடுகளுக்கு அப்பால் எப்படி இந்த அவதார மனிதர்களின் வழிபாடுகள் இடம்பெற்றன?

கடவுளர் கைவிட்ட இடங்களை பொருள்முதல்வாதிகளோ இல்லை பகுத்தறிவாளர்களோ இல்லை அடையாள அரசியலாரோ யாராலும் நிரப்ப இயலவில்லை.

இறுதியாக, அரசியல்வாதிகளுக்கும் இந்த அவதார மனிதர்களுக்கும் இடையில் உள்ள உறவு இவர்களின் பெருக்கத்தில் என்ன பங்கு வகிக்கிறது? ஒருவரால் மற்றவர் பலன் பெற்றனர் என்பதுதான். சத்திய சாயிபாபாவின் படுக்கை அறையில் மூவர் கொலை செய்யப்பட்ட மர்மம் முழுமையாக விளக்கப்படாததற்கும், அவர் மீது முன்வைக்கப்பட்ட ஐயங்கள் அகற்றப்படாமல் அவர் தொடர்ந்து அவதார மனிதராகவே இருந்து மறைந்ததற்கும் இடையில் காங்கிரஸ் ஆட்சியில் பிரதமராக இருந்த நரசிம்மராவின் பங்கை யாரும் மறுத்துவிட இயலாது.

இந்துத்துவ அமைப்புகளைப் பொறுத்தமட்டில் அவை எப்போதும் இந்த அவதார மனிதர்களை அணுக்கமாகவே பார்த்து வந்துள்ளன. பாரம்பரிய மத பீடங்களைக் காட்டிலும் இவர்களைக் கையடக்கமாகப் பாவிக்க இயலும் என்கிற நோக்கில் இவர்களைக் கையாண்டன. இப்படி உருவாகும் சாமியார்கள் மற்றும் சாமியாரினிகளிடமிருந்தும் அவர்கள் தம் இயக்கங்களுக்கு ஆளெடுத்தார்கள். உமா பாரதி, சாத்வி பிரக்ஞா, மகத் சந்தானந்த், மத்தியத் துணை அமைச்சராக உள்ள நிரஞ்சனா ஜோஷி இப்படி நிறையச் சொல்லலாம்.

அஸ்ராம் பாபுவின் வளர்ந்து வந்த செல்வாக்கைக் கண்டு அவரைக் கையகப்படுத்துவதில் இந்துத்துவ அமைப்புகள் குறியாக இருந்தன. கடந்த ஆறு ஆண்டுகளில் அஸ்ராமின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் ஆர்.எஸ்.எஸ்ஸின் 'ஆர்கனைசர்' இதழ் பாராட்டிக் கொண்டிருந்தது. விசுவ இந்து பரிஷத்தின் சுவாமி சத்யமித்ரானந்தர் அஸ்ராமை மகாத்மா காந்தியுடனும் விவேகானந்தருடனும் ஒப்பிட்டுப் பேசினார். 2005இல் நடைபெற்ற ஆர்.எஸ் எஸ்ஸின் பெண்கள் அமைப்பான ராஷ்ட்ரீய சேவிகா சங்கத்தின் 15 ஆம் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக அவர் அழைக்கப்பட்டார். 2007இல் நடைபெற்ற ஸ்வதேசி ஜாக்ரான் மன்ச் அமைப்பின் மகாநாட்டில் திறப்புரை வழங்கும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது. அஸ்ராமின் நிலப் பறிப்பு, ஊழல் முதலியன வெளிப்பட்டபோது பா.ஜ.க ஆளும் மாநிலங்கள் அவர் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்தன. உமாபாரதி, மத்திய பிரதேச தொழில்துறை அமைச்சர் கைலாஷ் விஜய வர்கியா, பிரபாத் ஜா முதலிய பா.ஜ.க தலைவர்கள் கேடயங்களாக இருந்து அவரைப் பாதுகாத்தனர். 2012 டில்லி பாலியல் வன்முறைக்கு எதிராக இந்தியாவே கொந்தளித்துக் கொண்டிருந்தபோது அஸ்ராம், ''இரண்டு கைகளும் சேர்ந்து தட்டாமல் ஓசை வராது. அந்தப் பெண் தன்னை வன்புணர்ச்சி செய்ய வந்தவர்களைக் கும்பிட்டு, 'அண்ணா, என்னை உங்கள் சகோதரியாக நினைத்துக் கொள்ளுங்கள்' எனக் கேட்டிருந்தால் இப்படி நடந்திருக்காது'' என உளறியதை அனைவரும் கண்டித்தபோது உமாபாரதி அந்தக் கூற்றுக்குச் சப்பைக்கட்டு கட்டினார். இந்துத்துவ பயங்கரவாதி சாத்வி ப்ரக்ஞாவை அஸராம் குற்றமற்றவர் எனச் சொன்னதை 'ஆர்கனைசர்' இதழ், ''அது, அது அப்படித்தான் சொல்லணும்'' என வாயாரப் பாராட்டியது. தேர்தல்களில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக அஸ்ராம் யோகாசனப் பட்டறைகளை நடத்திப் பிரசாரம் செய்து வந்ததைக் கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் தேர்தல் ஆணையத்தின் முக்கிய பணிகளாக இருந்தன.

பாபா ராம்தேவ் தான் ஒன்றும் பா.ஜ.க ஆதரவாளன் இல்லை எனச் சொல்லி வந்தாலும் அவருக்கு எதிராகக் காங்கிரஸ் அரசு நடவடிக்கைகள் எடுத்தபோது அதை இந்துத்துவவாதிகள் கண்டித்தனர், 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வையும் மோடியையும் ராம் தேவ் ஆதரித்துப் பிரசாரம் செய்தார். 'பாரத் ஸ்வாபிமான்' என்றொரு கட்சியைத் தொடங்கப் போவதாக ராம்தேவ் சொல்லி வந்த போதும் இறுதியில் பா.ஜ.க ஆதரவு நிலையையே எடுத்து இயங்குகிறார்.

யோகா, ஆயுர்வேதம், சுதேசிப் பொருட்களுக்கு ஆதரவு, உலகமய எதிர்ப்புச் சொல்லாடல், வெளிப்படையான பெரும்பான்மைவாதம் ஆகியவற்றுடன் இயங்கும் இவர்களைத் தங்களின் முதன்மை ஆதரவு சக்தியாக இந்துத்துவ அமைப்புகள் கருதுவதில் வியப்பில்லை. ஓரினப் புணர்ச்சி எதிர்ப்பு, 'காதலர் தினத்தைப் பெற்றோர்களை வழிபடும் தினமாகக் கொண்டாடவேண்டும்', 'பள்ளிகளில் பாலியல் கல்விக்குப் பதிலாக யோகா சொல்லிக் கொடுக்க வேண்டும்' என்று இவர்கள் உளறுவதெல்லாம் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு உவப்பளிக்கும் செயல்கள்தானே. நான் முன்பே சொன்னபடி பாரம்பரியமான மத பீடங்களைக் கைக்குள் வைத்துக் கொள்வது என்பதைக் காட்டிலும் பெரும் மக்கள் திரள் ஆதரவுடன் கூடிய இந்த அவதாரங்களைக் கையடக்கமாக வைத்துக் கொள்வதையே அது விரும்புகிறது.

இந்தச் சாமியார்கள் அவ்வப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் தலையிட்டுக் கவனம் பெறுவதையும் ஒரு உத்தியாகக் கொண்டுள்ளனர். ராம்தேவ் கறுப்புப் பணம் மற்றும் ஊழலுக்கு எதிராக டில்லியில் பெரும் போராட்டம் ஒன்று நடத்தியதும், ரவிசங்கர் மகராஜ் ஈழப் பிரச்சினையில் தலை யிட்டதும், பாலியல் வன்முறை, கொலை முதலிய குற்றச்சாட்டுக ளைச் சந்தித்த காஞ்சி சங்கராச்சாரி பாபர் மசூதிப் பிரச்சினையில் முஸ்லிம்களுக்கு எதிராகத் தலையிட முயற்சித்ததும் சில எடுத்துக்காட்டு கள். ஆனாலும் ராம்தேவ் உட்பட இவர்கள் யாரும் தம் செல்வாக்கை ஒரு அரசியல் கட்சியாக மாற்றிவிட முடியவில்லை என்பதும் கவனத்துக் குரியது.

நவீன உலகில் கார்பொரேட் ஊடக வெளிச்சத்தில் நட்சத்திரங்களாக மின் னும் இவர்கள் சமூகத்தில் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். குடந்தையில் எனக் கொரு நண்பர். மிகப் பெரிய பாத்தி ரக்கடை உரிமையாளர். சுவாமி சிலைகள் விற்பனையும் உண்டு. இலக்கிய ஆர்வமுள்ள அவர் நல்ல நூல் வாசிப்பாளர். பகுத்தறிவு சார்ந்த சிந்தனைகளை உடைய அவரது பாத் திரக் கடையில் நிறைய சுவாமி படங் களும், இணையாக ரவிசங்கர் குருஜி யின் படமும் இருக்கும். உங்களுக்குத்தான் சுவாமியார்கள் மீது நம்பிக்கை இல்லையே பின் ஏன் இந்தப் படம் இங்கே எனக் கேட் டேன். அவர் சொன்னார்: 'திருமணச் சீராகப் பாத்திரங்களை மணப் பெண் ணுக்கு அளிக்க வருகிறவர்கள்தான் இங்கு அதிகம். அந்தப் பாத்திரங்கள் வாங்கி முடித்தவுடன் சுவாமி படங்க ளையும் குருஜியையும் வணங்கி அவற்றில் ஒன்றை வாங்க வருபவர்க ளிடம் எடுத்துக் கொடுப்பது ஒரு சடங்கு.. ரவி சங்கர் மக்கள் மத்தியில் ஊடகங்களின் மூலம் ரொம்பப் பிரப லமாகி உள்ளார் இல்லையா?' என் றார். சில ஆண்டுகளுக்குப் பின் அவ ருக்கும் ரவிசங்கர் மடத்தைச் சேர்ந்த வர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டு அவர் அதிலிருந்து ஒதுங்கினார். அப் போது ரவிசங்கரின் அடியார்கள் வந்து குருவின் படத்தைக் கடையிலி ருந்து அகற்றுமாறு அவரை எச்சரித் துச் சென்றனர். ஆக அவர்களுக்கும் தெரிந்திருந்தது குருவின் வணிக முக்கியத்துவம்.



ராம்பாலின் பக்தர் ஒருவரை இழுத்துச் செல்லும் பொலிஸார்

தம்மிடம் வருபவர்களை இந்த அவதார மனிதர்கள் தக்க வைக்கும் உத்திகள் குறித்து உளவியலாளர்க ளின் கருத்துகளைத் தொகுத்துப் பல ரும் எழுதியுள்ளனர். வருகிறவர்க ளின் சுயசிந்தனையையும் சுயத்தை யும் அழித்தல் இவர்களின் முதல் உத்தி, நித்தியானந்தா, 'மனம் ஒரு குரங்கு. அதை அலைய விடாதீர்கள். உங்கள் மனதில் படிந்து கிடக்கும் ஐயங்களைத் துடைத்தெறிந்து குரு சொல்வதைக் கேளுங்கள்..' எனச் சொல்வதை அவரது பக்தை ஒருவர் பதிவு செய்துள்ளார். சமூகம் பதித் துள்ள மூட நம்பிக்கைகளை நீக்கிய 'நிர்வாண சிந்தனா முறை' தான் புதியதைக்கற்க உதவும் என்றார் பெரி யார். 'எல்லாவற்றையும் சந்தேகி' என்றார் மார்க்ஸ். இந்தச் சாமியார் களோ சமூகமும், பகுத்தறிவும் உரு வாக்கியுள்ள நியாயமான ஐயங்க ளைத் துறக்கச் சொல்கின்றனர். பெரியாரும் மார்க்ஸும் சுய சிந்த னையை வற்புறுத்தினர். இவர்களோ சுயத்தை அழித்து வணங்கும் குரு விடம் ஐக்கியமாகச் சொல்கின்றனர்.

பாவங்களில் எல்லாம் பெரியது 'குருத் துரோகம்தான்' என இவர்கள் அறிவுறுத்துகின்றனர். தொடக்க நிலைப் பக்தர்களை ஒரு நாளில் சுமார் 20 மணிநேரம் ஏதேனும் பயிற் சிகளில் ஈடுபடுத்திப் படுத்தவுடன் எதையும் சிந்திக்காமல் உறங்க வைக் கும் உத்தியைச் சுட்டிக் காட்டுகிறார் இன்னொரு ஆய்வாளர். குருவை முழுமையாக நம்பி ஏற்றுக் கொண்ட வர்களுக்குப் புதிய பெயர் ஒன்றைச் சூட்டுவது இன்னொரு உத்தி. இதன் மூலம் அவர்கள் தம் பழைய வாழ் வையும் அடையாளங்களையும் துறந்து குருவில் ஐக்கியமாகின்றனர்.

தங்களின் சுயத்தை இழந்து குரு விடம் ஐக்கியமானவர்கள் அவர் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படும் போது அவற்றை நம்புவதில்லை. அவர் குற்றமிழைத்தார் அல்லது தோல்வியடைந்தார் என ஏற்பது அவர்கள் தங்களையே இழப்பதற் கொப்பு. தாங்களே வீழ்ந்ததற் கொப்பு. அதன் விளைவுதான் அவர் கள் இப்படிப் பைத்தியமாக அவர் களை நம்பி உயிரையும் கொடுக்கத் துணிவது என்கிறார் இன்னொரு ஆய்வாளர்.

எப்படியோ இந்தத் தகவல் தொழில் நுட்ப உலகமய யுகத்தில் விஞ்ஞான உண்மைகளுக்கு ஒரு சவாலாக இந்தச் சாமியார்கள் தங்க ளுக்கும் ஒரு இடத்தைத் தக்கவைத் துக் கொண்டுள்ளனர். இது ஆபத்தா னது என உணர்பவர்களுக்கு இந்த ஆபத்தை எதிர்கொள்ளும் வழிதான் தெரியவில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. உட்கட்சித் தேர்தலில் பரபரப்பு

## வாக்காளர்களிடம் பாலில் சத்தியம்



பரபரப்பான அரசியல் சூழலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட்கட்சித் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிளைக்கழகத் தேர்தல், ஒன்றிய மற்றும் நகரச் செயலாளர்கள் தேர்தல் முடிந்து இப்போது மாவட்டச் செயலாளர் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் பெறப்பட்டுள்ளன. இந்தப் புதிய மாவட்டச் செயலாளர்கள் எல்லாம் சேர்ந்து தி.மு.க.விற்கு புதிய தலைவரை தேர்வு செய்யவிருக்கிறார்கள். தி.மு.க.விற்குள் மு.க.ஸ்டாலின், மு.க.அழகிரி, கனிமொழி ஆகிய அணிகள் பேசப்பட்டாலும், அழகிரியின் அணி சுத்தமாகவே துடைத்து எறியப்பட்டு விட்ட நிலையில்தான் இன்றைய தி.மு.க. இருக்கிறது. தற்போதைக்கு அதற்கு மாறாக தலைவர் கருணாநிதி ஆதரவாளர்கள், மு.க.ஸ்டாலின் ஆதரவாளர்கள் என்ற நிலையில் 14ஆவது கட்சித் தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிறது தி.மு.க. கனிமொழியின் ஆதிக்கம் கட்சிக்குள் மிக மிகக் குறைவு. அந்த வகையில் இன்று எஞ்சி நிற்பது தி.மு.க. தலைவர் கருணாநிதி. இன்னொரு பக்கம் இளைஞர்களை குறிப்பாக தன் ஆதரவாளர்களை கட்சியின் ஒட்டுமொத்த கட்டமைப்பிலும் நிறுவ வேண்டும் என்று நிற்கும் மு.க.ஸ்டாலின்.

கட்சித் தேர்தல் என்பது பொதுத் தேர்தல் போல் தி.மு.க.வில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வாக்காளர்களுக்கு பொதுத் தேர்தலில் பணம். கொடுப்பார்கள். ஆனால் தி.மு.க. உள்கட்சித் தேர்தலிலும் இதற்கு சற்றும் குறைவில்லை என்ற நிலை. முதல் ரவுண்டில் கிளைக் கழகத் தேர்தல் நடந்து முடிந்தது. இது தான் கட்சியின் அடித்தளம். இவர்கள் கூடித்தான் ஒன்றியச் செயலாளரை தேர்வு செய்கிறார்கள். அவர்கள் மூலம் மாவட்டச் செயலாளர்கள் வருவார்கள். தி.மு.க.வில் உள்ள மாவட்டச் செயலாளர்கள் அனைவருமே ஒரு குறுநில மன்னர்கள் போல் காட்



சென்னை மெயில்

முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியளிக்கிறார்கள். தூத்துக்குடியில் இருக்கும் பெரியசாமி, ராமநாதபுரத்தில் சுப.தங்கவேலன், புதுக்கோட்டையில் பெரியண்ணன் அரசு, திருச்சியில் நேரு, விழுப்புரத்தில் பொன்முடி என்று ஆங்காங்கே குறுநில மன்னர்கள்! இதுதவிர மற்றவர்களும் இருக்கிறார்கள்.

மாவட்டச் செயலாளர்கள் தங்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள எடுத்த எடுப்பிலேயே கிளைக் கழகத் தேர்தல்களில் தங்களது ஆதரவு கிளைக் கழகங்களை மட்டுமே பெரும்பான்மையாகப் பதிவு செய்து கொண்டார்கள். அவர்களுக்கு வேண்டாத கிளைக்கழகங்களை பதிவு செய்யாமல் விட்டார்கள். தங்களுக்குப் போட்டியாக யாரும் உருவாகி வராத படி கிளைக் கழகத் தேர்தல்களில் மாவட்டச் செயலாளர்களின் ஆதிக்கம் கொடிகட்டிப்பறந்தது. இது போன்ற வேளையில்தான் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. அதில் தி.மு.க.விற்கு கிடைத்த மோசமான தோல்விக்குப் பிறகு தோல்விக்கான காரணங்களை ஆராய கமிட்டி அமைக்கப்பட்டது. அக்கமிட்டி கொடுத்த அறிக்கையின்படி தி.மு.க. மாவட்டச் செயலாளர்களின் எண்ணிக்கையை 65 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. குறுநில மன்னர்களாகத் திகழும் மாவட்டச் செயலாளர்களின் பல்லைப் பிடுங்கவே இப்படியொரு ஏற்பாட்டை கட்சித் தலைமை செய்தது.

இதனால் பல மாவட்டங்கள் இரண்டாகவும், மூன்றாகவும் பிரிக்கப்பட்டன. இந்த மாவட்டங்களின் எண்ணிக்கை மூலம் குறுநில மன்னர்களை நீக்க வேண்டும் என்று தலைமை முடிவு எடுத்த நேரத்திற்கு முன்பாகவே மெஜாரிட்டியான கிளைக் கழகங்கள் அதே குறுநில மன்னர்களின் வசம் வந்துவிட்டது. இதை ஏனோ தலைமை எதிர்பார்க்கவில்லை என்பதே கட்சியில் உள்ள சீனியர்களின் எண்ணமாக இருக்கிறது. அதைவிட முக்கியமாக தொடர்ந்து மாவட்டச் செயலாளர்களாக இருப்பவர்களில் பலர் மு.க.ஸ்டாலினின் ஆதரவாளர்கள். இதனால் தி.மு.க. தலைவர் கருணாநிதி அனைவரையும் மாற்ற வேண்டும் என்று எத்தனிக்க, மு.க. ஸ்டாலினோ பழையவர்களும் இருக்கட்டும். புதிய மாவட்டங்களில் புதியவர்கள் வரட்டும் என்று தன் கருத்தை முன்னிலைப்படுத்தினார். ஆனால் அப்படி வரும் புதிய மாவட்டச் செயலாளர்களும் ஏற்கனவே குறுநில மன்னர்களாக இருக்கும் மா.செ.க்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்டவர்கள் என்ற தகவல் தி.மு.க. தலைமைக்கு எரிச்சலூட்டியது.

ஆகவே கிளைக்கழகத் தேர்தல் முடிந்து ஒன்றிய, நகரச் செயலாளர்கள் தேர்தல் நடைபெறும் போதும் தி.மு.க. தலைமை வித்தியாசமான ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி தேர்தலில் போட்டியிட விரும்புவோர் மாவட்டக் கழகங்கள் தவிர தலைமைக் கழகத்திலும் வேட்பு மனுக் கொடுக்கலாம் என்று பிரகடனப்படுத்தியது. மாவட்டச் செய



லாளர்களுக்கு வேண்டாதவர்களும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதற்காக தி.மு.க. தலைமை எடுத்த முடிவு. இதன் அடிப்படையில் ஒன்றிய, நகரச் செயலாளர் தேர்தல் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது. இத் தேர்தல்களில் வாக்காளர்களாக இருக்கும் கிளைக்கழகச் செயலாளர்கள் போன்றவர்களுக்கு குற்றாலத்திற்கு குளுகுளு சுற்றுலா, செல்போன் ஐ-போன், மோட்டார் பைக் என்றெல்லாம் கூட வாங்கிக் கொடுத்து வாக்குகளைத் திரட்டினார்கள் ஒன்றியச் செயலாளர்கள். ஒருவாரம் குற்றாலம் சுற்றுலா, ஐந்து நாள் கோவா சுற்றுலா என்பதெல்லாம் தி.மு.க. உள்கட்சித் தேர்தலில் வாக்காளர்களை வசீகரப்படுத்தும் சர்வ சாதாரண விடயங்களாகிப் போனது. ஜெயிப்பது என்பது கத்தி முனையில் இருப்பது போலிருந்தது பல ஒன்றியச் செயலாளர்களுக்கு என்றால் மிகையாகாது. சில ஒன்றியச் செயலாளர்கள் தங்கள் வாக்காளர்களை சுற்றுலா அழைத்துச் சென்று, அவர்கள் குடும்பச் செலவுகளைக் கொடுத்து வாக்குப் போட தேர்தல் நடக்கும் இடத்திற்குப் போன பிறகு கிராஸ் வோட்டிங் போட்டு எதிர் வேட்பாளரை ஜெயிக்க வைத்த சம்பவங்களும் தமிழகத்தில் நடைபெற்றன. ஆகவே வாக்களிக்கப் போகும் முன்பு அவர்களிடம் பாலில் சத்தியம் செய்து வாங்கிக் கொண்டு தேர்தலுக்கு அழைத்து வந்த ஒன்றியச் செயலாளர்களும் இருக்கிறார்கள். பாலில் சத்தியம் செய்தும் மாற்றி ஓட்டுப் போட்ட கட்சி நிர்வாகிகளும் இருக்கிறார்கள்.

ஒரு பதவிக்குப் போட்டியிடுபவருக்கு அதிக வாக்குகள் இருந்தால் அவர் எளிதில் வெற்றி பெற்றுவிடுவார். ஆனால் அவரே ஸ்டாலின் எதிர்ப்பாளராக இருந்தால் வெற்றி

**நான் உங்களுக்கு உழைத்தது போல் எனது மகன் தளபதி ஸ்டாலினுக்கு உழைக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்காகவே என் மகனுக்கு மாவட்ட செயலாளர் பதவிகேட்டேன். கொடுக்கவில்லை என்றால் பரவாயில்லை என்று கலைஞரிடம் கூறிவிட்டு சமாதானக்கொடி பறக்க விட்டிருக்கிறார் துரைமுருகன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவது கடினம் என்பது போல் சில இடங்களில் உள்கட்சித் தேர்தலில் தில்லுமுல்லுகளும், சமரசப் பஞ்சாயத்துகளும் நடைபெற்றுள்ளன. தி.மு.க.வைத் தோற்றுவித்த அறிஞர் அண்ணா பிறந்த மாவட்டம் காஞ்சிபுரம். அங்குள்ள பம்மல் ஒன்றியச் செயலாளர் தேர்தலில் பிரச்சினை எழவே, இது என்ன தி.மு.க.வா? அல்லது அன்பரசு முன்னேற்றக் கழகமா? (இந்த அன்பரசு காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்) என்று கோபித்துக் கொண்டு, அந்த மாவட்டச்செயலாளரின் ஆதரவு பெற்ற வேட்பாளரை தி.மு.க. தலைவர் கருணாநிதியே நேரடியாகத் தலையிட்டு தோற்கடித்த சம்பவங்களும் அரங்கேறின. சில இடங்களில் கட்சித் தேர்தல் நடத்தியது தவறு என்று வழக்குத் தொடரப்பட்டு, தி.மு.க. தலைவர் கருணாநிதி, பொதுச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் ஆஜராகச் சொல்லி நீதிமன்றங்கள் அழைப்பாணையும் அனுப்பியது. ஒன்றியச் செயலாளர்களாக தேர்வு பெறுவோர் மாவட்டச் செயலாளர்களை தேர்வு செய்பவர்கள் என்பதை விட, அவர்கள் அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட தொகுதி கேட்கும் உரிமை படைத்தவர்களாகிறார்கள். இதெல்லாம்தான் இந்தத் தேர்தல் இப்படி பந்தயம் போல் தி.மு.க.விற்குள் பதற்றத்தை உருவாக்கியதற்கு காரணம்.

ஒரு வழியாக ஒன்றிய, நகர அளவிலான தேர்தலும் முடிவுக்கு வந்து தேர்வு பெற்றவர்கள் பட்டியல் தி.மு.க.வின் அதிகார பூர்வமான முரசொலி பத்திரிகையில் வெளியிடப்பட்டு விட்டது.

இப்போது தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர் தேர்தல் நடைபெறப் போகிறது. அதற்கான வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. அதே போல் சென்னை மாநகரத்தில் உள்ள வட்டக் கழகச் செயலாளர்களுக்கான தேர்தல்கள் தனியாக நடைபெறுகின்றன. சென்னை தேர்தல் துவங்கியவுடனேயே மு.க.ஸ்டாலினுக்கும், தென் சென்னை மாவட்டச் செயலாளராக இருக்கும் அன்பழகனுக்கும் லடாய் வெடித்தது. அவர் போகும் நிகழ்வுகளுக்கு இவர் போவதில்லை என்ற அளவில் இருவருக்கும் மோதல். மாவட்டச் செயலாளர்களுக்கான தேர்தல் ஏற்பாடுகள் தொடங்கியதுமே முதலில் துரைமுருகன் பிரச்சினை தலைதூக்கியது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராக இருக்கும் துரைமுருகன் தன் மகன் கதிருக்கு வேலூர் மத்திய மாவட்டச் செயலாளர் பதவி கேட்கி

## இந்திரா காந்தியைப் புகழ்ந்த அ.தி.மு.க. எம்.பி



அ.தி.மு.க.வின் அணுகுமுறையில் திடீர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த முறை இந்தியப் பாராளுமன்றத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து தமிழக மீனவர்கள் விடுதலை பற்றி பாராளுமன்றத்தில் பேசிய அ.தி.மு.க. எம்.பி. வேணுகோபால் மறைந்த பிரதமர் இந்திரா காந்தியைப் பாராட்டிப் பேசினார். இலங்கையால் வரும் பாதுகாப்புக் கவலைகள் குறித்து அவர் திறம்பட நடவடிக்கை எடுத்தார் என்று சுட்டிக்காட்டினார். திருச்சி அ.தி.மு.க. எம்.பி. குமார் கச்சதீவை மீட்க அம்மா நடவடிக்கை எடுக்கிறார். ஆனால் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாராளுமன்றத்திலேயே சாடினார். தென் சென்னை அ.தி.மு.க. எம்.பி. ஜெயவர்தன், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்களை இலங்கையிலிருந்து மீட்க சட்ட உதவிகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கு உதவிகள் என்று 63.85 லட்சம் ரூபா கொடுத்தார் எங்கள் அம்மா. ஆனால் மத்திய அரசு எந்த நிதியுதவியும் செய்யவில்லை என்று தாக்குதல் தொடுத்தனர். ஐந்து மீனவர்கள் விடுதலைக்கு பிரதமர் நரேந்திரமோடியும், பா.ஜ.க.வுமே காரணம் என்று கூறி வருகின்ற நிலையில், அ.தி.மு.க.வின் இந்தத் தாக்குதல் வித்தியாசமாக இருந்தது.

## ஜெயா வழக்கு- உச்சநீதிமன்றம் என்ன செய்யும்?



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு அப்பீல் மனு கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. டிசம்பர் 18ஆம் திகதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவின்படி இது நடைபெற்றுள்ளது. இதற்கிடையில் ஜெயலலிதாவின் வழக்கறிஞர் பாலி நாரிமன் டிசம்பர் 11ஆம் திகதி சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்து, அப்பீல் மனுவை விரைந்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார். அப்படி அவசரமாக எடுத்துக் கொள்ள முடியாது டிசம்பர் 18ஆம் திகதி வழக்கம் போல் விசாரணை நடைபெறும் என்று கூறியிருக்கிறார் தலைமை நீதிபதி எச்.எல்.டத்து.

அன்றைய தினம் கர்நாடக உயர்நீதிமன்றம் மூன்று மாதங்களுக்குள் அப்பீலை விசாரித்து முடிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிடுகிறதா என்பதை இந்தியா முழுவதும் உள்ளவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். ஏனென்றால் லாலு பிரசாத் யாதவ், ஓம் பிரகாஷ் சவுதாலா, மது கோடா உள்ளிட்ட பல முன்னாள் முதல்வர்களின் வழக்கு நிலுவையில் இருக்கின்ற சூழலில், அவர்களும் இந்த நிவாரணத்தை கேட்கக் கூடும் என்பது வழக்கறிஞர்களின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். கோவையில் பொங்களூர் பழனிச்சாமி மனைவி மாவட்டச் செயலாளர், ஈரோட்டில் என்.கே.கே. பெரியசாமி மகன் ராஜா மாவட்டச் செயலாளர் என்றால் என் மகன் ஏன் மாவட்டச் செயலாளர் ஆகக் கூடாது என்ற அடிப்படையில் கேட்டிருக்கிறார் துரைமுருகன். ஆனால் அதற்கு கலைஞர் கருணாநிதி சம்மதிக்கவில்லை. கோபத்தில், அப்ப நான் ராஜிநாமா செய்கிறேன் என்று துரைமுருகன் கூற, கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போ. பொன்முடி போன்றவர்களுக்கு அந்தப் பதவியைக் கொடுக்கிறேன் என்று கலைஞர் கருணாநிதி சொல்ல, தி.மு.க.வில் டிசம்பர் 11ஆம் திகதி பெரும் பரபரப்பு. துரைமுருகன் தன் சொந்த ஊரான வேலூருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்.

அடுத்த நாள் டிசம்பர் 12. சூப்பர் ஸ்டார் ரஜினி பிறந்த நாள். பிரதமர் மோடி, கலைஞர் கருணாநிதி, ஸ்டாலின் அனைவரும் அவருக்கு வாழ்த்துச் சொன்ன காட்சிகள் ஒரு புறத்தில் அரங்கேற, இன்னொரு புறத்தில் துரைமுருகன் சப்தம் எழுப்பாமல் சென்னை திரும்பினார். நள்ளிரவிலேயே தி.மு.க.வில் இருந்து என்னைப் பிரிக்க முடியாது. மரணம் மட்டுமே என்னைப் பிரிக்கும் என்று கோட்டூர் புரத்தில் உள்ள தன் வீட்டு முன்பு காத்திருந்த நிருபர்களிடம் கூறினார். அன்றே கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தார். நான் உங்களுக்கு உழைத்தது போல் என் மகன் தளபதி ஸ்டாலினுக்கு உழைக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்காகவே என் மகனுக்கு மாவட்டச் செயலாளர் பதவி கேட்டேன். கொடுக்கவில்லை என்றால் பரவாயில்லை என்று கூறிவிட்டு, அவரிடம் சமாதானக் கொடியைப் பறக்கவிட்டார். இத்துடன் துரைமுருகனுக்கும், தி.மு.க. தலைமைக்கும் இடையே ஏற்பட்ட திடீர் மோதல் திடீர் சமரசமாக மாறியது.

இதைத் தொடர்ந்து மாவட்டச் செயலாளர்கள் தேர்தல் நடக்கவிருக்கிறது. இப்போதே போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வாக்காளர்களை தூக்கிக் கொண்டு போய் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளத் தயாராகி விட்டார்கள். மாவட்டச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் சிலர் தங்கள் வாக்காளர்களை வெளியூர்களில் தங்க வைத்துள்ளார்கள். அப்படி வெளியூரில் உள்ள வாக்காளரின் வீட்டில் உள்ள இல்லத்தரசிகளை சந்திக்கிறார்கள் போட்டி வேட்பாளர்கள். உங்கள் கணவரை எனக்கு வாக்களிக்கச் சொல்லுங்கள் என்று கூறி பண முடிப்பை கொடுத்து விட்டுப்

## ஓ.பி. பேச்சு உச்சநீதிமன்றத்தில் எதிரொலிக்குமா?



டிசம்பர் 18ஆம் திகதி ஜெயலலிதாவின் மனு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வரும் போது அவர் ஜாமினை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் ஒரு தரப்பு மனுத் தாக்கல் செய்து அதுவும் விசாரணைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக சட்டமன்றம் டிசம்பர் 4ஆம் திகதி கூடியது. அந்தக் கூட்டத்தின் இறுதியில் பேசிய முதலமைச்சர் பன்னீர்செல்வம், இந்த அரசை புரட்சித் தலைவி தான் வழி நடத்துகிறார் என்று பேசினார். ஜெயலலிதாவிற்கு ஜாமின் வழங்கிய போது சில நிபந்தனைகளை சுப்ரீம் கோர்ட் விதித்தது. அந்த நிபந்தனைகள் குறித்து பாலி நாரிமன் ஜெயலலிதாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில், உங்கள் வழிகாட்டுதலின்படி தமிழக அரசு இயங்குகிறது என்ற தோற்றத்தை உருவாக்கக்கூடாது என்பதும் ஒரு நிபந்தனை என்று குறிப்பிட்டு இருக்கிறாராம். இந்நிலையில் அரசாங்கத்தை அம்மா நடத்துகிறார் என்று முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் கூறியது சர்ச்சையாகியிருக்கிறது. இது பற்றி ஏற்கனவே தனியாக கடிதம் எழுதியுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி, சட்டமும், நீதியும் என்ன செய்கிறது என்று பார்ப்போம் என்று கூறியிருக்கிறார். டிசம்பர் 18ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வரும் போது இந்த விவகாரமும் பூகம்பமாகும் வாய்ப்பு இருக்கிறது.

## சோனியாவுக்கு பிறந்த நாள் வாழ்த்து



ஜி.கே.வாசன் தனிக்கட்சி துவங்கினாலும், குஷ்பு காங்கிரஸில் சேர்ந்த பிறகு தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெளுத்துக் கட்டுகிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கிறார். அதே நேரத்தில் அ.தி.மு.க.வையும் விட்டுவைக்கவில்லை. சமீபத்தில் ஜெயலலிதா தன் மீதான வருமான வரி கணக்கு தாக்கல் செய்யாத வழக்கில் அபராதம் கட்டி வழக்கை முடித்துக் கொள்கிறேன் என்று எழும்பூர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதற்கு வருமானவரித்துறையும் சம்மதித்து, அபராதத் தொகையாக சுமார் 1.99, கோடி ரூபாயை வசூலித்துள்ளது. இது பற்றிக் கூறியுள்ள இளங்கோவன், வழக்கை ஜெயலலிதா சந்திக்க வேண்டுமே தவிர அபராதம் கட்டி தப்பிக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார். வாசனும், அ.தி.மு.க.வும் ஒன்று சேரலாம். எனவே நாம் தி.மு.க. ஆப்ஷனை க்ளோஸ் பண்ண வேண்டாம் என்று இளங்கோவன் கருதுகிறார். அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும், ஸ்டாலினும் சோனியா காந்திக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார்கள் என்று தகவல். 50க்கும் மேல் 100 வரை உள்ள வாக்காளர்கள் இருக்கும் மாவட்டங்களில் ஒரு வாக்கு 2 லட்சம் ரூபாய் வரை போகிறது என்று கட்சியில் போட்டியிடுவோரின் ஆதரவாளர்களே காதில் கிசுகிசுக்கிறார்கள். எல்லாம் முடிந்தாலும், புதுமுகங்கள் மாவட்டச் செயலாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதும் இப்போதுள்ள நிலைமை. இந்த மாவட்டச் செயலாளர்கள் தேர்வுக்குப் பிறகு தி.மு.க.வின் பொதுக்குழு உருவாகும். அந்தப் பொதுக்குழு வருகின்ற டிசம்பர் 21 அல்லது 29 ஆகிய திகதிகளில் ஒன்றில் நடைபெறும் என்று தி.மு.க.வட்டாரத்தில் கூறப்படுகிறது. அந்தத் தேர்தல் நெருங்க நெருங்க மு.க.ஸ்டாலின் தன்னிச்சையாக செயல்படுவது போன்ற தோற்றங்கள் ஏதும் வந்து விடாதபடி கலைஞர் கருணாநிதியும் பார்த்துக் கொள்கிறார். ஸ்டாலினும் பார்த்துக் கொள்கிறார். சட்டமன்றத்தில் பேசப்படும் விவகாரங்கள் குறித்து 'என் ஒப்புதலோடு வெளியிட்ட அறிக்கையில்' என்று சில தினங்களுக்கு முன்பு கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார். இதன் மூலம் என் வழிகாட்டுதல்படிதான் ஸ்டாலின் செயல்பட முடியும் என்பதை அந்த அறிக்கை மூலம் வெளிப்படுத்தினார். பிறகு டிசம்பர் 12ஆம் திகதி 15 சதவீத மின்கட்டண உயர்வை தடாலடியாக அறிவித்தது மின்சார ஒழுங்குமுறை ஆணையம். இது பற்றி தர்மபுரியில் நடைபெற்ற தி.மு.க. தொண்டர்கள் கூட்டத்தில் பேசிய ஸ்டாலின், தலைவரின் அனுமதி பெற்று மின்கட்டண உயர்வை எதிர்த்து போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தார். இது மட்டுமின்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் எல்லாம் அண்ணா அறிவாலயத்திற்கு வந்து மு.க.ஸ்டாலினைச் சந்திக்கிறார்கள் என்ற செய்தி எட்டியதும், கலைஞர் கருணாநிதியும் அறிவாலயத்திற்கு வந்து அவர்களைச் சந்திக்கிறார். தலைவர் தேர்தல் நடைபெறும் நேரத்தில் கலைஞர் கருணாநிதியை எதிர்த்து கேள்வி கேட்க தி.மு.க.வில் இன்றைக்கு யாரும் இல்லை என்றாலும், அத்தேர்தலுக்கு முன்பு ஸ்டாலின்தான் எல்லா முடிவுகளையும் எடுக்கிறார் என்ற எண்ணம் யாருக்கும் வந்து விடக்கூடாது என்பதில் தி.மு.க. தலைவர் உறுதியாக இருக்கிறார். இதை தி.மு.க. பொதுச் செயலாளராக இருக்கும் அன்பழகனும் ஒரு பொதுக்கூட்டத்தில், தமிழனைக் காப்பாற்ற தலைவர் கலைஞருக்குத்தான் தகுதியிருக்கிறது. அவரது வழிகாட்டி ஸ்டாலின் என்று பேசியிருக்கிறார். எல்லா விதத்திலும் தி.மு.க.வின் தலைவராக மீண்டும் கலைஞர் கருணாநிதி தேர்வு செய்யப்படுகிறார் என்பதற்கான சாத்தியக் கூறுகள் நிரம்பி நிற்கிறது.

ஏறக்குறைய ஒரு வருடமாக நடைபெறும் தி.மு.க.வின் உள்கட்சித் தேர்தல் இந்த டிசம்பர் 31ஆம் தேதிக்குள் முடிவுக்கு வந்து விடும். புத்தாண்டில் புது ஒன்றியச் செயலாளர்கள், புதிய மாவட்டச் செயலாளர்கள், புதிய மாநில பொறுப்பாளர்கள் என்ற புதிய அத்தியாயம் தி.மு.க.விற்கு பிறக்க இருக்கிறது. சில சீனியர் மாவட்டச் செயலாளர்கள் மாநில கட்சிப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். மற்றப்படி பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின், தலைவர் மு.கருணாநிதி போன்றோரின் பதவிகளில் பெரிய மாற்றம் இருக்கப் போவதில்லை. அதன்பிறகுதான் அ.தி.மு.க. அரசை எப்படி எதிர்கொள்வது, எது மாதிரியான போராட்டங்களை நடத்துவது, எந்த மாதிரியான கூட்டணி வைப்பது போன்ற முக்கிய வியூகங்கள் எல்லாம் வகுக்கப்படும் என்பதுதான் தி.மு.க.வின் மேல் மட்டத் தலைவர்கள் மத்தியில் உள்ள இப்போதைய எதிர்பார்ப்பு மட்டுமல்ல- மற்ற கட்சித் தலைவர்களும் இதைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். ■


## இந்தக் கலைஞர் எனக்குத் தலைவர் அல்ல- வைகோ



கடந்த டிசம்பர் 8ஆம் திகதி ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டி பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினார் வைகோ. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மோடி மோசம் என்பதே அவரது குற்றச்சாட்டு. குறிப்பாக ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்று வர பிரதமர் மோடி வாழ்த்தியதை வைகோ சுத்தமாக ரசிக்கவில்லை. கூட்டணியிலிருந்து வெளியேறியவுடன் நடைபெற்ற முதல் போராட்டம் திருப்பதிப் போராட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. சமீப காலமாக வைகோவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தேனியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், கலைஞரை முழுவதுமாக வெறுக்கிறேன் என்ற வைகோ, அன்புச்சகோதரி ஜெயலலிதா அவர்கள் என்னை அண்ணா, அண்ணா என்றுதான் அழைப்பார் என்று புகழ்ந்தார். மதுவிலக்கை அமல்படுத்தினால் ஜெயலலிதா மீண்டும் முதல்வர் ஆவார் என்றார். மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் மீண்டும், அந்தக் கால கலைஞர்தான் எனக்குத் தலைவர். இப்போது உள்ள கலைஞர் அல்ல என்று பட்டவர்த்தனமாகப் பேசினார். எல்லாவற்றிற்கும் மேலாக அ.தி.மு.க. அரசின் மின்கட்டண உயர்வு குறித்து எப்போதும் புயல் போல் அறிக்கை விடும் வைகோ இந்த முறை பூ போல் வார்த்தைகளைப் பயன்படுத்தி அறிக்கை விட்டுள்ளார். பா.ஜ.க.வையும், மோடியையும் கடுமையாக விமர்சிக்கும் தன் வேகம் அ.தி.மு.க.விற்குப் பிடிக்கும் என்பதை உணர்ந்து வைகோ வியூகங்களை வகுக்கிறார் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்



தெ.மதுசூதனன்

# பல்துறை புலமையாளர் பேராசிரியர் வி.சிவசாமி

## (1933-2014)

ஈழத்துச் தமிழ்ச்சூழலில் பல்துறைப் புலமையாளராக வாழ்ந்து வந்தவர் பேராசிரியர் விநாயக மூர்த்தி சிவசாமி அவர்கள். இவர் கடந்த மாதம் தமது 81ஆவது வயதில் (08-11-2014) காலமாகிவிட்டார். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத 'புலமைஇழப்பு' ஆகும். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம் மற்றும் பாளி ஆகிய மொழிகளில் ஆழமான அறிவும் புலமை ஆற்றலும் கொண்டவர். ஆய்வுத் தேட்டத்தில் நுணுக்கமான பார்வைகள் கொண்டவர். இதுவே இவரது புலமை ஆளுமையை வெளிப்படுத்தும் சுட்டிகளாகவும் அமைந்திருந்தன.

இவர் சமஸ்கிருதப் பேராசிரியராகவும் சமஸ்கிருதத்துறைத் தலைவராகவும் விளங்கியவர். அதேவேளையில், அந்த சமஸ்கிருத அறிவு வழியாக அனைத்திந்திய பண்பாட்டுத் துறைகள் பற்றிய ஆழமான அறிவு நோக்கும் ஆய்வுக் கண்ணோட்டமும் கொண்டவர். குறிப்பாக தமிழக வரலாறு, ஈழ வரலாறு பற்றிய நுண்ணிய ஆய்வுகள் இவரது புலமையின் அகற்சியையும் ஆழத்தையும் காட்டுபவை.

பேராசிரியர்.சிவசாமி (1933-2014) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்து முக்கிய புலமை ஆளுமைகளுள் ஒருவராக தமது புலமை அடையாளங்களை வெளிப்படுத்தியவர். இவர் யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அங்கே தனது ஆரம்ப/இடைநிலைக் கல்வியினை முடித்து பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இரண்டாம் கட்டக் கல்வியினைத் தொடர்ந்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி கல்விப்பணியில் உன்னத நிலையில் இருந்தது. இக்கல்லூரியில் இருந்து எண்ணிக்கையில் அதிகமான மாணவர்கள் அப்போது பல்கலைக் கழகம் சென்றார்கள். பேராசிரியர் சிவசாமியும் அக்கல்லூரியில் இருந்து 1955இல் பேராதனை பல்கலைக் கழகத்திற்கு அனுமதிபெற்றார்.

பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம், வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களை நன்கு கற்று பட்டதாரியாக வெளியேறினார். யாழ்ப்பாணக் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகவும் பின்னர் அக்கல்லூரியின் உயர்கற்கைப் பட்டப் பிரிவில் விரிவுரையாளராகவும் தமது பணிகளை மேற்கொண்டார். லண்டன் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதச் சிறப்புப் பட்டத் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் திறமையாக சித்திபெற்றார். பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தில் மூன்று வருடங்களுக்கு மேலாக வரலாற்றுத்துறையில் விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். இக்காலத்தில் சமஸ்கிருதத் துறையில் முதுகலை மாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

1974 இல் யாழ்ப்பாண வளாகம் அமைக்கப்பட்ட பொழுது சிவசாமி அவர்கள் ஓராண்டுகாலம் வரலாற்றுத்துறையில் விரிவுரையாளராக அமர்த்தப்பட்டார். பின்னர் சமஸ்கிருதத்துறையில் நிரந்தர விரிவுரையாளரானார். அன்று தொடக்கம் இவர் கற்றல் - கற்பித்தல்- ஆராய்ச்சி - பணிகளால் பல்துறை ஆளுமை மிக்க பேராசிரியராக உயர்வுபெற்றார். தனது ஓய்வுக்குப் பின்னரும் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகவும் பணிகளை மேற்கொண்டு வந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத் துறையினை பரபரப்பற்ற முறையில் கட்டியெழுப்பியவர். இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களின் இசை, நடனம் பற்றிய கோட்பாட்டு, வரலாற்று அறிவு விருத்திக்கு இவர் ஆற்றியுள்ள பணிகள் மிக மிகப் பெறுமதி வாய்ந்தவை. அந்தக் கற்கைநெறிகளின் அச்சாணியான புலமைத்துவத்திற்கு பேராசிரியரின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். 'பரதக்கலை' 'தென்னாசிய சாஸ்திர நடனங்கள்' முதலான நூல்களும், 'ஈழத்தமிழர் இசை மரபுகள் - ஒருவரலாற்று நோக்கு', 'சுவாமி விபுலானந்தரின் இசை நடனப் பணிகள்', 'இலங்கையிற் பரதநாட்டியம்' 'பண்ணிசையும் பரத நாட்டியமும் மலர்ச்சி பெற்ற கலைகள்' 'பரதக்கலை வளர்த்த ஈழத்துக் கலைஞர்' முதலான கட்டுரைகளும் இங்கு தனித்துக் குறிப்பிடப்படவேண்டியவை. தமிழில் இசை, நடனம் குறித்து ஆழமான அறிகைமரபுக்கான, ஆய்வு மரபுக்கான சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கும் கருத்தாடல் விருத்திக்கும் சாதகமான சூழமைவை உருவாக்கியுள்ளார்.

பேராசிரியரின் கல்விப் புலமை ஒரு துறைசார்ந்த அறிவுத் தொகுதிக்குள் மட்டும் அடங்காது. தமிழ், வரலாறு, தொல்லியல், சாசனவியல், சமஸ்கிருதம், இந்துநாகரிகம், நுண்கலை ஆகிய கல்விப்புலத்துறைகள் வரை பரந்திருந்தன. இதனால் பல தரப்பட்ட மாணவர் பரம்பரையையும் உருவாக்கியுள்ளார். பேராசிரியர் 1970 தொடக்கம் யாழ்ப்பாணம் தொல்லியற் கழகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். குறிப்பாக இக்கழகம் அமைக்கப்பட்டதிலும், அக்கழகம் நடத்திய சாசனவியல் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துவதிலும், இக்கழகத்தின் பெயரை அக்காலத்தில் நிலைநாட்டியதிலும் இவருக்கு முக்கிய பங்குண்டு.

பேராசிரியர் தனது முதுமாணிப் பட்டத்திற்கு கி.பி. 5ஆம் நூற்றாண்டுவரையுள்ள வடமொழியில் பிரசஸ்திகள் (புகழ்மாலைகள்) பற்றி ஆய்வு செய்துள்ளார். இத்தலைப்பு வடமொழிக்கு மட்டுமன்றி வரலாற்றுக்கும் உதவுமெனக் கூறியதுடன், இத்துறை சார்ந்த பன்முக ஆய்வுகளில் ஈடுபடுவதற்கான களங்களை அடையாளப்படுத்திய தனது பேராசிரியை சிறிமா கிருபாமுனேயை எப்போதும் பேராசிரியர் நன்றியுடன் நினைவுகூருவார். பேராசிரியர் தொடர்ந்து வடமொழி பிரசஸ்திகள், தமிழில் உள்ள மெய்க்கீர்த்திகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டு பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

பேராசிரியரின் இந்திய வரலாற்று அறிவுக்கு மிகுந்த உற்சாகமூட்டி அத்துறை சார்ந்த ஆர்வத்தை வளர்த்தெடுத்தவர் வரலாற்றுப் பேராசிரியர் ஹேமச்சந்திரராய். இந்தப் பேராசிரியப் பெருந்தகை எப்போதும் தனது நன்றிக்குரியவர் என்பார். இதனால் தனது முதலாவது நூலான 'திராவிடர் ஆதிவரலாறும் பண்பாடும்' எனும் நூலினை பேராசிரியர் ஹேமச்சந்திரராய்க்கே சமர்ப்பணம் செய்திருந்தார். அந்த வகையில் குருபக்தி கொண்டவராகவும் விளங்கிவந்துள்ளார். இதுபோல் இவருக்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கால இலங்கை வரலாற்றைப்பற்றி கற்பித்த பேராசிரியர் கே.டபிள்யூ.குணவர்த்தனா என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தான் பேராசிரியர் சிவசாமி போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவதற்கு மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியவர். இக்காலம் பற்றி ஆழமாகவும் விரிவாகவும் அறிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் நிறையவாய்ப்புகள் ஏற்பட்டன. இதனால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் பற்றி இவர் எழுதிய சில கட்டுரைகள் பிரசுரிக்கப்படாமலேயே இருந்துள்ளன.

இந்த வகையில் பேராசிரியர்.சிவசாமி எழுதிய கட்டுரைகளுள், 'போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கீழ்நாடுகளுக்கு வருதல் - ஓர் ஒப்பி

**பேராசிரியர் எப்போதும் பரபரப்புக்கு எதிரானவர். வெற்று முழக்கங்கள் அறியாதவர். எத்தருணத்திலும் நிதானத்தையும் அமைதியையும் இழக்காதவர். எப்போதும் அறிவும் தேடலும் ஆராய்ச்சியும் கொண்டவர். தன்னை முதன்மைப்படுத்தும் திறன் அற்றவர். யாவருடனும் சரி சமமாக நட்பு பேணக்கூடியவர். மனித உறவுகளை மதிப்பவர். கிராமப்பண்பை இழக்காமல் உயிர்ப்புடன் பேணி வந்தவர். ஆன்மிக நாட்டமும் இயல்பாக கொண்டவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல் நோக்கு', 'இலங்கையில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்கால நிர்வாக முறை - ஓர் ஒப்பியல் நோக்கு, 'ஒல்லாந்தர் கால தேச யாழ்ப்பாணத்தில் பொருளாதார நிலை - சில குறிப்புகள்', 'போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஈழத்தில் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை - ஓர் ஒப்பியல் நோக்கு', 'இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய சமயக்கொள்கை-ஒப்பியல் மதிப்பீடு, இலங்கையில் போர்த்துக்கேயர் கால, ஒல்லாந்தர் கால சமூகப் பண்பாட்டு நிலைகளும் விளைவுகளும்' முதலான ஆய்வுக் கட்டுரைகள் தனித்துக் குறிப்பிடப்பட வேண்டியவை. இந்தக் கால கட்டம் தொடர்பில் பேராசிரியர் எழுதிய இந்த ஆய்வுகள் மிக முக்கியமானவை. இந்தக்காலம் தொடர்பிலான ஆய்வுகள் கூட தமிழில் மிக மிகக் குறைவு. இந்த இடைவெளியைக் குறைக்க வேண்டுமென்ற காரணத்தைப் புரிந்துகொண்டு பேராசிரியர் ஆய்வாக்க மரபில் இயங்கியுள்ளார்.

1969இல் கொழும்பில் நடைபெற்ற அனைத்து ஆசியத் தொல்பொருளியல் மகாநாடு, 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு, 1981 இல் மதுரையில் நடைபெற்ற 5ஆவது உலக தமிழாராய்ச்சி மகாநாடு முதலானவற்றிலும் பேராசிரியர் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். இதைவிட பல்வேறு உள்நாட்டு / பன்னாட்டு ஆய்விதழ்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் நிறையக் கட்டுரைகள் எழுதியுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஆய்விதழின் ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார். மேலும் பல்வேறு நினைவுப் பேருரைகள் நிகழ்த்தியுள்ளார். ஆராய்ச்சி மாணவர்களுக்கும் இளைய சக ஆசிரியர்களுக்கும் ஆய்விலே ஆலோசனைகள் கூறி வழிகாட்டி வந்துள்ளார். இன்னும் சிலருக்கு தனது மொழி சார்ந்த புலமையையும் வழங்கி கைகொடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில் 'ஆராய்ச்சி' எனும் இதழ் மூலம் சமூகப் பண்பாட்டு களங்களில் புதிய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டி யாவற்றையும் ஒருங்கிணைத்துக் கொண்டிருந்தவர் பேராசிரியர் நா.வானமாமலை. இவரது தலைமையிலான ஆராய்ச்சிக்குழு தமது மார்க்சியப் பார்வையை கிராமங்களை நோக்கி நகர்த்தியது. நாட்டார் வழக்காறுகளையும் மரபுகளையும் ஆய்வுக்குள்ளாக்கி வந்தது. நா.வா என்பவர் பண்பாட்டு அரசியல் போராளியாக, கள ஆய்வாளராக இயங்கிவந்தார். இந்த பேராசிரியருடன் மிக நெருங்கிய கடிதத் தொடர்புகளை பேணிவந்தவர் பேராசிரியர் சிவசாமி அவர்கள். பேராசிரியரின் கட்டுரைகளை ஆராய்ச்சி இதழில் வெளியிட்டு தமிழகச் சூழலிலும் பேராசிரியர் சிவசாமிக்கு ஆய்வு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதில் நா.வா விருப்புறுதியுடன் இயங்கிவந்துள்ளார்.

பேராசிரியர் சாசனவியல் பற்றி பல அடிப்படையான கட்டுரைகளையும் எழுதிவந்துள்ளார். 'வடமொழி சாசனமும் தமிழ் சாசனமும்', 'சாசனவியல் என்றால் என்ன'?, 'சாசனவியலின் முக்கியத்துவம்', சாசனவியலும் இந்திய வரலாறும் ஈழத்தமிழ் சாசனங்களில் காணப்படும் இலக்கிய அம்சங்கள் அல்லது நயம் முதலான பல்வேறு கட்டுரைகளை, ஆய்வுமூலங்களை வெளிப்படுத்தியுள்ளார். இதுபோல் 'தொல்பொருளியல் ஒரு அறிமுகம்', 'தொல்பொருளியலின் இன்றியமையாமை, நல்லூரும் தொல்பொருளியலும் யாழ்ப்பாணமும் தொல்பொருளியலும்', ஈழத்துத் தொல்பொருளியலும் தமிழியலும் முதலான கட்டுரைகள் மூலம் தொல்பொருளியல் பற்றிய அடிப்படையான விளக்கங்களை முன்வைத்துள்ளார். இத்துறையில் ஆய்வுகள் பெருகவும் வழிகாட்டி வந்துள்ளார். இதைவிட 'யாழ்ப்பாணக் காசுகள்' 'தெல்லிப்பழையில் கிடைத்த மத்திய கால நாணயங்கள்' முதலான இவரது ஆய்வுகள் சிறப்பாக பேசப்படுகின்றன.

பேராசிரியரின் ஆய்வு முயற்சிகள் கட்டுரையாக்கங்கள் பல்வேறு துறை சார்ந்தவை. இவை அந்தந்த அறிவுத் துறைமரபு வழிநின்று புரிந்து கொள்ளப்படவேண்டும். குறிப்பாக தமிழ்ச்சூழலில் பேராசிரியர் ஒரு பல்துறை புலமையாளருக்கான முழுத் தகுதியுடன் இயங்கிவந்துள்ளார். இவரது நூல்களும் கட்டுரைகளும் புலமை ஆய்வாளர்களுக்குரிய பண்புகளை அடையாளப்படுத்துகின்றன. பல்கலைக்கழகத்துக்குள்ளேயும் வெளியேயும் ஆய்வுப் பண்பாடு தமிழியல் மரபில் பெரும் மடைமாற்றங்கள் உருவாகக் காரணமாகவும் இருந்துள்ளார்.


பேராசிரியர் எப்போதும் பரபரப்புக்கு எதிரானவர். வெற்று முழக்கங்கள் அறியாதவர். எத்தருணத்திலும் நிதானமும் அமைதியும் இழக்காதவர். எப்போதும் அறிவும் தேடலும் ஆராய்ச்சியும் கொண்டவர். தன்னை முதன்மைப்படுத்தும் திறன் அற்றவர். யாவருடனும் சரிசமமாக நட்புப் பேணக்கூடியவர். மனித உறவுகளை மதிப்பவர். அன்பும் நேசிப்பும் அரவணைப்பும் கொண்டவர். கிராமப் பண்பை இழக்காமல் உயிர்ப்புடன் பேணிவந்தவர். ஆன்மிக நாட்டமும் இயல்பாக கொண்டவர்.

ஒருவரின் வாழ்நாள் அறிவு ஈட்டல்களின் பதிவுகள் அவருக்குரிய புலமை மூலதனத்தை வெளிப்படுத்தும். அந்த வகையில் வளமான புலமை மூலதனத்தை ஈட்டிக்கொண்டவர் நமது பேராசிரியர். பல்கலைக்கழக ஆசிரியர் அறிவின் தோற்றுவிப்புக்கும் பரப்புகைக்கும் பணியாற்றும் புலமையாளர் என்பார்கள் பேராசிரியர் சிவசாமி அவர்கள் இக்கூற்றின் மொத்த வடிவமாக திகழ்ந்தார். தனது இறுதிக்காலம் வரை புலமைச்சூழலில் இருந்து விலகாமல் வாழ்ந்துவந்தார். பேராசிரியரின் புலமை மூலதனம் நிலைத்து நிற்கும் வரை அவர் நம்மோடு வாழ்ந்துவருவார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா III

# காலமும் கோலமும்



உமா வரதராஜன்

தமிழ் சினிமாவில் அண்மைக்காலமாக தென்படும் ஒரு தன்மை black comedy. மிகவும் தீவிர கணங்களையும் கேலியுடன் அணுகுவது. உலகத்தையே ஓர் அபத்த மேடையாகக் காண்பதும், கோமாளிகளாகத் தங்களை உணர்வதுமான ஒரு போக்கு. நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம், சூது கவ்வும், மூடர் கூடம், நேரம், ஒரு கன்னியும் 3 களவாணிகளும், ஜிகர்தண்டா,கதை-திரைக்கதை -வசனம்- இயக்கம் போன்ற படங்கள் மாமூலான தமிழ் ரசிகனைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஒரு பரீட்சை.இந்தப் படங்கள் நிச்சயமாக அவனுக்கு ஒரு நேர் கோட்டுப் பாதைப் பயணமல்ல.

'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' நாயகன் தன் கல்யாணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் நடுவில் இருக்கின்ற நிலைமையில் நண்பர்களின் ரூமிற்கு வருகிறார். நண்பர்களுடன் கிரிக்கெட் ஆடலாம் என நினைக்கிறார். ஆடும்போது பந்தை கேட்ச் பிடிக்கும் முயற்சியில் நிலை தடுமாறி, பின் மண்டை அடி பட விழுந்து விடுகின்றார்.

அவர் சந்தித்த இந்த விபத்து சுமார் ஒரு வருட சம்பவத்தை அப்படியே மறக்கச் செய்து விடுகின்றது. தான் காதலித்து, கல்யாணம் பண்ணவிருக்கும் வருங்கால மனைவி பற்றி அவருக்கு எதுவுமே ஞாபகத்தில் இல்லை. அவசர அவசரமாக, ரகசியமாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.பலனில்லை. மணமேடைக்கு ஒருவாறு அவர் அழைத்து வரப்படுகிறார். அங்கும், அதற்கு முன்னும் நடக்கும் நகைச்சுவை கூத்துகள்தான் இந்தப் படம். இந்தக் கழைக்கூத்து சற்று பிசகியிருந்தாலும் சென்னை சபாக்களில் மேடையேறும் அபத்த நகைச்சுவை நாடகம் போல் பல்லிளித்திருக்கும்.நகைச்சுவைக்கு முன்னுரிமை கொடுத்த இந்தப் படம் ஏனைய தொழில்நுட்ப அம்சங்களில் அக்கறை காட்டவில்லை.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்' என்பது மகாகவி பாரதியின் கவிதை வரி. ஆட்களைக் கடத்துவதும், கடத்தப்பட்ட நபரின் வாழ்க்கைத் தரத்துக்கேற்ப பணயத்தொகை கோருவதும் சூது கவ்வும் பட நாயகனின் வேலை. ஒரு பெரு நகரத்தின் எறும்புகள் போல் இதில் வரும் இளைஞர்களுக்கு லட்சியங்கள் என்று எவையும் இல்லை. ஒரு கட்டத்தில் பெருந்தொகைப் பணத்துக்கு ஆசைப்பட்டு நாயகனும், இவர்களும் கூட்டுச் சேருகின்றனர். நேர்மையான ஒரு மந்திரியின் தறுதலை மகனைக் கடத்த திட்டமிடுகிறார்கள். எதிர்பாராத திருப்பமாக கடத்தப்பட்ட மந்திரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







குமாரனே இந்தக் கூட்டத்துடன் இணைந்து கொள்ளுகிறான். கிடைக்கின்ற கப்பத் தொகையில் தனக்கும் பங்கு தந்தால் இந்தக் கடத்தல் நாடகத்துக்கு மிகச் சிறந்த ஒத்துழைப்பை வழங்குவேன் என்பது அவன் விதிக்கும் நிபந்தனை.

கப்பத் தொகையைப் பெற்றுக் கொண்டு நாயகனும் அவனுடைய கூட்டாளிகளும் வெற்றிகரமாகத் தப்பிவிட வேண்டும் என்ற எதிர்மறை மனநிலைக்கு ரசிகர்களை உந்தித் தள்ளுவதில் இந்தப் படம் வெற்றி கண்டிருக்கிறது.ஆனால் இது ஒரு நல்ல சமிக்ஞை அல்ல என்றே சொல்ல வேண்டும்.

சிம்புதேவனின் 'ஒரு கன்னியும் 3 களவாணிகளும்' திரைக்கதையும் ஆட்கடத்தலைப் பின்னணியாகக் கொண்டது. தமிழும், இசெபெல்லாவும் காதலர்கள். ,குடும்ப கௌரவம் பெரிதென நினைக்கும் இசெபெல்லாவின் அப்பா இந்தக் காதலைப் பிரித்து, அவளுக்கு வேறொரு பையனைத் திருமணம் செய்துவைக்க முயற்சிக்கிறார்.

மணப்பெண்ணைக் கடத்தினால் 30 இலட்சம் தருவதாக இசெபெல்லாவுடைய தந்தையின் தொழில் முறைப் போட்டியாளர் ஒருவர் தமிழிடம் கூறுகிறார். கை நழுவப் பார்க்கும் தன் காதலியை கல்யாணத்திலிருந்து மீட்பது, தன் அம்மாவின் மருத்துவச் செலவு என்ற இரு கோணத்தில் சிந்திக்கும் தமிழ் இந்தக் கடத்தலுக்கு இணங்குகின்றான். பண நெருக்கடியில் இருக்கும் நண்பர்கள் மலர், ராமானுஜம் இசக்கி, ஐசக் ஆகியோரும் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளுகின்றனர்.

கடத்தும் திட்டத்துடன் சரியாகக் காலை 8:59 மணிக்கு அவர்கள் கிளம்புகிறார்கள். ஒரு நிமிடம் தாமதமாகக் காலை 9 மணிக்கு தொடங்கினால் முடிவு என்னவாக இருந்திருக்கும் ? காலை 9.01 மணிக்கு ஆரம்பித்திருந்தால் முடிவு எவ்வாறு அமைந்திருக்கும் ? இந்த மூன்று வெவ்வேறு ஊகங்களின் அடிப்படையிலும் படம் நகர்கின்றது.

16 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த ஜெர்மனியப் படமான ரன் லோலா ரன்னின் (Run Lola Run) பாணியில் இந்தப் படத்தை சிம்புதேவன் எடுக்க முயன்றிருக்கிறார். ஆனால் அலுப்பூட்டும் காட்சிகளாலும், சுவாரஸ்யமற்ற திருப்பங்களாலும், மேடை நாடகப் பாணி வசனங்களாலும், சிரிப்பை வலிந்து பெறும் தன்மையாலும் அந்தப் படத்தின் காலடியையும் இதனால் நெருங்க முடியவில்லை. இம்சை அரசன் 23 ஆம் புலிகேசியைத் தொடர்ந்து, அறை எண் 26 இல் கடவுள், இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம், இந்தப் படம் என ஒவ்வொரு படிகளாக சிம்புதேவன் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறார்.

பணயப் பணம் பெறும் இன்னொரு முயற்சி அட்டாக் தி கேஸ் ஸ்டேஷன் (Attack the Gas Station) என்ற கொரியன் படத்துல இருந்து உருவிய சில காட்சிகளை உள்ளடக்கிய 'மூடர் கூடம்'.

முன்னறிமுகம் எதுவுமற்ற நான்கு பேர்கள் பொலிஸ் லொக் அப்பில் சந்திக்க நேர்கிறது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். எல்லோருக்கும் முன்கதை உண்டு. சமூகத்தின் மீது தீராத வெறுப்புக் கொண்டவர்கள், ஏமாற்றத்தை மட்டுமே சந்தித்தவர்கள்.வெறுமையான மனநிலை அவர்களை ஒன்று சேர்க்கிறது.

மனதில் சிறிதும் ஈரமற்ற தன் மாமாவான சீட்டு கம்பெனி முதலாளியின் வீட்டிலேயே அவர்களில் ஒருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னான வெள்ளையன் திருடத் திட்டமிடுகிறான். அவர்கள் வெளியூர் செல்லும் நேரம் பார்த்து திருட உத்தேசித்த அவர்களுக்கு ஏமாற்றம் காத்திருக்கிறது. மாமாவின் குடும்பமோ காலை 3 மணிக்குப் பதிலாக மதியம் 3 மணிக்கே தான் கிளம்புகிறார்கள் என்பது திட்டத்தைப் பாதிக்கின்றது. வேறுவழியின்றி மாமாவின் குடும்பத்தினர் வீட்டுக்காவலில் பணயக் கைதிகளாக்கப் படுகின்றனர். அந்தச் சூழல் வீட்டை 'மூடர் கூடம்' ஆக்குகின்றது. ஒருவன் மூடனா,புத்திசாலியா என்பதை அவனுடைய கைகளில் குவியும் அதிகாரம் அல்லது கை நழுவிச் செல்லும் அதிகாரம் தீர்மானிக்கின்றது போலும். 'மூடர் கூடத்தில்' நிகழ்வதும் அதுதான்.

நேரம் படத்திலும் பணம்தான் முக்கிய விடயம். நமக்கு சாதகமான நிகழ்வுகள் நடக்கும் போது நல்ல நேரம் எனவும் திருப்தியளிக்காத காரியங்களை எதிர்கொள்ளும்போது 'கெட்ட நேரம்' எனவும் சொல்லிக் கொள்கிறோம். படத்தின் நாயகன் வெற்றி திடீரென தன் வேலையை இழக்கிறான். தங்கையின் திருமணத்துக்காக வட்டி ராஜா என்ற கொடூரனிடம் வாங்கிய கடன் தொகை 50,000 ரூபாவுக்கும் ஒழுங்காக வட்டி செலுத்த முடியாத நிலை. ஒரு நாள் மாலை 5 மணிக்குள் வட்டியுடன், அசலையும் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற காலக்கெடு வட்டி ராஜாவால் விதிக்கப்படுகிறது.

அதே நாளன்று அவனுடைய காதலி வேணி தந்தையின் நெருக்குதலுக்குத் தப்பி வீட்டைவிட்டு வெளியேறி காதலனைத்தேடி வருகின்றாள். மகளைக் காணாத அப்பா சரவணன் தன் மகள் வெற்றியால் கடத்தப் பட்டதாக காவல் துறையில் புகார் செய்து விடுகிறார். மாலை 5 மணிக்குள் வேணியை தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென பொலிஸ் அதிகாரி வெற்றியிடம் போனில் மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

அதேநாளன்று, வரதட்சணையாக தனக்குத் தர ஒப்புக் கொண்ட பாக்கி 50,000 ரூபாவையும் அன்று மாலை 5 மணிக்குள்ளேயே தந்து முடித்துவிட வேண்டும் என்று வெற்றியின் மச்சான் வேறு நிபந்தனை விதிக்கிறான். அதன் பின் வெற்றி கடக்கும் அந்த சில மணி நேரங்களும் எவ்வாறு அமைந்தன என்பதுதான் இந்தப் படத்தின் கதை.




ஏமாளி மக்களின் பேராசை,மூட நம்பிக்கை என்பவைதான் 'சதுரங்க வேட்டை' நாயகனின் ஒரே மூலதனம்.

மக்களைத் தன் குறுக்குப் புத்தியாலும்,வாய் ஜாலத்தாலும் ஏமாற்றுவது குறித்து அவனுக்கு குற்ற உணர்வு எதுவும் இல்லை. இந்த முயற்சிகளில் பல தடவைகளில் அவன் ஜெயித்தாலும் கூட சில சந்தர்ப்பங்களில் மாட்டிக்கொண்டு அடி உதை படவும் தவறுவதில்லை.ஒரு கட்டத்தில் அவனுடைய கூட்டாளிகளே 'அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையன்களாக' பணத்தை சுருட்டிக் கொண்டு ஓடி விடுகின்றனர்.

தன்னிடம் அன்பு காட்டும் ஒரு பெண்ணை மணம் செய்துகொண்டு திருந்தி வாழ அவன் நினைக்கும் தருணத்தில் அவனுடைய பழைய குற்றங்கள் துரத்துகின்றன. மீண்டும் மோசடியில் இறங்க ஒரு கோஷ்டியால் நிர்ப்பந்திக்கப்படுகிறான். அவனுடையதும், அவனுடைய கர்ப்பிணி மனைவியினதும் உயிர்கள் பணயப் பொருள்களாகின்றன. இறுதியில் வில்லன்களை வீழ்த்தி பண மாயையிலிருந்து நாயகன் மீண்டு வருகின்றான்.புஜ பலமுள்ள நாயகர்களைக் கண்டு சலித்த தமிழ் ரசிகர்களுக்கு வாய்ப் பலமும், புத்திக்கூர்மையும் வாய்ந்த இந்த நாயகன் ஒரு மாற்றாகத் தெரிந்திருக்கலாம். ஆனால் இதுவும் ஹீரோயிஸத்தின் இன்னொரு வடிவம் என்பதையே இந்தப் படத்தின் காட்சிகள் புலப் படுத்துகின்றன.

அவன் பிறரை ஏமாற்றுவதும்,முட்டாளாக்குவதும் மாயாஜாலக் காட்சிகள் போல் கடந்து செல்கின்றன. ஏமாற்றும் கலை என்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல.


ஜெகதாலப் பிரதாபன் திருந்தி வாழ முயல்வது, கடந்த காலமும், செயல்களும் அவனைத் துரத்துவது, கர்ப்பவதியான பெண் மேல் அனுதாபம் கொண்டு கொலைகாரன் தன் நோக்கத்தை மாற்றிக் கொள்வது, நாயகன் அனைத்து வில்லன்களையும் வீழ்த்தி ஜெயக்கொடி நடுவது என தமிழ் சினிமாவின் தேய் வழக்குகள் இந்தப் படத்தில் நிறைய உள்ளன.

இதேபோன்று 'சிங்கத்தை கிணற்றுள் வீழ்த்திய நரியின் கதை'யமைப்பைக்கொண்ட இன்னொரு படம் 'ஜிகர்தண்டா'. முதல் காட்சியிலேயே மலர்ந்தும் மலராத பாதி மலர்போல என்ற மென்மையான, உருக்கமான பழைய பாடல் ஒன்று அதன் காட்சிரூபத்துடன் பின்னணியில் ஒலிக்கிறது. அப்போது சிலர் நுழைகின்றனர். அங்கே மதுவருந்திக் கொண்டிருக்கும் ஒருவனை எதிர்பாராத விதமாக சுட்டுத் தள்ளுகிறார்கள். 'மலர்ந்தும் மலராத' பாடல் அதன் பாட்டுக்குத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ■

**(வளரும்...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா.பாலசிங்கம்



## பனுவல் பார்வை

# நல்லிணக்கத்திற்கான ஆக்கங்கள்

"....நாங்கள் எங்களுக்கு உரியதைப் பெறவே போராடுகிறோம். எமது மக்கள் சிங்கள தேசத்தின் கொடுமைகளிலிருந்தும் விடுபட்டுச் சந்தோசமாக வாழ்வதற்கு எங்களுக்கு எமது மண் தேவை...'' (பக் 282)

இலங்கைத் தமிழினத்தின் மேற்படி கருத்து நிலை மேலோங்கி உச்சங்கொண்டுள்ளதை சென்ற காலங்களில் இலங்கையில் நடந்துள்ள வைகளிலிருந்து செம்மையாகக் கற்றுக் கொள்ள முடியும். இதற்கு நெம்புகோலாக இருந்தவை; ''தமிழர் பயங்கரவாதம்'' - ''தமிழர்கள் சதிகாரர்கள்'' என்ற சிங்கள இனத்தவரின் தமிழர் மீதான பகைமையேயாகும். இந்நெறிப்படுத்தலுக்கு அமைவாகவே தமிழருக்கு - அடிப்படை உரிமைகளைக் கூடக் கொடாக் கண்டர்களாகச் சிங்கள இனத்தவர்கள் செயல்படுகின்றனர்.




சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வந்த நிவாரணப் பொருட்களைக் கூட தமிழருக்கும் பகிர்வதில் எதிர்ப்பிருந்தது. இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற சிங்கள அப்பாக்கள்-புலி இயக்கத்துக்குப் பணம் போகின்றதென்ற முடிவெடுத்து-தமது பிள்ளைகளைத் தமிழ்க் கடைகளில் பொருட்களை வாங்கவிடமாட்டார்கள்...

தமிழர்கள் நாட்டைக் கெடுத்துச் சூறையாடுகின்றனர் என்ற கருத்தேற்றத்தைப் பேரினவாதிகள் பரம்பல் செய்கின்றனர். புகலிடத்திலும் அரசை ஆதரிப்போருக்கே தொழில் வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாக நிபந்தனையிடுகின்றனர். தமிழ்ப்பிள்ளைகளோடு சிங்களப் பிள்ளைகளைப் பெற்றோர் சேரவிடுவதில்லை. இத்தகைய தமிழ் விரோத நிலைப்பாடு இலங்கையில் வேர்கொண்டு பெருவிருட்சமாக நிற்கின்றது. இவைகளது உதைப் பாலேயே ''புத்தமென்பது ஒரு சூழ்ச்சிப் பொறி''; வஞ்சனையானது என்ற உண்மைகளை உதறித்தள்ளி எழுதுகோல் கூர்முனை எழுதிடும் கவிதைகள்-எனது முனையோ எடுத்திடும் உயிர்களை எனை நீர் குழந்தைபோல் எடுத்துச் செல்கிறீர் எனினும், உமதுயிர் எடுத்து விடுவேன் (பக்:162) என வீறாப்புப் பேசும் துப்பாக்கியைத் தூக்கி, ஆதிக்க சக்திகள் போருக்கு முன்னுரிமை கொடுத்தனர். அரசியல் சக்திகள் தமது தனிப்பட்ட நோக்கங்களுக்காக உண்மைகளைத் திரித்துக்கூறி இருசாராரையும் போருக்கு இட்டுச் செல்கின்றனர். உணவில் கூட இனத்துவ பேதம் குத்தப்பட்டது. கிழங்குக் கறி சிங்களவரின் உணவென வெறுத்தொதுக்கும் மனோநிலை இறுக்கமாகியது. இதனால் சமாதானம் கைக்குட்டை போன்றதாகி ஏளனத்துக்குரியதாகியது.

மனித வாழ்வை பழி, பாவம் என்பவைகளிலிருந்து மீட்டெடுத்துச் சமத்துவம், மனித நேயம் என்பவற்றைச் சமுதாயக் கட்டமைப்பில் ஓங்க வைக்க வேதங்கள் புகட்டிய போதங்கள் செவிடன் காதில் கேட்ட சங்கொலியாக்கின. இன்றைய மனிதன் தனக்கான புது வேதங்களை உண்டாக்கிப் போர்ச்சங்கநாதம் எழுப்பி மக்களைக் கொன்றொழிக்கிறான். நாடுகளைக் கையேந்திகளாக்குகிறான்! இவனுக்கு கௌதம புத்தரையும் அசோக சக்கரவர்த்தியையும் உச்சரிக்கத்தான் தெரியும். அவர்கள் மானுடத்துக்குச் செய்த அரும்பணிகள் தெரியாது! யாருடன் செய்த யுத்தத்தில் வென்றோமென்பதை உணராது தேசியக் கொடி கட்டி, பாற்சோறு கொடுத்து கொண்டாடும்படி அப்பாவி மக்களை வேண்டுகின்றனர். ''மொழியையும் கலாசாரத்தையும் விட்டுவிட்டுப் பார்த்தால் தமிழருக்கும் சிங்களவருக்கும் வேறு பாடில்லை'' என்ற ஒப்பீடு இருக்கும்போது, தன் முதுகு தனக்கே தெரியாததென்ற போக்கில், தான் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாதிக்கவாதிகளின் பக்கபலத்தோடு போரிட்டு நாட்டில் பிணக்காட்டை, விதவைகளை, அனாதைகளை தோற்றுவித்துள்ளனர். இந்த முப்பதாண்டு யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் உத்தரித்த கொடுமைகள் தான் எத்தனை? பிஞ்சுக் குருத்துகள் பட்டவை தான் எம்மட்டு?

வானம் பார்த்த பூமியான தமிழீழத்தில் வானிலிருந்து ஷெல்களும் நாசகாரக் குண்டுகளும் கொட்டுகின்றன. தொழில் முடக்கம், உயிராபத்து இவைகளிலிருந்து மீட்சி பெற எத்தனித்த யாழ்ப்பாணக் குடும்பத் தலைவி, நான்கு மாதக் கர்ப்பத்தை வயிற்றில் சுமந்து கொண்டு, கணவனைச்சவூதிக்கு அனுப்புகிறாள். குழந்தை பிறந்து பராயப்படுகிறது. கணவன் சொந்த மண்ணுக்கு திரும்புகிறான். தெரியாத தந்தையைக் குழந்தை கண்டு கொள்கின்றது. நெருக்கம் கொள்ளத் தயங்குகின்றது. நாளடைவில் தந்தையின் அன்பில் கட்டுண்டு போகின்றது. அத்தருணத்தில் 2 பவுனுக்கு ஒரு ஆயுதத் தரப்பு அவனை நச்சரிக்கின்றது. திடீர் சுற்றி வளைப்புகளும் விமானக் குண்டு வீச்சுகளும் ஷெல்களும் அவனுக்கு உயிராபத்தை நினைக்க வைக்கின்றன. அவன் வீட்டுக்குள் கைதியாகிறான். குடும்பத் தலைவி கணவனை மீண்டும் சவூதிக்கு அனுப்புகிறாள். குழந்தைக்குக் கிடைத்த மகிழ்ச்சி பறிக்கப்படுகிறது. சண்டைதான் அப்பாவை என்னிடமிருந்து பிரித்தது என்ற உண்மை குழந்தைக்கு ஏற்படுகிறது.

போர்க்களத்தில் போராளிகள் நீர் குடிக்கப் பெரும்பாடுபடுகின்றனர். குண்டால் முடக்கப்பட்ட போராளி தாகத்தால் தவிக்கிறான். சக போராளி அவனைத் தூக்கிச் சுமந்து, கிணற்றை நோக்கிச் செல்கிறான். அங்கு எதிரி ஆயுதத்தோடு நிற்கிறான். மூத்த சொந்தத்தால் தோண்டப்பட்ட அதில் வாரிசுகளுக்கு நீர் குடிக்க முடியாத அவல நிலை!

தமிழ்ப்பெண்ணுக்குத் தாலி புனிதமானது. ஒரு சிங்களப் பெண்ணின் கழுத்துச் சங்கிலியில் எட்டுத்தாலிகள். இவை எப்படி வந்தன? தமிழனின் செல்வத்தை போர் காவு கொண்டது!

.....இப்படியாக யுத்தத்தால் விதைக்கப்பட்ட விளைவுகள் பலதை நல்லிணக்கத்துக்கான ஆக்கங்கள் தொகுப்பு நூல் வாசகருக்குப் படையல் செய்துள்ளது.

இலக்கியத்தின் மூலமாகவும் பிளவுபட்ட சமூகங்களின் நல்லிணக்கத்துக்குப் பங்காற்ற முடியும் என்றதில் நம்பிக்கையுடைய 24; 18 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட சமத்துவ சிந்தனையாளர்கள் இந்நூலுக்கு ஆக்கப்பங்களிப்புச் செய்துள்ளனர். இவ்வெழுத்துக்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு-பிரபல ஆங்கில இலக்கியவாதி ஷியாம் செல்லத்துறையால், "WRITE TO RECONCILE" என்ற நூலில் வெளியிடப்பட்டவை. இலங்கை தேசிய சமாதானப்பேரவை, நோர்வே தூதரகம், அமெரிக்க நிலையம் என்பன இச்செயற்பாட்டைச் சாத்தியப்படுத்தின.

இவ்வெழுத்துருக்களை இலக்கியத்தின் எந்த அலகுக்குள் சேர்ப்பதென்பதில் தடுமாற்றம் இருந்திருக்கிறது போலும்! மூன்று கவிதைகளைத் தவிர வாசிப்புக்கு வேகமான உந்துதலைக் கொடுக்கும் இவ்வெழுத்துருக்களில் கட்டுரை, புனைவு வகைமைகள் கைகோர்த்து நிற்கின்றன. அந்த வகையில் இவைகளை ஆக்கங்கள் என அடையாளப்படுத்தியிருப்பது பொருத்தமாக உள்ளது. தமிழாக்கத்தை பேராசிரியர்கள் மா.செ.மூக்கையா, சோ.சந்திர சேகரன், தை.தனராஜ், மா.கருணாநிதி ஆகியோர் செய்துள்ளனர். 'கடந்த கால யுத்தத்தின் மூலம் நாம் கற்றுக்கொண்ட பாடங்களை நாம் உதாசீனப்படுத்தக் கூடாது. கூட்டாக மறதியின் வழியில் செல்லத் தீர்மானிப்போமாயின், தேசத்தின் எதிர்க்காலம் இன்னுமோர் அழிவுக்கு வழிவகுப்பதாகவே அமைந்து விடும்.'

(பக்;14)

இக்கூற்றுக்கு அமைவாக இந்நூலில் போரினால் இனங்களுக்கேற்பட்ட இன்னல்கள், பேரினவாதத்தின் பேயாட்டங்கள் பெரும்பாலும் அநுபவ ரீதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சமாதான, சகவாழ்வை விரும்புவோரை இந்நூலின் வாசிப்புப் 'போரே நீபோ' என ஓங்கி ஒலிக்க வைக்கும்.

ஆக,இத்தேசத்தின் எதிர்காலம், மற்றுமொரு அழிவுக்கு வழி வகுக்காதிருக்க, ஒவ்வொரு இலங்கையனும்-இந்நூலுக்குப் பங்களிப்புச் செய்துள்ள நயோமி முனவீர கூறியிருப்பது போல்; இனத்துவத்தினைக் கொண்ட மையம் (ஆட்சி) தொடராதிருக்க சுனாமி வேகத்தில் செயற்படவேண்டும். அதைத்தான் தாய் மண் இன்று தன் மைந்தர்களிடம் வேண்டுகின்றது! ■

---

*(37ஆம் பக்கத் தொடர்ச்சி...)*


கடப்பாட்டைக் கொண்டதாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இது கட்டமைப்புச் சார்ந்த ஒரு பிரச்சினை என்பதால் எளிதில் அகன்றுவிடாது.

**கேள்வி: சீன ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் கூட சீனர்கள் எல்லைப் பிரச்சினையைத் தோற்றுவித்தார்கள். சீனப்பிரதமர் டில்லி வந்த வேளையிலும் அதே சூழ்ச்சி முறையையே அவர்கள் கையாண்டார்கள். அதனால், சீனத் தலைவர்களை நம்புவது மிகவும் கஷ்டமான காரியம். இதனால், நாடுகளுக்கிடையில் பெருமளவு அவநம்பிக்கை தோன்றுகிறது.**

**ரனிகுச்சி:** ஆம் அது ஒரு சரியான விளக்கம் என்று நான் நினைக்கிறேன். இத்தகைய அவநம்பிக்கையுணர்வுகளை வேறு எவரினாலும் அல்ல, சீனத் தலைவர்களினாலேயே அகற்ற முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.பிரதாப்




## பனுவல் பார்வை

# கலைமுகம்

## மாற்று இலக்கியத்துக்கான தடம்

ஒரு நிலைகொள்பகம் இல்லாமல் இதழ் வெளியிடுவதென்பது தற்கொலைக்குச் சமமாகிவிட்ட நமது சூழலில் தொடர்ந்து பத்து இதழ்களை வெளிக்கொணர்வதே அளப்பெரும் சாதனையாகக் கருதப்படவேண்டிய நிலையில் தான் 'கலைமுகம்' குறித்துப் பேச வேண்டியது முக்கியமானதொன்றாக இருக்கிறது. இன்றைக்கு நமது இதழியல் சூழலில் சற்றுத் தாமதித்தேனும் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய தரமான இதழ்களில் கலைமுகமும் ஒன்றென்பது





குறிப்பிடவேண்டியதாகும். தனது நிலைகொள்பகத்தில் இருந்து 1990களில் வெளிவரத்தொடங்கிய இவ்விதழ் தற்போது செல்லும் திசையை வைத்துப் பார்க்கும் போது வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் தன்னளவில் அளப்பெரும் சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளது என்று கூறுவதில் மிகையில்லை. குறிப்பாகச் சொல்வதானால் ஒரு மாற்றிலக்கியத் தடத்தில் பயணிக்கும் போக்கினை கலைமுகத்தின் அண்மைக்கால இதழ்கள் பிரதிபலிக்கின்றன எனலாம். இதற்கான மென்துலக்கமொன்று அவ்வப்போது வெளிப்பட்டு வந்ததையும் இத்தருணத்தில் எடுத்துக்காட்டுவது பொருத்தமானதாகும். முதன்முதலாக இம்மென்துலக்கம் வெளிப்பட்டது 2000 வருடம் ஆரம்பித்தபோதாகும். அக்காலப்பகுதியில் 'கலைமுகம்' சஞ்சிகை சிறுகதைப் போட்டியொன்றை நடத்தி அதில் பரிசு பெற்ற பத்து கதைகளைச் சேர்த்து சிறுகதைச் சிறப்பிதழ் ஒன்றை வெளிக் கொணர்ந்ததுதான் இத் தடப்பயணிப்பின் தொடக்கமெனலாம். அதுவொரு பரிசுக்கதைகளின் தொகுப்பு என்ற வகையில் சுருங்கிவிடாமல் அக்காலச்சூழலை ஓரளவுக்கேனும் நேர்மையாகப் பதிவு செய்ததொரு பெறுமதிமிக்க ஆவணமாகவுமிருந்தது.

அடுத்த துலக்கம் 2003 காலப்பகுதியில் நிகழ்ந்திருந்தது. ஸ்ரீசோமிதரன் பொறுப்பாசிரியராக இருந்து வெளியிட்ட 'கலைமுகம்' இதழில் மாற்றிலக்கியத்திற்கான ஒரு தெளிவான தடத்தினை அடையாளப்படுத்திக்கொள்ள முடிந்தது. இவ்விதழில் இடம்பெற்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியின் நேர்காணல் முக்கியமானதொன்று. மேலும் இதுவரை காலமும் நேர்காணல்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படாதிருந்த 'கலைமுகம்' இதழின் போக்கில் இதுவொரு சடுதியான மாற்றமாக அமைந்திருந்தது. தவிரவும் குறித்த நேர்காணல் வெளிவந்த இதழின் அட்டைப் படமும் அதுவரை வெளிவந்த இதழ்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு சொல்லாத சேதியொன்றைச் சொல்லும்விதமாய் அமைந்திருந்ததென்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இவ்விதழைத் தொடர்ந்து கி.செல்மா எமில் பொறுப்பில் வெளிவரத் தொடங்கிய இதழ்கள் வித்தியாசமான வடிவமைப்பில் மாற்று இலக்கியத்திற்கான வலுவான தளமொன்றை உருவாக்குபவையாக அமைந்திருந்தன.

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆளும் குடும்பத்திற்கு வெளியே உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தமது சுய ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடிய அதிகாரம் தம்மிடம் இல்லையே, அது தமக்கு மறுக்கப்பட்டுள்ளதே என்று மனம் புழுங்குகிறார்கள். பயத்தின் காரணமாக விருப்பம் இன்றியே பலர் அரசாங்கத்தை ஆதரிப்பவர்களாக இருந்து வருகிறார்கள். சர்வாதிகாரிகள் பிறரின் அன்பை பெறுவதை விட அவர்களிடம் அச்சத்தை உண்டாக்குவதையே விரும்புவார்கள்.**

*(33ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அவர்களை விழிப்படைய வைத்த காரணி எதுவாக இருக்கும் என்ற தேடலை தொடங்க வேண்டியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்துத் தம் பக்கம் இழுக்கும் தந்திரம் இன்று வரை கைமேல் பலனைத் தந்தது. இதன் பயனாக ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களின் கைகளில் முழு அதிகார மும் குவியும் செயல்முறையும் நிறைவேறியது. மஸ்லோவ் (MASLOV) என்ற சிந்தனையாளர் மனித் தேவைகளின் அடுக்கமைவு (HIERARCHY OF NEEDS) என்றொரு கோட்பாட்டை எடுத்துக் கூறினார். இக்கோட்பாட்டின் படி மனிதரின் அடிப்படைத் தேவைகள் தேவைகளின் அடுக்கமைவின் கீழ்ப்படியில் உள்ளவை. இத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மனிதரின் கவனம் அடுக்கமைவின் அடுத்த உயர்படியில் உள்ள தேவைகளை நாடி உந்தித் தள்ளப்படும். உயர்படியில் உள்ள தேவைகளில் ஒன்றாக தம்மிடம் உறைந்துள்ள ஆற்றல்களை வெளிப் படுத்துதலை (SELF ACTUALIZATION) மஸ்லோவ் குறிப்பிடுவார். சுய ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு இப்போது தேவைப்படுவது அதிகாரம் (Power) ஆகும். அதிகாரத்தை நடைமுறையில் பிரயோகிக்கும் வழிமுறை இருக்கவேண்டும். ஆளும் குடும்பத்திற்கு வெளியே உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தமது சுய ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடிய அதிகாரம் தம்மிடம் இல்லையே, அது தமக்கு மறுக்கப்பட்டுள்ளதே என்று மனம் புளுங்குகிறார்கள். பயத்தின் காரணமாக விருப்பின்றியே அரசாங்கத்தை ஆதரிப்பவர்களாகப் பலர் இருந்து வந்தனர். மாக்கியவல்லியின் கூற்று ஒன்றை இங்கு நினைவிற்கொள்ளலாம். சர்வாதிகாரிகள் பிறரின் அன்பைப் பெறுவதை விட அவர்களிடம் அச்சத்தை உண்டாக்குவதையே விரும்புவார்கள் என்று அவர் கூறினார். உலகின் சர்வாதிகாரிகள் அனைவரும் பொதுவாக ஏற்றுக்கொண்ட கொள்கை இதுவாகும். ஆயினும் தாம் கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடையவர்களும் அற்ப சலுகைகளுக்காக தம் மனச்சாட்சியை விற்காதவர்களுமான உயர்ந்தோர் இருக்கிறார்கள்.

அரச நிர்வாகம் குழப்பமும் சிக்கலும் மிக்கதாக ஆகி அரச யந்திரம் செயலிழக்கும் நிலை உருவாகின்றது. இதனைத் தொடக்கி வைத்தவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரே. 1956இல் தொடங்கியது இந்தச் சீரழிவு. 1972இல் இடதுசாரித் தலைவர்கள் அலுவலர் ஆட்சியை (பியுரோகிரசி) அழித்துப் பலவீனமாக்கிவிட்டு ஆட்சியதிகாரத்தைப் பிடிக்கலாம் என எண்ணினர். திறமை, செயல்திறன் என்ற அளவுகோல்களின்படி தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படும் அலுவலர் ஆட்சியே நவீன அரசாங்க முறையின் ஆதாரமாகும். இதனால்தான் அமெரிக்காவில் ஜனாதிபதி வில்சன் அரசியல்சார்பை அடிப்படையாகக் கொண்டு நிர்வாகிகளை நியமனம் செய்யும் 'Spoils system' நல்ல நிர்வாகத்திற்கு உதவாது எனக் கூறினார். திறமைமிக்க நிர்வாகிகள் நியமிக்கப்படவேண்டும். அலுவலர் ஆட்சி என்னும் 'பியுரோகிரசியை' நாம் அழித்தோம். அதனிடத்தில் பணக்காரர் குழு ஆட்சி என்னும் முறையை (Plutocracy) புகுந்தது. இப்போது அது கள்ளர் குழு ஆட்சியாகச் (Kleptocracy) சீரழிந்து போயுள்ளது. வருமான வரித்திணைக்களத்தின் உயரதிகாரிகள் என்ன செய்தார்கள். அரசாங்கத்தின் வரிவாயைக் களவெடுத்து தம் சொத்துக்களைப் பெருக்கினார்கள். இப்போது நாம் மீள முடியாத சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டுள்ளோம். செல்லும் திசையறியாது திகைத்து நிற்கிறோம். எமது நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர் அனைவரும் இதற்குப் பொறுப்பானவர்கள். அரசியல் ஞானம் உடையவரான ரணில் விக்கிரமசிங்கவும் கட்சி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக இப்போக்கைத் தடுத்து நிறுத்தாது ஒத்து ஓடினார். எமது மக்கள் நவீன கல்வியாலும், ஞானத்தாலும் பெறக்கூடிய பயன்களைப் பெற்றுக்கொள்ளவில்லை.

17ஆவது யாப்புத் திருத்தத்தை நாம் மீண்டும் கொண்டு வரவேண்டும். அது மட்டும் போதாது. பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களாக்கி நிர்வாகத்தைச் சீரழிப்பதை விடுத்துப் பாராளுமன்றத்திற்கு வெளியில் இருந்து திறமைமிக்கவர்களை அமைச்சர்களாக்க வேண்டும். எமது நாட்டைப் போன்ற பின்தங்கிய ஒரு சமூகச் சூழலில் 'பொப்பியலிசம்' என்னும் மக்கள் வாதத்தைப் பயன்படுத்தித் திறமையற்ற வீரர்கள் அரசியலுக்குள் நுழைகிறார்கள். கிராமத்து மக்களும், சிறு தொகையினரான மத்தியதர வகுப்பும், உழைக்காமலே சலுகைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் நன்மை களையும் எப்படிச் சுருட்டிக் கொள்ளலாம் என்ற சுலப வழியைக் காட்டும் அரசியல்வாதிகளைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்கிறார்கள். அரசியல் ஞானமோ, கல்வியோ, விழுமியங்களோ இல்லாத அரசியல்வாதிகளை மக்கள் தெரிவு செய்கிறார்கள். அறியாமையில் உழலும் இந்நாட்டு மக்கள் நேற்றுவரை வானத்தில் உள்ள சந்திரனிற்குள் ஒரு முயல் பதுங்கியிருக்கிறது என்று நம்பியவர்கள் அல்லவா? மக்கள் திரள் அரசியல் எம்மைத் தவறான பாதைக்கு இழுத்துச் சென்றுவிட்டது. செல்லும் வழி இருள் சூழ்ந்தது.

சென்ற ஆண்டு ரஷ்யாவில் மக்கள் வீதியில் இறங்கி 'புட்டின் ஒரு களவாளி புட்டின் ஒரு களவாளி என்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். புட்டின் மூன்றாவது தடவையாக ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட்ட வேளை இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். புட்டினின் அரசை கள்ளர்குழு ஆட்சி என்று கூறினர். நடந்தது என்ன? புட்டின் இன்று முன்னரை விடப் பலத்தோடு உள்ளார். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான வாய்ப்பு இல்லாதபோது தேர்தல் முறை மூலமாக ஜனநாயகத்தை மீட்டெடுப்பது இலகுவான காரியமல்ல. அரசியல் சார்பு அடிப்படையில் நியமிக்கப்படும் அலுவலர் ஆட்சி ஒரு மாபியா (Mafia) குழுவாக மாற்றம் பெறும். ரஷ்யாவில் சந்தைமுறைச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தவரான கெய்டர் (Gaidar) பின்வருமாறு குறிப்பிட்டார். 'மாபியா' குழுக்களும் அலுவலர் ஆட்சியும் இணைந்து ஊழலை நடத்தும். இதன் முடிவில் தோன்றும் 'மாபியா அரசு' ரஷ்யாவின் வரலாற்றில் முன்னெப்பொழு தும் காணாத பயங்கர இராட்சத அரசாக இருக்கும்.







(63ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் பிரதானமாக எடுத்துக்காட்டப்பட வேண்டிய அம்சங்கள் சிலவுண்டு. முதலாவது மாற்று சினிமாவுக்கான அறிமுகத்தைத் தரக்கூடிய கட்டுரைகளுக்கு இடமளிக்கப்பட்டது. அடுத்து, குப்பிளான் ஐ.சண்முகன், எஸ்.கே.விக்னேஸ்வரன் போன்றோரது கனதியான தொடர் பத்திகள் இடம்பெற்றிருந்தமை. மற்றது நேர் காணல்களுக்கு முக்கியத்துவமளிக்கும் பாங்கினைத் தொடர்தல். இந்த வரிசையில் ஐயாத்துரை வரதராஜன், குந்தவை ஆகியோரது நேர் காணல்கள் வாசகர்களு க்கு புத்தனுபவம் தரும் பதிவுகளாயமைந்திருந்தன எனலாம். திசேரா, மருதம் கேதீஸ், அஷ்ரப் ஷிகாப்தீன் போன்றோரது புதுவிதமான உத்திகளில் எழுதப்பட்ட சிறுகதைகளும் கலைமுகத்தில் வெளிவந்திருந்தன. இவைதவிர, மொழிபெயர்ப்பு பிரதிகளும் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. மேலும் அரங்காற்றுகை நிகழ்வுகளைப் பற்றிய பதிவுகளும் அவ்வப்போது இடம்பெறுகின்றன. வாசிப்பிற்கு இதமளிக்கக்கூடிய கட்டுரைகளும் ஒவ்வொரு இதழிலும் பிரசுரமாகவே செய்கின்றன. 57ஆவது இதழில் வெளிவந்த 'புதிய வானம் புதிய சிறகுகள் சமகால இலங்கைப் பெண்ணியக் கவிதைகள் குறித்து சில பார்வைகள்' எனும் அனாரின் கட்டுரை இந்த வகையில் ஒரு மாதிரி எடுத்துக் காட்டாகும். 'கலைமுகம்' ஐம்பதாவது இதழ் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். வெகுசிரத்தையோடும் மிகுந்த அர்ப்பணிப்போடும் பல் வேறு அம்சங்களில் கவனம் செலுத்தி கலைத்துவம் குன்றாமல் கனதியோடு இவ்விதழ் வெளிவந்திருந்தது. இதற்காகப் பொறுப்பாசிரியர் செல்மர் எமிலைப் பாராட்டியாக வேண்டும்.

மிக நெருக்கடியான காலகட்டங்களிலும் (2006, 2009) 'கலைமுகம்' தனது தொடர் வருகையைப் பதிவு செய்திருக்கிறது. இதுவரை 58 இதழ்கள் வெளிவந்துள்ளன. அண்மைய இதழ்களில் வாசகர் கடிதங்களுக்கும் முக்கியமளித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 'கலைமுகம்' இப்போது ஒரு பரந்தளவிலான வாசிப்புச் சுற்றோட்டத்திலிருக்கிறது என்பதின் நேரடி வெளிப்பாடாக இதைக் கொள்ளலாம். இதுவும் 'கலைமுகம்' ஒரு வலுவான மாற்று இலக்கியத் தடத்தை நோக்கிப் பயணிப்பதின் அடையாளந்தான். விரைவில் வெளிவரவிருக்கும் அறுபதாவது இதழும் ஐம்பதாவது இதழைப் போலவே வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் கனதியாகவிருக்குமென வாசகர்கள் நிச்சயமாக எதிர்பார்ப்பர். அவ்வெதிர்பார்ப்பினை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கலைமுகத்திற்கு இருக்கிறது. அதை முழுநிறைவுடன் செயற்படுத்துவதில் 'கலைமுகம்' பங்காற்றுமென நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்



கந்தசுவாமி செந்தில்குமார்

## நமக்கு நாமே எதிரி

நாம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம்? எப்படி வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்? நமக்கான அடையாளங்கள் என்ன? நமது முன்னோர்கள் எப்படியான கனவுகளுடன் வாழ்க்கையை ஆரம்பித்தனர்? இன்றும் அந்தக் கனவு தொடர்கிறதா? நிம்மதியான, அமைதியான, கௌரவமான, சுயமரியாதையான வாழ்வு வாழ்ந்து, மற்றவர் நம்மைப் பார்த்து நம்பிக்கை பெறுமளவிற்கு நமது வாழ்க்கை முறை அமைந்துள்ளதா? இப்படியான கேள்விகள் நமக்குள்ளிருந்து பலவாறு தொந்தரவு செய்துகொண்டிருக்கின்றன.

ஊருக்குப்போறன், ஊரில் கலியாணம், திருவிழா என்றெல்லாம் கூறிக்கொண்டு ஊருக்குப் போய்வந்து மகிழ்வுடன் தான் வாழ்கின்றோமா? அப்படிப் போனாலும் அங்கே சுற்றம் சூழல் மனமகிழ்ச்சி தருகின்றதா? ஆறுதல் தான் தருகின்றதா? இல்லவே இல்லை. அப்படியென்றால்.... நான் கொழும்பில். அண்ணன் கனடா.அக்கா லண்டன். தம்பி ஜேர்மன். தங்கச்சி சுவிட்சர்லாந்து. மாமா மாமி, பெரியப்பா பெரியம்மா, சித்தப்பா சித்தி, மச்சான் மச்சாள், பூட்டன் பூட்டி, பாட்டன் பாட்டி, பேரன் பேர்த்தி இப்படியான உறவுகளைத்தான் நமது பிள்ளைக்கு காட்ட முடிகிறதா? நமது பிள்ளை இந்த உறவுகள் தரும் மனநெகிழ்வுடன், சந்தோஷத்துடன் வாழ முடிகின்றதா? இப்படியான வாழ்க்கை நமக்கே முழுமையாகக் கிடைக்கவில்லை, எப்படி நமது பிள்ளைக்கு இந்த வாழ்க்கை கிடைக்கப்போகின்றது? வாழ்க்கை மகிழ்ச்சியைத் தரவேண்டும். உறவுகள் வாழ்க்கையின் இருப்புக்கும் இன்பத்திற்கும் நம்பிக்கைக்கும் உயிர்ப்பாகவும் உரமாகவும் அமையவேண்டும். ஆனால் நமக்கு வாழ்க்கை எதைக் கற்றுத்தருகிறது? எதைக் கடத்துகிறது?

நாம் ஒருவகையில் போலியாகவும் பொய்யாகவும் வாழப் பழகிவிட்டோம். நமது இனத்தின், மொழியின், பண்பாட்டின் அடையாளங்களை இழந்து வாழ்வதில் கெட்டிக்காரர்கள். அதில் சாதனைகள் படைப்பவர்கள். நமது இனம் சுயத்துவம், சுயகௌரவம், சுயமரியாதை போன்ற உயரிய விழுமியப் பண்புகளைக் கொண்டுள்ளதா? நமக்கு வரலாறு தான் உள்ளதா? நமக்கென்று தனித்துவ அடையாளங்கள் ஏதாவது உண்டா? நாம் வாழும் வாழ்க்கை இந்தக் கூறுகளை வெளிப்படுத்துகின்றனவா?

நாம் இங்கே விரும்பியபடி வாழ முடியவில்லை. வாழ்வை தொலைத்துவிட்டோம் அல்லது வாழ்வை பறிகொடுத்து வருகிறோம். சாதாரணமாக நமது பிள்ளைக்கு நாம் விரும்பியபடி பெயர் சூட்ட முடியவில்லை. வைக்கும் பெயரோ வாய்க்குள் நுழையவேண்டுமாம்? பின்னர் பிள்ளை வெளிநாடு எங்கேயும் போனா வெள்ளைக்காரர்கள் உச்சரிக்க வேண்டும் எனக் கூறி மனைவி ஒரு தலைப்பட்சமாக முடிவெடுக்கிறார். நம்ம குடும்பம் வழி சந்ததியின் தொடர்ச்சியை அடையாளப்படுத்தும் பெயரிடல் கூட சாத்தியமாகிறது இல்லை. பாரம்பரியம், மரபு, வழக்குகள் என்பனவெல்லாம் வெறும் சொற்கள் தானா? அதற்கும் அப்பால் வேறொன்றுமில்லையா?

நாம் நாமாகவே இங்கு வாழ்கிறோம். யார் யாரையோ திருப்திப்படுத்தி வாழ்கின்றோம். நமது அடையாளங்களையும் இழந்து வாழ்வதைக்கூட நாம் பெருமையாக நினைக்கின்றோம். இதனையே நாம் அறமாகவும் விழுமியமாகவும் நமது பிள்ளைக்கு கற்றுக்கொடுக்கிறோம். நமது பிள்ளை இந்த அறம் விழுமியம் சார்ந்து எவ்வாறான சுய அடையாளங்களை தமது வாழ்வில் கடைப்பிடிக்கும். நமக்கு ஏதும் புரிகிறதா?

இன்று நாம் சிங்கள அரசாங்கத்தால் இழந்தவை அதிகம். ஆனால் அதைவிட நாம் ஒவ்வொரு தருணமும் கட்டிக் காக்கப்படவேண்டியவற்றை சர்வ சாதாரணமாக நாமே தொலைத்து இழந்துவருகிறோம். இந்த தொலைப்பு, இழப்பு நம்மால் தான் நடைபெறுகிறது. நாம் தான் நம்மை தொலைத்துச் சிதைத்து வாழ்ந்துவருகின்றோம். நம்ம பிள்ளைக்கு நமது குடும்பத்தின் பூட்டன் பேரன், பூட்டி பேர்த்தி முதலானோரின் பெயர் வைப்பதை சிங்கள பேரினவாத அரசு தான் தடுக்கிறதா? யோசித்துப்பார்த்தால் அங்கு சிங்களமும் இல்லை. பேரினவாதமும் இல்லை. பாரம்பரிய அடையாளங்களை, பரம்பரைப் பெயர்களை நாமே தொலைத்து வாழப் பழகிவிட்டோம். அப்படி வாழ்வதை நவீன நாகரிகம் என்றும் கூறுகிறோம். தமிழில் நமது கையொப்பத்தை இடுவதைக் கூட அநாகரிகமாகக் கருதுகிறோம். இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

நண்பர்களே! யாழ்ப்பாணம் மாதகல் மயில்வாகனப்புலவர் வழித்தோன்றலில் வரும் ஐந்தாம் தலைமுறையைச் சார்ந்தவன். இதனை நம்முடைய பிள்ளைக்கு எப்படிச் சொல்வது? அப்படிச்சொல்லத்தான் வேண்டுமா? நமது மரபுரிமையின் காலம் நமது பிள்ளைக்கு தெரியவேண்டாமா? ஒன்று மட்டும் நிச்சயம். நமக்கு எதிரி வெளியில் இல்லை. நமக்குள்ளே தான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org